உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 தை 24 சனிக்கிழமை (08-02-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:74

## நெடுந்தீவு கடலில் துயரச் சம்பவம்

# புலிகள் தமது படகைத் தகர்த்து தமக்கும் தீ வைத்து வீரச்சாவு!

## கடற்படை இழுத்துச்செல்ல முயன்றவேளை அனர்த்தம்

யாழ்ப்பாணம்,பெப்ரவரி8

**நெடுந்தீவுக்கு அருகே கடலில் ஸ்ரீலங்கா கடற்படையினரால் முற்றுகையிடப்பட்டிருந்த மீன்பிடி ட்றோலர் படகிலிருந்த விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் மூவரும் அந்தப் படகைத் தகர்த்து தம்மைத்தாமே அழித்து உயிர் துறந்திருக்கின்றனர்.**

**மீன்பிடி ட்றோலறிலிருந்த போராளிகளுடனான தொலைத் தொடர்பு துண்டிக்கப்பட்டிருந்த சமயத்தில் போராளிகள் மூவருடனும் சேர்த்து ட்றோலறைத் தங்கள் தளம் ஒன்றுக்கு கட்டி இழுத்துச் செல்ல கடற்படையினர் முயற்சித்தவேளை இந்தத் துயரம் - அனர்த்தம் - நிகழ்ந்திருக்கிறது.**

நேற்றுமுன்தினம் நண்பகல் புலிகளின் மீன்பிடி றோலர் ஒன்று நெடுந்தீவுக்கு அண்மையில் கடலட்டை பிடிப்பதில் ஈடுபட்டிருந்த சமயம் அதில் இயந்திரக் கோளாறு ஏற்பட்டது. அதிலிருந்த போராளிகள் அந்த இயந்திரத்தை திருத்துவதற்கு உதவி கேட்டிருக்கின்றனர். அதையடுத்து மன்னார் பள்ளிக்குடா கடற்பரப்பில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த கடற்புலிகளின் ஆயுதப்படகு ஒன்று அங்கு விரைந்துசென்று பழுதடைந்த மீன்பிடி றோலரை கட்டியிழுத்துவந்த சமயம் கடற்படைப் படகுகள் இவர்களைச்

(2ஆம் பக்கம் பார்க்க)

☆ ஆயுதக் கடத்தல் என்று விஷமப் பிரசாரம்!

☆ தொலைத் தொடர்பை துண்டித்தது யார்?

☆ ட்றோலரில் ஆயுதம் இருந்தது எப்படி?

☆ கண்காணிப்புக் குழுவின் அறிக்கை கவலைக்குரியது!

## கடலில் நடந்தது என்ன? பாலசிங்கம் விளக்கம்

(பேர்லினில் இருந்து ந.வித்தியாதரன்)

பேர்லின்,பெப்.8

நெடுந்தீவுக்கு அருகே கடலில் புலிகளின் படகுகள் முற்று கையிடப்பட்ட சம்பவம், அதன் விளைவாக போராளிகள் மூவர் படகைத் தகர்த்து வீரச்சாவடைந்த துயர நிகழ்வு ஆகியன தொடர்பாக விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் விளக்கமளித் திருக்கிறார்.

பரபரப்பாக நடந்து முடிந்த இச்சம்பவங்கள் தொடர்பாக பல பின்னணித் தகவல்களை பாலசிங்கம் வெளியிட்டிருக்கிறார்.

சம்பவம் பற்றிய முழு விவரத்தையும் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நேற்று பேர்லின் 'இன்ரர் கொண்டினன்' ஹோட்டலில் வைத்து 'உதயன்' பிரதிநிதிக்கு விவரித் (2ஆம் பக்கம் பார்க்க)

## பேர்லினில் பேச்சுக்கள் ஆரம்பம் கடல்சம்பவம்பற்றியும் ஆராய்வு

பேர்லின்,பெப்.8

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான ஐந்தாவது சுற்று அமைதிப் பேச்சுக்கள் ஜேர்மன் தலைநகர் பேர்லினில் உள்ள றோயல் நோவேயியன் தூதரகத்தில் ஆரம்பமாகின.

நேற்றுக் காலை 9.30 மணியளவில் இருதரப்புப் பிரதிநிதிகளும் பேச்சு மேசையில் அமர்ந்தனர். அதற்கு முன்னர் அரைமணி நேரத்திற்கு செய்தியாளர்களுக்கான படப்பிடிப்பு வைபவம் நடந்தது.

பேச்சுக்கள் முற்பகலும், பிற்பகலும் இரு அமர்வுகளாக நடந்தன. நேற்றுக் காலை நடந்த பேச்சுக்களில் நெடுந்தீவுக் கடலில் இடம்பெற்ற சம்பவம் முக்கிய இடத்தைப் பிடித்தது. நெடுந்தீவுச் சம்பவம் ஏற்படுத்திய அதிர்வு அலைகள் பேச்சு மேசையிலும் எதிரொலித்தன.

சிரான் உபகுழுவின் திட்டங்கள், நடவடிக்கைகள் தொடர்பாக நேற்றைய பேச்சுக்களில் ஆராயப்பட்டது.

சிரான் உபகுழுத் திட்டங்கள் சரிவர முன்னெடுக்கப்படவில்லை என்று விடுதலைப் புலிகள் தரப்புப் பேச்சுக் குழுவின் தலைவர் அன்ரன் பாலசிங்கம் குற்றஞ்சாட்டினார்.

சிறுவர்களைப் புலிகள் இயக்கத்தில் சேர்ப்பதான குற்றச்சாட்டுகள் பற்றிய விவகாரமும் நேற்றைய பேச்சுகளில் முக்கிய இடத்தைப் பிடித்தன.

சிறுவர்களைப் படையில் சேர்ப்பது தொடர்பான குற்றச் சாட்டுக்கள் பற்றி விடுதலைப் புலிகள் தரப்பு பதிலை நீண்ட விளக்கமாக எடுத்துரைத்தார் பாலசிங்கம். (ஐ-4)

## குடா நாட்டில் இன்று துக்கம் அனுஷ்டிக்கப்படும்

யாழ்ப்பாணம்,பெப்.8

நெடுந்தீவுக்கடலில் கடற்படையினரால் முற்றுகையிடப்பட்ட சமயம் படகோடு தங்களையும் அழித்து உயிர் துறந்த விடுதலைப்புலிகள் இயக்கப் போராளிகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் குடாநாடு முழுவதும் இன்று துக்கம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

கடற்படையினரின் அடாவடியான செயலினால் சாவைத்தழுவிய வேங்கைகளுக்கு அஞ்சலி செலுத்துவதுடன் கறுப்புக் கொடிகளைப்பறக்க விட்டு, சோக கீதம் இசைக்குமாறு யாழ் மாவட்ட மாவீரர் ஏற்பாட்டு குழு நேற்றிரவு விடுத்த ஓர் அறிக்கையில் கோரப்பட்டிருக்கிறது.

நெடுந்தீவுக்கடலில் நடந்த சம்பவம் பற்றிய தகவல் குடாநாட்டு மக்களைப் பெரும் பரபரப்புக்கு உள்ளாக்கியிருக்கிறது. (ஐ-4)

## உயிர் துறந்த புலிகளின் விவரம்



மேஜர் சுதன் | கப்டன் அன்பன் | கப்டன் பொதிகைத்தேவன்

கடற்படையினரால் முற்றுகையிடப்பட்ட சமயம் படகுடன் தங்களை அழித்து வீரச்சாவடைந்த கடற்புலிப் போராளிகள் மூவரின் பெயர் விவரங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

அவை வருமாறு:-

★ கடற்புலி மேஜர் ஆற்றலோன் அல்லது சுதன் (கிருஷ்ணசாமி சதீஸ்வரன் - சாவகச்சேரி)

★ கடற்புலி கப்டன் பொதிகைத் தேவன் (சிவஞான சுந்தரமூர்த்தி தயாபரன் - புலோலி தெற்கு)

★ கடற்புலி கப்டன் அன்பன் அல்லது ஊர்வண்ணன் (இராசையா குகதாஸ் - அரியாலை)

(ஐ)

### நெடுந்தீவுச் சம்பவம்

## பாதுகாப்பு அமைச்சர் மீது ஜனாதிபதி குற்றச்சாட்டு!

கொழும்பு,பெப்.8

நெடுந்தீவுச் சம்பவத்தில் பாதுகாப்பு அமைச்சு உரிய நேரத்தில், உரிய நடவடிக்கை மேற்கொண்டிருந்தால் மூன்று புலிகள் தற்கொலை செய்து கொண்டிருக்கமாட்டார்கள்

அவர்கள் கைதுசெய்யப்பட்டு 18 மணித்தியாலங்கள் ஆகிய பின்பும் கடற்படைத் தளபதியோ, பாதுகாப்பு அமைச்சரோ உரிய நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டனர்,

இவ்வாறு ஜனாதிபதி, பாதுகாப்பு அமைச்சருக்கு அனுப்பிய கடிதத்தில் குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்றுமுன்தினம் நெடுந்தீவுக் கடற்பரப்பில் இரண்டு படகுகளில் பயணஞ்செய்த புலிகளை சுமார் 18 மணித்தியாலங்கள் படகுகளில் தடுத்து வைத்திருந்தமை தவறான

(16ஆம் பக்கம் பார்க்க)

## நெடுந்தீவு சம்பவம் பற்றி கடற்படை நேற்று அறிக்கை

கொழும்பு,பெப்.8

நெடுந்தீவுக் கடற்பரப்பில் நேற்றுக்காலை இடம்பெற்ற சம்பவம் குறித்து இலங்கை கடற்படையின் பத்திரிகை அறிக்கை ஒன்றை இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் எஸ்.ஜி. கருணாரட்ண நேற்று வெளியிட்டார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த 6ஆம் திகதி நெடுந்தீவின் தெற்குக் கடற்பரப்பில் இலங்கைக் கடற்படையின் அதிவேகத் தாக்குதல் படகு வழக்கமான கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தது. அப்போது பிற்பகல் 2 மணியளவில் விடுதலைப் புலிகளின் படகு ஒன்று; ட்றோலர் படகொன்றைக் கட்டி இழுத்துச் செல்வதை கடற் படையினர் கண்டுகொண்டனர். விடுதலைப்

(16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்



அரசு - புலிகள் இடையிலான ஐந்தாவது சுற்றுச் சமாதானப் பேச்சுக்கள் நேற்று ஜேர்மனியத் தலைநகர் பேர்ளினில் ஆரம்பமாகின அப்பேச்சின் தொடக்கத்தில் புலிகள் தரப்பு தலைமைப் பேச்சாளர் அன்ரன் பாலசிங்கமும், அரசுதரப்பில் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸும் கைலாகு கொடுத்துக் கொண்டபோது எடுக்கப்பட்ட படம்.

# இயக்கத்தில் சேரவந்த மூவர் பெற்றோரிடம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.8

விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணைந்த 18 வயதுக்குட்பட்ட மூன்று பேர் நேற்றுப் பொற்பதி வீதியில் அமைந்துள்ள விடுதலைப்புலிகளின் அரசியல்துறை அலுவலகத்தில் வைத்து அவர்களது பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர். இவர்களில இரு சிறுவர்களும் ஒரு சிறுமியும் அடங்குவர்.

18 வயதுக்குட்பட்டவர்களை இயக்கத்தில் இணைத்துக் கொள்வதில்லை என்ற தேசியத் தலைவரின் கொள்கைக்கிணங்க இவர்கள் மூவரும் நேற்று பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டதாக விடுதலைப்புலிகளின் அரசியல்துறையினர் தெரிவித்தனர்.

யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கண்காணிப்புக்குழுவினர் யாழ்மாவட்டத் தலைவர் ஒலே புரொண்டம், ஐ.நா. சிறுவர் நிதியத்தின் யாழ்.மாவட்ட தலைமை அதிகாரி செலின் லோகோபிரட் ஆகியோரும் சமுகமளித்திருந்தனர். (ஏ-8-5)

# மண்ணெண்ணெய் ஊற்றி படகு தீயிடப்பட்டது; அதிகாரி தெரிவிப்பு!

விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர் களில் ஒருவர் ஒரு போத்தல் மண்ணெண்ணையை படகின்பின்புறம் ஊற்றித் தீ மூட்டினார்.

கண்காணிப்புக்குழு சார்பாக பேசிய அதிகாரி ஒருவர் நேற்றிரவு பி.பி.சிக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

ஒரு வேளை இலங்கைக் கடற்படைப் படகு அந்த றோலர்ப் படகை நெடுந்தீவு நோக்கி எடுத்துச் செல்ல ஆரம்பித்திருக்கலாம் என்று தோன்றுகின்றது.

படகைத் தீயிட்டுக் கொளுத்த புலிகள் முடிவுசெய்யத பிறகுதான் கண்காணிப்பாளர்கள் படகின் முன் பகுதிக்கு ஓடி கடலில் குதித்திருக்கிறார்கள் அதற்குச் சற்று நேரத்திற்குப் பின்னர் படகு வெடித்துச் சிதறியது என்று அவர் தெரிவித்தார்.(ஏ-4)

# மீசாலையில் இளம் ஆசிரியை ஓட்டோவில் கடத்தப்பட்டார்

சாவகச்சேரி,பெப்.8

மீசாலைப் பகுதியைச் சேர்ந்த இளம் ஆசிரியை ஒருவர் நேற்றுக் காலை ஓட்டோவில் வந்த இனம் தெரியாதவர்களால் கடத்திச் செல்லப் பட்டதாகக் கூறப்படுகின்றது.

பாடசாலைக்கு நேற்றுக் காலை கடமைக்குச் செல்வதற்காக இவர் வீட்டிலிருந்து புறப்பட்டு சென்றதாகவும் - மீசாலை நெல்லியடி முருகன் வீதியில் நடந்து சென்றுகொண்டிருந்த போது ஓட்டோவில் வந்த சிலர் இவரைப் பலவந்தமாகக் கடத்திச் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.(ஏ-31)

இன்றைய உதயனில் 11 ஆம் பக்கத்தில் வெளியாகியுள்ள 'கொலம்பியா: ஒரு வாழ் நாள் துயரம்' என்ற கட்டுரையின் தொடர்ச்சி 6 ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது.

# ஆலய விக்கிரகத் திருட்டுகள் தொடர்பாக 5பேர் கைது!

## சுன்னாகம் பொலீஸார் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.8

யாழ்.குடாநாட்டில் அண்மைக் காலமாக ஆலயங்களில் இடம்பெற்று வந்த திருட்டுச் சம்பங்கள் தொடர்பாக சுன்னாகம் பொலீஸார் ஐந்து பேரைக் கைது செய்துள்ளனர்.

மல்லாகம் கோணக்குளம் அகதி முகாமைச் சேர்ந்த ஒருவரும், சபாபதிப்பிள்ளை அகதி முகாமைச் சேர்ந்த இருவரும், தாவடி விறகுசாலை உரிமையாளர் ஒருவரும் மற்றும் ஆட்டோ உரிமையாளர் ஒருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து ஐம்பொன் விக்கிரகங்கள், கருங்கல் விக்கிரகங்கள் மற்றும் சிற்பங்கள் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் -

ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து மேலும் பலர் இக்கடத்தலில் ஈடுபட்டிருப்பது தெரியவந்திருப்பதாகவும் -

அடுத்த சில தினங்களில் அவர்களும் கைதுசெய்யப்படலாம் என்றும் - பொலீஸார் தெரிவித்தனர்.

சுன்னாகம் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித பெர்னாண்டோ தலைமையில் குற்றப் புலனாய்வுப் பொறுப்பதிகாரி குணவர்த்தன, பொலீஸ் சார்ஜன்ட் நாணயகார, பொலீஸ் கான்ஸடபிகள் மகேஸ்வரன், திரிமாண, லயனஸ் திஸநாயக்கா ஆகியோர் கொண்ட குழுவே இந்தக் குழுவைக் கைது செய்துள்ளது.

கடத்தப்படும் பொருள்கள் ஏ-9 பாதை வழியாகவே இடமாற்றப்படுவதாக விசாரணைகளின் போது தெரிய வந்திருப்பதாகவும் பொலீஸார் தெரிவித்தனர்.

விக்கிரகங்கள் காணாமற்போன ஆலயங்களின் நிர்வாகிகள் தம்முடன் தொடர்புகொண்டு தமது விக்கிரகங்களை அடையாளம் காட்ட முடியும் என்றும் சுன்னாகம் பொலீஸார் தெரிவித்தனர். (ஏ-9-86)

# புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுற்றிவளைத்து முற்றுகையிட்டன.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தலையிட்டு நிலைமையை சுமுகமாக்க முயன்றனர்.

சமரச முயற்சிகள் ஒருபுறம் நடந்து கொண்டிருக்க கடலில் பல மணி நேரம் முற்றுகைக்குள் இருந்த றோலர் படகுடனான தொலைத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டன என்று விடுதலைப்புலிகளின் வட்டாரங்கள் தெரிவித்தன.

அச்சமயம் போராளிகள் மூவரோடு சேர்ந்து றோலரை தங்கள் தளம் ஒன்றிற்கு கட்டியிழுத்துச் செல்ல படையினர் முயன்றனர் என்றும் -

அதனையடுத்து றோலரில் இருந்த போராளிகள் மூவரும் றோலரை எரித்து தம்மைத் தாமே அழித்துகொண்டனர் என்றும் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவம் பற்றி பேர்ளின் நோர்வே தூதரகம் தனது அறிக்கையில் தெரிவித்ததாவது:-

நேற்று 7ஆம் திகதி நெடுந்தீவுக்கு அருகில் கடற்புலிகளின் படகு ஒன்றில் நடந்த சம்பவத்தில் மூன்று பேர் உயிரிழந்த பரிதாபம் நிகழ்ந்தது.

இந்தச் சம்பவம் எப்படி ஏற்பட்டது என்பதை இலங்கை அரச தரப்புக் குழுவினரும் புலிகள் தரப்புக்குழுவினரும் கடந்த 6ஆம் திகதி கூடி ஆராய்ந்தனர்.

நிலைமையை தெளிவுபடுத்துவதற்காக இலங்கை கண்காணிப்புக்குழுவினர்மூலம் இரண்டு படகுகளையும் சோதனையிடச் செய்வது என்றும்- அதன் அடிப்படையில் பிரச்சினையைத் தீர்ப்பது என்றும் - இரு தரப்பினரும் இணங்கினர். இது பற்றி படகு ஒன்றில் இருந்த கடற்புலிகளுக்கு அறிவிப்பதற்கு புலிகளின் தளபதி முயற்சிசெய்தார். ஆனால், தொலைத்தொடர்புக் கோளாறு காரணமாக தொடர்புகொள்ள முடியாமல் போனது. அதற்கிடையில படகில் இருந்த கடற்புலிகள், படகை தீ வைத்து கொளுத்திவிட்டு தாமும் தமது உயிரை மாய்த்துக்கொண்டனர்.

எதிர் காலத்திலும் இப்படியான சம்பவங்கள் நடக்காமல் தவிப்பதற்கும் அரசு - புலிகள் ஆகிய இருசாராரும் புலிகளின் கடல் நடமாட்டம் தொடர்பாக இப்போதுள்ள நடைமுறைகளை இலங்கை கண்காணிப்புக்குழுவினரின் ஒத்துழைப்புடன் மீளாய்வு செய்வார்கள்.

தற்போது நடைபெறும் பேச்சுக்கள் திட்டமிட்டபடி, அட்டவணைப்படி தொடர்ந்து நடக்கும்.

- இப்படி நோர்வே தூதரக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.


ASIAN COMPUTER EDUCATION

உதயனின் கிரிக்கட் கொண்டாட்டம்

தினம் ஒரு பரிசு - 01

நாளை (09.02.2003) இடம்பெறவுள்ள ஆட்டத்தில் வெற்றிபெறப் போகும் அணி எது?

முழுப்பெயர் : ..............................

முகவரி : ..............................

அ. அட்டை எண்: ..............................

இக் கேள்விக்கான விடையை இதே கூப்பனில் எழுதி நாளை (09.02.2003) நண்பகல் 1மணிக்குள் தினம் ஒரு பரிசு - 01, உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபாலில் அனுப்பலாம் அல்லது உதயன் அலுவலகத்தில் உள்ள இதற்கான பெட்டியில் நேரில் சேர்க்கலாம். உடனே விரையுங்கள்.


முழு விபரத்தையும் அறிய 7ஆம் பக்கம் திருப்புக.

# கடலில் நடந்தது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தார். அவர் தெரிவித்த விவரங்கள் வருமாறு:-

நெடுந்தீவுக் கடற்பரப்பில் சோகமான - துயரமான - சம்பவம் நிகழ்ந்திருக்கின்றது. கடற்புலிகளைச் சேர்ந்த மூன்று போராளிகள் இலங்கை நேரபடி 12.40 மணியளவில் தம்மைத் தாமே அழித்து வீரச்சாவைத் தழுவிக் கொண்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் திடீரென நடந்த ஒன்றல்ல. வியாழன் அதிகாலையில் இருந்து கடற்பரப்பில் தொடர்ச்சியாக - பரபரப்பாக - நிகழ்வுகள் இடம்பெற்று, இழுபறிப்பட்டு, வெள்ளி பகல சோகமான முடிவாக அது முற்றுப் பெற்றிருக்கின்றது.

புலிகளின் மீன்பிடி றோலர் ஒன்று நெடுந்தீவுக்கு அண்மையில் மீன்பிடித்துக் கொண்டிருந்த சமயம் அதன் இயந்திரம் திடீரெனப் பழுதடைந்துவிட்டது. அதிலிருந்த போராளிகள் அந்த இயந்திரத்தை திருத்துவதற்கு உதவி கேட்டிருக்கின்றார்கள்.

அதையடுத்து மன்னார் கடற் கரையோரமாக பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த கடற்புலிகளின் ஆயுதப் படகு ஒன்று அங்கு விரைந்து அந்த றோலரைக் கட்டியிழுத்துவந்தது.

அச்சமயம் டோறா படகில் வந்த கடற்படையினர் இவர்களை வழிமறித்தனர்.

இந்தப் பிரச்சினை உடனடியாக கண்காணிப்புக் குழுவினருக்கு அறிவிக்கப்பட்டது. அவர்கள் சென்று பார்வையிடும்வரை கடலில் நீண்ட பல மணிநேரமாக இப்படகுகள் இரண்டும் தடுத்து வைக்கப்பட்டிருந்தன.

கண்காணிப்புக் குழுவினரின் வருகைக்காக இரண்டு படகுகளும் தடுத்து வைக்கப்பட்டிருந்த அந்த நீண்ட நேரத்தில் புலிகளின் ஆயுதம் பொருத்தப்பட்ட படகில் இருந்த கடற் புலிகள், கடற்படையினரின் டோறாப் படகை அண்மித்து நிலமையை விளக்க விரும்பினார்கள். அதற்காக தமது படகில் பொருத்தப்பட்டிருந்த ஆயுதத்தைக் கழட்டி மீன்பிடிப் பட கில் வைத்துவிட்டு ஆயுதம் அற்ற நிலையில் டோறாவை நெருங்கி நிலமையை எடுத்துரைத்தனர்.

இது விடயம் மேலிடத்தில் தொடர்புகொண்டு பேசப்பட வேண்டும் என்று கடற்படை டோறாப் படகில் இருந்து பதில் அளிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து இங்கு (பேர்ளினில்) எங்களுக்கு இது பற்றித் தகவல் தெரிவிக்கப்பட்டது.

படகுகளை கண்காணிப்புக் குழுவினர் சோதித்து அதில் பிரச்சினை ஏதும் இல்லை என்றால் படகுகளை மேற்கொண்டு செல்ல அனுமதிக்கும்படி இங்கிருந்து நாங்கள் தெரிவித்தோம்.

ஆனால், கடற்புலிகளின் ஆயுதப் படகில் பொருத்தப்பட்டிருந்த ஆயுதம் கழற்றப்பட்டு, மீன்பிடி றோலரில் வைக்கப்பட்டுள்ளது என்ற விவரம் கண்காணிப்புக் குழுவினருக்கு தெரிந்திருக்கவில்லை.

எனவே, மீன்பிடி றோலரில் ஆயுதங்களைக் கண்ட கண்காணிப்புக் குழுவினர் அதற்குள் ஆயுதம் உள்ளது என்று கூறியிருக்கின்றனர்.

அது 23எம்.எம் ரக சிறிய பீரங்கி. வழமையாக எமது கடற்புலிகளின் பயிற்சிப் படகுகளில் பொருத்தப்பட்டிருப்பது தான். அதைத் தான் கழட்டி மீன்பிடி றோலரில் வைத்திருந்தார்கள்.

இந்நிலையில் மீன்பிடி றோலரை கட்டி இழுக்க வந்த கடற்புலிப் படகையும் அதில் இருந்த போராளிகளையும் மேற்கொண்டு கரைக்குத் திரும்பிச் செல்ல அனுமதித்த கடற்படையினர், மீன்பிடி றோலரையும் அதில் இருந்த மூன்று போராளிகளையும் அந்த ஆயுதத்துடன் பலவந்தமாக தமது கடற்படை தளமொன்றுக்கு கொண்டு செல்ல முயன்றனர்.

அதை எமது போராளிகள் ஆட்சேபித்தனர். எம்மை பலவந்தமாக கொண்டு செல்ல முயன்றால் தாங்கள் தற்கொலை செய்வோம் என்று அவர்கள் மிரட்டியும் பார்த்தார்கள். அப்படியிருக்க அந்த றோலர் பல வந்தமாக கட்டியிழுத்து செல்லப்பட்டது.

இந்தத் தகவல் எமக்குத் தெரியவரவில்லை. ஏனென்றால் எமது கடற புலித்தளபதி சூசைக்கும் போராளிகளின் றோலருக்கும் இடையிலான தொலைத் தொடர்பு துண்டிக்கப்பட்டுவிட்டது. அதனால் அங்கு என்ன நடந்துகொண்டிருக்கிறது என்று எமக்கும் தெரிந்திருக்கவில்லை.

இன்று (வெள்ளி) காலை இங்கு பேர்ளினுக்கு கண்காணிப்புக்குழுத் தலைவர் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டார் என்னுடன் உரையாடினார். இத்தகைய துக்ககரமான சம்பவம் ஒன்று நடந்துவிட்டதாக தகவல் தெரிவித்தார். போராளிகள் தம்மைத் தாமே தீ மூட்டிப் படகையும் வெடிக்கச் செய்ததாக அவர் குறிப்பிட்டார். அதற்குப் பிறகுதான் அங்கு உண்மையில் என்ன நடந்தது என்ற விவரம் எங்களுக்குத் தெரியவந்தது.

ஆனால், சில சர்வதேச செய்தி நிறுவனங்கள் இந்தத் தகவல்களை திரித்து ஏதோ புலிகள் ஆயுதங்களைக் கடத்தியதாகவும் அது கடற் படையினரிடம் மாட்டுப்பட்டு விட்டதால் அவர்கள் தற்கொலை செய்து கொண்டு விட்டதாகவும் செய்திகளை வெளியிடுகின்றன. அத்தகைய செய்திகள் தவறானவை. நாங்கள் ஆயுதங்கள் ஏதும் கடத்தவில்லை.

தத்தளித்துக்கொண்டிருந்த எமது போராளிகளின் றோலரை காப்பாற்ற ஆயுதம் பொருத்தப்பட்ட எமது படகு விரைந்தது. அந்த ஆயுதத்தை ஆயுதக் கடத்தலாக கூற முற்படுவது அர்த்தமற்றதாகும்.

இந்தச் சம்பவம் தொடர்பாக இன்று வெள்ளி காலை நடந்த பேச்சுக்களில் நாம் கடுமையான ஆட்சேபம் தெரிவித்திருக்கிறோம். இந்தச்சம்பவத்தை தவிர்த்திருக்கலாம். இந்த விவகாரத்தை கண்காணிப்புக் குழு செம்மையாக கையாளவில்லை. என்பதே எமது நிலைப்பாடு. அத்தோடு கடற்படையும் மிக மோசமாக நடந்துகொண்டிருக்கிறது.

தாங்கள் தற்கொலை செய்வோம் என எமது போராளிகள் எச்சரித்ததையும் பொருட்படுத்தாது அவர்களைப் பலவந்தமாக இழுத்துக் கொண்டு செல்ல கடற்படை முயன்றுள்ளது. எதிரியின் கைகளில் சிக்கக்கூடாது என்பதற்காக எமது போராளிகள் வேறு வழியின்றி தம்மை தாமே அழித்துள்ளனர். தமக்குத் தாமே தீ மூட்டி படகையும் வெடிக்க வைத்து வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர். இது தான் நடந்தது.

இது குறித்து அரசு தரப்புக்கும் நோர்வே அரசுக்கும் நாம் தெரியப்படுத்தியுள்ளோம். பத்திரிகைகள், ஊடகங்கள் இது குறித்து தவறான செய்திகள் வெளியிடுவதையும் நாம் சுட்டிக் காட்டியுள்ளோம்.

இத்தகைய துரதிர்ஷ்டவசமான சம்பவங்கள் காரணமாக பேச்சுக்கள் குழம்பிவிடக்கூடாது என்பதில் நாம் உறுதியாக உள்ளோம். அதைத் தான் எமது மக்களும் எதிர் பார்க்கின்றார்கள்.

எனவே, பேச்சு தொடர்ந்து நடந்தது; நடைபெறும். என்றாலும் இத்தகைய சம்பவங்கள் தொடர்பாக எமது கடும் ஆட்சேபத்தை பேச்சு மேசையில் நாம் வெளிப்படுத்தினோம். இத்தகைய சம்பவங்கள் இனிமேலும் இடம்பெறாமல் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என நாம் வற்புறுத்தினோம். அப்படி நிகழாமல் இருப்பதற்கான வழிமுறைகளை நாம் பேச்சு மேசையில் ஆராயவிருக்கின்றோம்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விவரங்களை எதிர்பார்க்கிறோம். அங்கு களத்தில் இருந்து அவை எமக்குக் கிடைக்கவேண்டும்.

கடற்படை இந்தச் சம்பவம் தொடர்பாக சில தகவல்களை அரசுத் தரப்புக்கு மறைத்துள்ளது. இந்த றோலரை தாங்கள் பலவந்தமாக இழுத்துச் சென்றதை அவர்களுக்குக் கூறவில்லை.

### கவலைக்குரிய அறிக்கை

கண்காணிப்புக் குழு அவசரப்பட்டு ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளது. விடுதலைப் புலிகளின் மீன்பிடிப் படகில் ஆயுதம் எடுத்துச் சென்றதால் அது ஒரு யுத்த நிறுத்த மீறல் என்று அந்த அறிக்கையில் கண்காணிப்புக் குழு தெரிவித்திருக்கின்றது. அது தவறு. உண்மையில் ஆயுதம் ஏதும் கடத்தப்படவில்லை. எமது படகில் இத்தகைய ஆயுதங்கள் பொருத்தப்பட்டிருப்பது கண்காணிப்புக் குழுவுக்கு தெரிந்த விவகாரம் தான். அப்படியிருக்க இத்தகைய அறிக்கை ஒன்றைக் கண்காணிப்புக் குழு வெளியிட்டிருப்பது எமக்கு பெரும் கவலையை தருகின்றது. இது குறித்து கண்காணிப்புக் குழுத் தலைவருடன் நான் பேசவிருக்கின்றேன்.

இத்தகைய சம்பவங்களை திரிபுபடுத்தி எம்மீது அபாண்டமான குற்றச் சாட்டுக்களைச் சுமத்தி பொய்யான செய்திகளை சர்வதேச ஊடகங்கள் சில வெளியிடுவது எமது இயக்கத்துக்கு வேண்டுமென்றே பாதிப்பை ஏற்படுத்தும் நோக்கம் கொண்டதாகும். கண்காணிப்புக் குழுவினர் தவறான - பிழையான - வகையில் இச்சம்பவத்தை கையாண்டிருப்பதால் இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது என்பதே எமது நிலைப்பாடு.

சம்பந்தப்பட்ட போராளிகளுக்கும் எமது கடற்புலி தளபதிக்கும் இடையில் தொடர்ந்து பேணப்பட்ட தொலைத் தொடர்பு திடீரென துண்டிக்கப்பட்டிருக்கிறது. அதன் பின்னரே இந்த சோகச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. அது யாரால் துண்டிக்கப்பட்டது என்பதற்கு ஒரு விளக்கமும் இல்லை. இந்தப் பின்னணியில் கண்காணிப்புக் குழுவினரின் இந்த அறிக்கையை நாம் ஏற்க முடியாது. இது கண்காணிப்புக் குழுவினருக்கு எம் மால் எடுத்துரைக்கப்பட்டுள்ளது - இவ்வாறு பாலசிங்கம் கூறினார்.











## காத்திருக்கும் பரிசுகள்

இம்முறை உலகக்கிண்ணப் போட்டிகளில் பெருந்தொகை பணப் பரிசுகள் வழங்கப்படவுள்ளன. இறுதிப் போட்டியில் வெற்றிபெறும் அணிக்கு பெறுமதிவாய்ந்த கிண்ணத்துடன் 20 லட்சம் டொலர் (சுமார் 20 கோடி ரூபா) வழங்கப்படவுள்ளது.

இச்சுற்றுப்போட்டியின் ஒவ்வொரு போட்டிக்கும் வழங்கப்படவுள்ள பரிசுகள் விவரம்:

சம்பியன் - 20 கோடி ரூபா
இரண்டாமிடம் - 8 கோடி ரூபா

*அரையிறுதியில்:*

தோல்வியுற்றால் - 4 கோடி ரூபா
ஐந்தாம் இடம் - 1.5 கோடி ரூபா
ஆறாம் இடம் - 80 லட்சம் ரூபா

*சூப்பர் சிக்ஸ் (9 போட்டிகள்):*


வெற்றி பெறுவோர் - 40 இலட்சம் ரூபா
தோல்வியுற்றோர் - 20 லட்சம் ரூபா

*குழுப்போட்டி - (42 போட்டிகள்):*

வெற்றிபெறுவோர்: 10 இலட்சம் ரூபா
தோல்வியுற்றோர் - 5 இலட்சம் ரூபா.



99 உலகக் கிண்ணத்தை வென்ற மகிழ்ச்சியில் ஆஸி. வீரர்கள்




# இங்கிலாந்தின் கோரிக்கை ஐ.சி.சியினால் நிராகரிப்பு

ஸிம்பாப்வேயின் ஹராரே நகரில் 13ஆம் திகதி நடைபெறவுள்ள இங்கிலாந்து ஸிம்பாப்வே அணிகளுக்கிடையிலான போட்டியை வேறிடத்துக்கு மாற்றவேண்டுமென்ற கோரிக்கையை உலகக்கிண்ணப் போட்டிக்கான தொழில்நுட்பக் குழு நிராகரித்துள்ளது.

எதிர்வரும் 13ஆம் திகதி இப்போட்டி நடைபெறவுள்ளது. பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக இப்போட்டியை வேறிடத்துக்கு மாற்றவேண்டுமென இங்கிலாந்து - வேல்ஸ் கிரிக்கெட் சபை கோரியிருந்தது.

இதுதொடர்பாக உலகக்கிண்ணத்திற்கான தொழில்நுட்பக் குழு நேற்றுமுன்தினம் கேப்டவுனில் கூடி ஆராய்ந்தது.

சுமார் 5 மணித்தியாலங்களாக நீடித்த இக்கூட்டத்தில் இங்கிலாந்தின கோரிக்கையை நிராகரிப்பதென குழுவினர் தீர்மானித்தனர்.

ஏகமனதாக இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. இங்கிலாந்தின் கருத்துடன் தொழில்நுட்பக் குழு உடன்படவில்லை. "நாம் நியாயமான தீர்மானமொன்றை மேற்கொண்டுள்ளோம் என நம்புகின்றோம்." - இவ்வாறு ஐ.சி.சி. பிரதம நிறைவேற்று அதிகாரியும் தொழில்நுட்பக் குழு உறுப்பினருமான மல்கம் ஸ்பீட் கூறியுள்ளார்.

இங்கிலாந்து கிரிக்கெட்சபை இத்தீர்மானம் தொடர்பாக அதிருப்தி தெரிவித்துள்ளது. ஐ.சி.சியிடம் மேன்முறையீடு செய்துள்ளது. தென்னாபிரிக்க நீதிபதியான கஸ்பி சாக்ஸ் நேற்று மாலை இவ்விசாரணையை நடத்தவிருந்தார். (ம)

## அணிகளின் விவரம்

### நமீபியா

டியோன் கோட்ஸ் (தலைவர்), ஜான் பெரிபர்கர், லூயிஸ் பர்கர், சரேல் பர்கர், மோர்ன் ஹார்ச், டெனி கேல்டர், டியோர்ன் கோட்ஸ், லெனிலோ, கிரவின் மார்கட் ரோயட், ஹெறிசினிமன், ஸ்ரீபன் ஸவான் போல், பர்ட்டன் வான் ரூய், மெல்ட்வான்ஸ் கூர், ரூடி வான் வூரென், ரியான் வால்டர்ஸ்.

### நெதர்லாந்து

ரோலண்ட் லெப்ரோவ் (தலைவர்), லூக்வான் ட்ரூஸ்ட், ரியனெண்ட் ஸ்கொட், ரிப்டி லீட், பீகோ குனோபன் பர்க், நைக்ஸ்டதும், டான் வான் பன்ஜ், விக்டர் கிரண்டியா, ஆதில் ராஜா, ஹென்க் ஜான்மோல், கிளாஸ் ஜான் நூர்த்விக், எட்கார்ஷிபேர்லி, ஜேக்கப்வான், ஈஸ்மேஜர், பாஸ்ஸியன் டெரண்ட், ஜெரோயின் ஸ்மித்.

# இன்று கோலாகல ஆரம்பம்

கேப்டவுன்,பெப்.8

கிரிக்கெட் உலகக் கிண்ணப் போட்டி தென்னாபிரிக்காவில் இன்று மாலை கோலாகலமாக ஆரம்பமாகின்றது.

தென்னாபிரிக்கா, ஸிம்பாப்வே மற்றும் கென்யா ஆகிய நாடுகளில் உள்ள 15 மைதானங்களில் நாளை முதல் எதிர்வரும் மார்ச் மாதம் 23 ஆம் திகதிவரை நடைபெறவுள்ள இந்தப் போட்டிக்கான ஏற்பாடுகள் முடிவடைந்துள்ளன.

இந்தப் போட்டியைப் நேரிலும் தொலைக்காட்சியிலும் பார்ப்பதற்கு உலகெங்கிலும் உள்ள கோடிக்கணக்கான ரசிகர்கள் தயாராகவுள்ளனர். இதேநேரம் 'நேரடியாகப் போட்டியை பார்த்து ரசிப்பதற்கென பல நாடுகளில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான ரசிகர்கள் ஏற்கனவே தென்னாபிரிக்காவுக்கு வந்து சேர்ந்துள்ளனர்.

முதற்சுற்று நாளைமுதல் எதிர்வரும் மார்ச் மாதம் 4 ஆம் திகதி வரை நடைபெறும்.

ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, பாகிஸ்தான், இந்தியா, ஸிம்பாப்வே, நெதர்லாந்து மற்றும் நமீபியா ஆகிய நாடுகள் 'ஏ' பிரிவிலும் (Group A) -

தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத் தீவுகள், நியூஸிலாந்து, இலங்கை, பங்களாதேஷ், கென்யா மற்றும் கனடா ஆகியவை 'பி' பிரிவிலும் (Group B) பங்குபற்றுகின்றன.

முதலாவது ஆட்டம் நாளை கேப்டவுன் மைதானத்தில் நடைபெறும். இதில் தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத்தீவுகள் மோதும். இறுதியாட்டம் ஜோஹன்னஸ்பேர்க் மைதானத்தில் நடைபெறும். (ம-5)

# 7ஆவது உலகக்கிண்ணம்

கிரிக்கெட் உலகக் கிண்ணத்தின் முதல் மூன்று போட்டிகளையும் (1975, 1979, 1983) நடத்திய இங்கிலாந்து 16 வருடங்களின் பின்னர் மீண்டும் 7ஆவது போட்டியை நடத்தியது. லண்டனின் புகழ்பெற்ற லோட்ஸ் மைதானத்தில் இறுதியாட்டம் நடந்தது. எதிர்பார்க்காத ஆஸ்திரேலியாவும் பாகிஸ்தானும் மோதின.

இந்தத் தொடரில் தான் ஒரு சிறந்த கப்டன் என்பதை ஆஸ்திரேலியத் தலைவர் ஸ்ரீவ் வோவ் நிரூபித்துக்காட்டினார். இதற்கு முன்னர் உலகக் கிண்ணப் போட்டிகளில் சூரத்தனம் காட்டிய இலங்கை இந்தத் தொடரில் மண் கௌவியது. சுப்பர்சிக்ஸ்"க்கு முன்னான ஆட்டங்களில் கென்யா மற்றும் ஸிம்பாப்வே அணிகளை மட்டுமே இலங்கையால் வெல்ல முடிந்தது. ஏனையவர்களிடம் வாங்கிக் கட்டிக்கொண்டு நாடு திரும்பினார்கள், முன்னாள் உலகச் சம்பியன் என்ற பட்டத்துடன்.

உலகக் கிண்ணத்துக்கு அண்மை வரை ஆஸ்திரேலிய அணியின் பெறுபேறுகள் சொல்லிக் கொள்ளும்படியாக இருக்கவில்லை. சுப்பர் சிக்ஸ்"க்கு முன்னைய ஆட்டங்களிலும் ஆஸ்திரேலிய அணியின் பெறுபேறுகள் அப்படியே இருந்தன. முக்கிய அணிகளுடனான ஆட்டங்களை அது கோட்டைவிட்டது. ஸ்கொட்லண்ட், பங்களாதேஷ் போன்ற பலமேயில்லாத அணிகளையே அது வென்றது. நியூஸிலாந்து, பாகிஸ்தான், மே.இந்தியத்தீவுகள் ஆகியவற்றிடம் மண் கௌவியது. ஸ்ரீவ் வோவின் தலைமை பற்றி கடும் விமர்சனங்கள் கிளம்பின.


ஆனால், சுப்பர் சிக்ஸ்"க்கு பின்னர் மதங்கொண்ட யானை போலானது ஆஸ்திரேலியா. முதலாவது சுப்பர்சிக்ஸ் ஆட்டமான இந்தியா-ஆஸ்திரேலியா ஆட்டத்தில் வென்றது முதல் அனைத்து ஆட்டங்களையும் ஒரு கைபார்த்தது அது. வெற்றிகள், கிண்ணத்தைப் பறித்த பின்னரும் தொடர்ந்தன என்பதுதான் ஆச்சரியத்துக்குரிய உண்மை.

அப்போது நடப்புச் சம்பியன்களாக இருந்த இலங்கை அணி தான் சந்தித்த 5 ஆட்டங்களில் இரண்டை மட்டுமே வென்றது. ஏதோ கலந்து கொண்டதற்கு இரண்டையாவது வென்றோமே என்று, கென்யா, ஸிம்பாப்வே ஆகிய அணிகளை வென்றுவிட்டு நாடு திரும்பியது இலங்கை.

இந்தத் தொடரில் கிரிக்கெட் ரசிகர்களால் என்றும் மறக்க முடியாதது ஆஸ்திரேலியாவுக்கும் தென்னாபிரிக்காவுக்கும் இடையில் நடந்த ஆட்டம். அதி அற்புதமானது. ஆட்டத்தின் கடைசிப் பந்துவரை ரசிகர்களை கதிரையின் நுனியில் இருந்து அரக்கவிடாமல் செய்த அழகான ஆட்டம் அதனை ஆட்டம் என்பதைவிட கிரிக்கெட் விருந்து என்றுதான் சொல்லவேண்டும்.

அந்த ஆட்டம் பற்றிப் பார்ப்பதற்கு முன்னர் கிரிக்கெட்டில் எதுவும் எப்போதும் நடக்கலாம் என்பதற்கமைய சுப்பர்சிக்ஸ் ஆட்டங்களுக்கு முன்னரான ஆட்டங்களில் பலம் வாய்ந்த பாகிஸ்தான் அணியை கத்துக்குட்டிகளான பங்களாதேஷ் சுருட்டிமடக்கிய சுவாரஸ்யமான ஆட்டம் பற்றி சிறிது பார்க்கலாம்.

நாணயச் சுழற்சியில் வென்ற பாக். தலைவர் வஸீம் அக்ரம் பங்களாதேஷை துடுப்பெடுத்தாட அழைத்தார். குறைந்த ஓட்டங்களுக்குள் மடக்கிவிட்டு இலகுவில் வென்றுவிடலாம் என்று அவர் நினைத்தார் போலும். ஆனால், நடந்தது நேர் மாறு. பங்களாதேஷின் ஆரம்ப ஆட்டக்காரர்கள் எஸ்.ஹுசைன் மற்றும் எம்.ஹுசைன் ஆகியோர் 15 ஓவர்கள் வரை நிதானமாக நின்றாடினார்கள். ஆனால், ஓட்டங்கள் மெதுவாகவே பெறப்பட்டன. எம்.ஹுசைன் 42 பந்துகளைத் தின்று 9 ஓட்டங்களை மட்டும் பொறுக்கினார். எஸ்.ஹுசைன் 60 பந்துகளை சந்தித்து 5 பௌண்டரிகள் சகிதம் 39 ஓட்டங்களைப் பெற்றார். இருவரையும் சக்லைன் முஷ்டக் ஆட்டமிழக்கச் செய்தார். தொடர்ந்து வந்த அக்ரம் கான் மட்டும் சிறப்பாக ஆடினார். அவர் 66 பந்துகளில் 6 பௌண்டரிகளுடன் 42 ஓட்டங்களைப் பெற்றார். ஏனையவர்கள் தம் பங்குக்கு கொஞ்சம் கொஞ்சமாக ஓட்டங்களைச் சேகரித்தனர். அணியின் இரண்டாவது பெரிய ஓட்ட எண்ணிக்கையான 40 ஓட்டங்களை பாகிஸ்தான் உதிரிகளாக மனமுவந்து அளித்தது. இறுதியில் 50 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுக்கள் இழப்புக்கு பங்களாதேஷ் 223 ஓட்டங்களைப் பெற்றது. சக்லைன் முஷ்டக் ஒரு 'மெய்டின்' உட்பட 10 ஓவர்கள் வீசி 35 ஓட்டங்களை மட்டும் கொடுத்து 5 விக்கெட்டுக்களைக் கொய்தார்.



மார்க் வோவின் அற்புதமான பிடி.

பதிலுக்கு களமிறங்கிய பாகிஸ்தானுக்கு 223 ஓட்டங்கள் என்பது ஒரு பெரிய இலக்கல்ல. அதுவும் பங்களாதேஷ் பந்துவீச்சாளர்களின் முன் அது ஒரு பொருட்டே அல்ல என்றுதான் பாக். நினைத்தது. ஆனால், ஆரம்ப ஆட்டக்காரர்களாகக் களமிறங்கிய அபிட் அன்வரும், சஹீட் அப்ரி

(14ஆம் பக்கம் பார்க்க)



ஆஸி.- தென்னாபிரிக்க அணிகளிடையேயான அரையிறுதி ஆட்டத்தில் இறுதிக் கணத்தை கீழுள்ள படத்திலும் வெற்றி பெற்ற ஆஸி. வீரர்கள் மகிழ்ச்சிக் கூத்தாடுவதை மேலுள்ள படத்தில் காணலாம்.










# சேமிப்புப் பழக்கம் இருப்பின் கையேந்தும் நிலை ஏற்படாது

## மேலதிக அரசஅதிபர் கூறுகிறார்

சண்டிலிப்பாய்,பெப்.8

சேமிப்புப் பழக்கம் இருப்பின் பிறரிடம் கையேந்தும் நிலை ஏற்பட மாட்டாது.

இவ்வாறு கூறினார் யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கான சமுர்த்தி வங்கி திறப்பு விழா அண்மையில் பண்டத்தரிப்பில் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். சண்டிலிப்பாய் உதவி பிரதேச செயலர் ச.செல்வராசா தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் மேலதிக அரச அதிபர் மேலும் தெரிவித்தாவது:-

தொன்று தொட்டு எமது மக்களிடையே சேமிப்புப் பழக்கம் இருந்து வந்துள்ளது. இதனால்த்தான் கடந்த கால அனர்த்தங்களின் போதும் - இடம்பெயர்வுகளின் போதும் - மக்களால் தாக்குப் பிடிக்க முடிந்தது.

வறிய நிலையிலுள்ள மக்கள் தங்கள் அடிப்படைத் தேவைகளை இலகுவாக நிறைவேற்றிக் கொள்ள சமுர்த்தித் திட்டம் வழி வகுப்பதால் மக்கள் இதில் இணைந்து அதன் மூலம் நலன்களை பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியம்.

சமுர்த்தித் திட்டத்தை இப் பிரதேச செயலர் பிரிவில் ஏற்கனவே ஆரம்பித்து ஒரு மில்லியன் ரூபாவரை சேமிக்க முடிந்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இந்த நிதி இப் பகுதியிலுள்ள மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வதற்கு பயன்படுத்தப்பட வேண்டும் என்றார்.

சமுர்த்தி வங்கி நிதி நடவடிக்கைப் பணிப்பாளர் எஸ்.வியன்வல உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:-

15ஆயிரம் குடும்பங்களைக் கொண்ட இப்பிரதேச செயலர் பிரிவில் பெரும்பாலான குடும்பங்கள் வறிய நிலையிலேயே இருந்து வருவதாக அறிகின்றேன். சிறு சிறு குழுக்கள் இணைந்து சமுர்த்தி சங்கமாக செயற்பட்டு சிறிய தொகையைச் சேமிப்பதன் மூலம் அதிக பலன்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

வறிய மக்களின் சக்தியை ஒன்று திரட்டி வளர்ச்சியை ஏற்படுத்தவல்ல இத்திட்டம் தென்னிலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டு ஏழு வருடங்கள் பூர்த்தியாகின்றன.

தற்போது நாடு பூராகவும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட சமுர்த்தி அபிவிருத்தி வங்கிகள் செயற்பட்டு வருகின்றன. இவற்றில் 750 வங்கிகள் லாபத்தில் இயங்கிவருகின்றன. வழங்கிய கடனைத் திருப்பிப் பெறும் செயற்பாடுகளிலும் அவை திருப்திகரமாக இயங்கிவருகின்றன. - என்றார்.

வடக்கு-கிழக்கு கோட்ட பிரதிப் பணிப்பாளர் எம்நடேசராசா உரையாற்றுகையில்,

நலன்புரித் திட்டங்களால் வறுமையை முற்றாக ஒழிக்க முடியாது என்பதை உணர்ந்தே உலக நாடுகளில் - அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் - இது போன்ற திட்டங்கள் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு இத் திட்டம் நல்லதொரு பயனுள்ள திட்டமாகும். இத்திட்டத்தினால் இடம் பெயர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்டுவரும் நிவாரணப் பொருள் விநியோகம் நிறுத்தப்படும் என்ற நிலை எதுவும் இல்லை என்பதையும் தெரிவிக்க விரும்புகின்றேன்.

சமுர்த்தி வங்கியில் வைப்பிலிடப்படும் நிதி வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லப்படமாட்டாது. இங்கேயே மக்களின் தேவைகளுக்குப் பயன்படுத்தப்படும் கடன்கள் வழங்கப்படும்போது, பெற்ற கடனை முறைப்படி திருப்பிச் செலுத்த வேண்டும் என்றார். (எ-135)

## சங்கானையில் 10 பேருக்கு இழப்பீட்டுக் கொடுப்பனவு

சங்கானைப் பிரதேசசெயலர் பிரிவில் ரூ.2,500 இற்கும மேற்பட்ட மாத வருமானம் பெறும் 10 குடும்பங்களுக்கு வீடுகள் சேதமடைந்தமைக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி பத்து குடும்பங்களுக்குமுரிய கொடுப்பனவு சம்பந்தப்பட்டவர்களின் வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

வட்டு.மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் 3பேரும் அராலி தெற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் 5 பேரும் வட்டு.கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் ஒருவரும் பண்ணாகம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் ஒருவரும் இந்தக் கொடுப்பனவைப் பெற்றுள்ளனர். (எ-175)

## அடிக்கல் நடும் விழா

தேவரையாளி கதிர்காம நரசிம்மா ஆலயத்தின் புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நடும் விழா இன்று காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்துகலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் அடிக்கல்லை நட்டுவைப்பார்.

## பரதநாட்டிய அரங்கேற்றம்

சண்டிலிப்பாய்,பெப்.8

நாட்டிய கலா வித்தகர் திருமதி நந்தினி சிவராஜனின் மாணவி செல்வி சோபனா நந்தகுமார் அவர்களின் பரத நாட்டிய அரங்கேற்றம் யாழ்.வீரசிங்கம மண்டபத்தில் எதிர்வரும் 12ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

மஹாவித்துவான் பிரம்மஸ்ரீ ந.வீரமணி ஐயர் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ், கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் கலந்து கொள்வர்.

சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன், மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம், கோப்பாய் ஆசிரிய கலாசாலை நடன விரிவுரையாளர் திருமதி சாந்தினி சிவநேசன் ஆகியோர் கலந்து கொள்வர். (எ-135)

## பாராட்டுவிழா

சண்டிலிப்பாய்,பெப்.8

பண்ணாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் கலாபூஷணம் விருது பெற்ற பண்டிதர் அ.ஆறுமுகம், தரம் ஒன்றிற்குப் பதவியுயர்வு பெற்ற பண்ணாகம் கிராம அலுவலர் திருமதி திலகவதியார் சிவபாக்கியநாதன் ஆகியோருக்காக நடத்தப்படும் பாராட்டு விழா நாளைமறுதினம் திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் இ.தம்பையா தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம், முன்னாள் வலி.மேற்கு பிரதேச செயலர் கா.சந்திரராசா ஆகியோர் உட்பட மற்றும் பலர் உரையாற்றுவர். (எ-135)

## தென்னிலங்கையில் இருந்து உருளைக்கிழங்கு வருவதால் உள்ளூர் உற்பத்தியாளர் பாதிப்பு

சண்டிலிப்பாய்,பெப்.8

யாழ். குடாநாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட உருளைக்கிழங்கின் விலை வீழ்ச்சியடைந்ததை அடுத்து உற்பத்தியில் ஈடுபட்ட விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது உள்ளூரில் செய்கை பண்ணப்பட்ட உருளைக்கிழங்கு இங்குள்ள சந்தைகளில் விற்பனைக்கு வந்துள்ளது. அத்துடன் கிலோ 40ரூபா முதல் 45ரூபா வரை தரத்தைப் பொறுத்து சந்தைகளில் விற்பனை செய்யப்பட்டும் வருகின்றது.

இதேவேளை கொழும்பிலிருந்தும் நுவெரெலியா போன்ற இடங்களில் இருந்தும் தனிப்பட்ட வியாபாரிகளால் யாழ்ப்பாணத்துக்கு உருளைக் கிழங்கு அதிகளவில் கொண்டுவரப்பட்டு சந்தைப்படுத்தப்பட்டும் வருகின்றது.

உள்ளூரில் உருளைக்கிழங்கு அறுவடை செய்யப்படும்போது வெளியிடங்களிலிருந்தும், கொழும்பிலிருந்தும் உருளைக் கிழங்கை யாழ். எடுத்து வருவதை தடைசெய்ய வேண்டும் என்று வலிகாமம் பிரதேசத்திலுள்ள விவசாய சம்மேளனங்கள், யாழ்.கமநல சேவைகள் திணைக்களம், விவசாயத் திணைக்களம் ஆகியவற்றிடம் முன்னர் வேண்டுகோள் விடுத்திருந்தன.

எனினும் இதுபற்றி சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என விவசாயிகள் தரப்பில் கவலை தெரிவிக்கப்பட்டது.

## வலி.மேற்கு, தென்மேற்கு பகுதிகளில் மழை தொடர்ந்து பெய்வதால் நெல் அறுவடை இடைநிறுத்தம்

சண்டிலிப்பாய்,பெப்.8


வலி.தென்மேற்கு மற்றும் வலி. மேற்குப் பகுதிகளில் கடந்த இரு தினங்களாக தொடர்ந்து பெய்து வரும மழை காரணமாக நெல் அறு வடை செய்யும் பணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. நெல் அறுவடை செய்வதற்குத் தயாரான விவசாயிகள மழையின் காரணமாக அறுவடை செய்வதை நிறுத்தி வைத்துள்ளனர்.

கடந்த வருடமும் காலபோக நெற்செய்கை அறுவடை செய்யும் வேளையில் - இதே காலப் பகுதியில் - பெரு மழை பெய்து வெள்ளம் ஏற்பட்டதால் அறுவடைக்குத் தயாராகவிருந்த நெல் வயல்களில் நெற்கதிர்கள் நிலத்தில் சாய்ந்து பெருமளவு அழிவு ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவ்வருடமும் இதேபோல் மழையினால் பாதிப்பு ஏற்படுமோ என்று விவசாயிகள் மிகவும் கவலையடைந்துள்ளனர்.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

இணுவில் கிராம உத்தியோகத்தர்களான



லயன் தி.புரந்திரராசன்,
க.இரவீந்திரன் ஆகியோர் கிராம உத்தியோகத்தர் தரம் I பதவி உயர்வு அடைந்ததையிட்டு பாராட்டி பல்லாண்டு காலம் வாழவாழ்த்துகின்றோம்.



லயன் தி.புரந்திரராசன்

திரு.க.இரவீந்திரன்

S.செல்வரத்தினம் (குடும்பம்) க.கண்ணபிரான் (குடும்பம்)
தா.குமாரகுலசிங்கம் (குடும்பம்) S.வேலுப்பிள்ளை (குடும்பம்)

(14248)

## பாராட்டுகிறோம்

எமது குடும்பத் தலைவர் முருகேசு மாணிக்கம் அவர்களைக் காணவில்லையென 07.02.2003 உதயன் பத்திரிகையில் பிரசுரித்திருந்தோம். எமது வேண்டுகோளை ஏற்று தகவல் தந்த சங்கானை மேற்கு வடலியடைப்பைச் சேர்ந்த வியாபாரியான இராசையா துரைசிங்கம் அவர்களைப் பாராட்டுவதோடு, அவர் செய்த உதவிக்கும் நன்றி கூறுகின்றோம்.

பண்டத்தரிப்பு (14253) - முருகேசு மாணிக்கம் குடும்பத்தினர்.


## இலக்கிய நெஞ்சங்களில் அமரர் 'கசின்'

ஈழத்து இலக்கியப் பரப்பில் மூன்று தசாப்தங்களாக எழுதிவந்த மூத்த எழுத்தாளர் 'கசின்' என்றழைக்கப்பட்ட அமரர் க.சிவகுருநாதன். இலக்கியவாதிகளின் எந்தப் போக்குகளிலும் சிக்காது 'தனி'ப் போக்குடன் தனித்துவமான இலக்கியம் படைத்து வந்தவர் 'கசின்'.

அவரது சிறுகதைகள், நாவல்கள் பல ஆண்டுகளுக்கு முன்னர் எழு

### நீத்தார் நயப்புரை

தப்பட்டிருந்தாலும் அவை இந்த இருபத்தோராம் நூற்றாண்டுக்கும் பொருத்தமானவையாக விளங்குவது அவரது எழுத்தாற்றலின் மகிமையாகும். காத்திரமான பல விடயங்களைக் கிண்டலோடு நகைச்சுவையாக எடுத்துக் கூறுவதில் அவர் வல்லவர். குமாரி இரஞ்சிதம், 'கசின்' சிறுகதைகள் ஆகியன இதனை நிரூபிக்கின்றன.

அமரர் கசினின் எழுத்துக்கள் வாசகர்களைச் சிந்திக்க வைப்பன. சொல் வன்மைகளையும், கருத்தாழமும் மிக்க அவரது படைப்புக்கள் உயிரோட்டம் வாய்ந்தவை.

பல தடவைகள் வாசிக்கவைக்கும் வகையில், அவரது சிறுகதைகள் தனித்துவம் வாய்ந்தன. மறுமலர்ச்சி, ஈழகேசரி காலங்களையும் கடந்து இன்றுவரை கசினின் எழுத்துக்கள் பிரகாசிக்கின்றன. வளரும் எழுத்தாளர்களைத் தட்டிக் கொடுத்து ஊக்கமளிப்பதில் அவர் தயங்கியதில்லை.

மறுமலர்ச்சிக் கதைகள், ஈழகேசரிக் கதைகள் அக்காலகட்டத்தைப்



பிரதிபலிக்கின்றன. அக்கால மக்களின் சமூக, கலாசார விழுமியங்களை அறிந்துகொள்ளவும், வருங்கால சமுதாயத்துக்கு விழிப்புணர்வை ஊட்டுவனவாகவும் அவரது சிறுகதைகள் விளங்குகின்றன.

அக்காலத்துக்கு மட்டுமல்லாது எக்காலத்துக்கும் பொருத்தமான இலக்கிய மேதை கலாபூஷணம் கசினின் மறைவு தமிழ்கூறும் நல்லுலகுக்கே ஈடுசெய்யமுடியாத இழப்பாகும். அமரர் 'கசின்' இலக்கிய நெஞ்சங்கள் அனைத்திலும் என்றும் வாழ்வார்.

- எஸ்.கே.ஜெயக்குமார்.

(கசினின் 31 ஆம் நாள் நினைவுதினம் எதிர்வரும் 12 ஆம் திகதி ஆகும். அதனையொட்டி இந்த ஆக்கம் வெளியிடப்பட்டுள்ளது.)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கலைப்பீடம்

**கலைப்பீடப் பரீட்சைகள் 2002/2003**

கலைப்பீட மற்றும் இராமநாதன் நுண்கலைக்கழக மாணவர்களின் முதலாம் அரையாண்டுப் பரீட்சைகள் யாவும் பின்வரும் ஒழுங்கில் ஆரம்பமாகின்றன.

1. மூன்றாம் வருட முதலாம் அரையாண்டு - 10.02.2003
2. இரண்டாம் வருட முதலாம் அரையாண்டு
   நான்காம் வருட முதலாம் அரையாண்டு - 24.02.2003
3. இராமநாதன் நுண்கலைக்கழக இரண்டாம் வருட முதலாம் அரையாண்டு - 10.02.2003
   (இசை, நடனத்தை ஒரு பாட அலகாக தோற்றும் 2ஆம் வருட கலைப்பீட மாணவர்களுக்கும்)
4. இராமநாதன் நுண்கலைக்கழக மூன்றாம் வருட முதலாம் அரையாண்டு - 13.02.2003
   (இசை, நடனத்தை ஒரு பாட அலகாக தோற்றும் 3ஆம் வருட கலைப்பீட மாணவர்களுக்கும்)
5. இராமநாதன் நுண்கலைக்கழக நான்காம் வருட முதலாம் அரையாண்டு - 14.02.2003
   (சித்திரமும் வடிவமைப்பும் மட்டும்)

*குறிப்பு : 10.02.2003 ஆம் திகதி ஆரம்பமாகும் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இன்று (08.02.2003) சனிக்கிழமையும் வழங்கப்படுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

*07.02.2003* (சி-26425) - பதிவாளர்.


## மரண அறிவித்தல்கள்

### யேசுதாசன் றொசானி

கொழும்புத்துறை, ஆனந்தன்வடலியைச் சேர்ந்த யேசுதாசன் றொசானி அவர்கள் 04.02.2003 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் ஜேசுதாசன் (மடுராணி) - புஸ்பலீலா (கிளி) தம்பதிகளின் அன்பு மகளும் அனுஸ்ரஸ், அமலஸ் (புனித பத்திரிசியார் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

05.02.2003 புதன்கிழமை நடைபெறவிருந்த அன்னாரின் நல்லடக்கம் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டது. அன்னாரது பூதவுடல் இன்று (08.02.2003) சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலியின் பின்னர் புனித மரியாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ம.யேசுதாசன்
(மடுராணி - தந்தை)

*சென்மேரிஸ் 1ஆம் ஒழுங்கை,*
*கொழும்புத்துறை.*
(14247)

### திருமதி சிவலிங்கம் இரத்தினம்

*(இரத்தினேஸ்வரி - ஓய்வுபெற்ற நெசவு ஆசிரியர்)*

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவலிங்கம் இரத்தினம் அவர்கள் (06.02.2003) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் மூ.சிவலிங்கம் (ஓய்வுபெற்ற கிராமசேவையாளர்) அவர்களின் அன்பு மனைவியும் கலைவாணி(பிரான்ஸ்), முருகானந்தன்(பிரான்ஸ்), சரவணபவன் (விவசாயத்திணைக்களம் கொழும்பு), காலஞ்சென்ற கலைச்செல்வி ஆகியோரின் அன்புத் தாயாரும் கணேசலிங்கத்தின் (பிரான்ஸ்) அன்பு மாமியாரும் அனுஜன், கஜானி, நிலானி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள்பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*காரைக்கால் வீதி,*
*இணுவில் கிழக்கு,*
*இணுவில்.*
(14237)

தகவல்:
மூ.சிவலிங்கம்
(கணவர் - ஓய்வுபெற்ற கிராம சேவகர்)

உதயன்

## அமெரிக்கா குழப்புகிறது!

இந்த நாட்டில் போருக்கு நிரந்தர ஓய்வுகொடுத்து இனப்பிரச்சினை பேச்சுகள்மூலம் தீர்க்கப்படவேண்டும்; நிலையான அமைதியும் சமாதானமும் ஏற்படுத்தப்படவேண்டும் என்று உலகின் பெரும் வல்லரசான அமெரிக்கா உண்மையில் மனதார விரும்புகிறதா?

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அஷ்லி வில்ஸ் அவ்வப்போது உதிர்த்துவந்த "வாய்முத்துக்கள்" இந்நாட்டு மக்களிடையே குறிப்பாக தமிழ்மககளிடையே பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தி வந்தன.

அமெரிக்காவிலிருந்து இலங்கைக்கு வந்துபோன அரசியல் பெரும்புள்ளிகள் பலரும் வெளியிட்ட கருத்துக்களும் மக்களுக்கு ஏற்கனவே இருந்த சந்தேகத்துக்குத் தூபம்போட்டன.

இப்போது அந்தச் சந்தேகம் வெகுவாக வலுத்துவிட்டது. காரணம், இப்போது இலங்கைக்கு விஜயம் செய்துள்ள அமெரிக்க அரசின் தென்னாசியப் பணிப்பாளர் டேவிட் குட், யாழ்ப்பாணத்தில் நடந்த ஒரு கருத்தரங்கில் தூக்கிப்போட்ட ஒரு கேள்விதான்.

ஆயுதங்களைக் கைவிடுவதற்கு புலிகள் இப்போது தயாரா என்று டேவிட் குட் கேள்வி எழுப்பினார். கருத்தரங்கில் கலந்துகொண்டவர்கள் கொதித்தெழுந்தார்கள். கேள்வி எழுப்பியவரை வாயடைக்கச் செய்யும் விதத்தில் மறுத்தானாக விளக்கம் கொடுத்தார்கள். அது வேறு விடயம்.

"அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெற்றுவரும் சமாதானப் பேச்சுக்களை அமெரிக்கா மிகவும் உன்னிப்பாகவும் விழிப்பாகவும் அவதானித்துக்கொண்டிருக்கிறது.

"புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்பு இங்கே நிலைமைகள் எவ்வாறு உள்ளன? மக்களின் வாழ்க்கையில் என்னென்ன மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இவற்றையெல்லாம் நேரடியாக அவதானித்துச் செல்லவே இங்கு வந்தேன்" என்று டேவிட் குட் தமது வருகையின் நோக்கத்தை எடுத்துக் கூறினார்.

நிலைமைகளையும் மக்களின் வாழ்க்கை நிலை மாற்றங்களையும் கண்டறிய வந்தவர் அவற்றைப் பார்த்தும் கேட்டும் அறிந்துவிட்டுப் போகவேண்டியது தானே!

ஆயுதங்களைத் தொடர்ந்து வைத்திருப்பார்களா? அல்லது அவறறைக் கைவிடுவார்களா? என்ற கேள்வி என்ன வேண்டிக் கிடக்கிறது? அதுவும் அரசு - புலிகள் பேச்சுக்கள் முன்னேற்றகரமாக நடந்துகொண்டிருக்கும் இவ்வேளையும் இந்தக் கேள்வியை எழுப்ப வேண்டியது அவசியமா?

யாழ்.பாதுகாப்பு வலயங்களிலுள்ள வீடுகளில் அவற்றின் சொந்தக்காரர்களை மீள்குடியமர வழிசெய்யும் விதத்தில் படையினர் அங்கிருந்து வெளியேறுவதற்கு புலிகள் ஆயுதங்களைக் கையளிக்க வேண்டும் என்று யாழ்.கட்டளைத் தளபதி சரத் பொன்சேகா ஆலோசனை கூறும் விதத்தில் நிபந்தனை விதித்ததால் சமாதானப் பேச்சுக்களே அல்லாடிப் போகுமளவிற்கு பிரச்சினை எழுந்தது.

அந்தத் துர்ப்பாக்கிய நிலையை மீண்டும் ஏற்படுத்த விரும்புகிறாரா அமெரிக்க அண்ணர் குட்?

ஆயுதங்களைக் கைவிடுமாறு புலிகளை அரசு கோருவதற்கு இது தருணம் அல்ல; பிரச்சினைக்குப் பேச்சுக்களில் முடிவான தீர்வுகண்ட பின்னர்தான் அப்படிக் கோரலாம் என்று அரசுப் பேச்சாளரும், சமாதானப் பேச்சுகளில் அரசுத் தரப்புக் குழுத் தலைவருமான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் பல தடவைகள் பகிரங்கமாகக் கூறிவிட்டார்.

அவர் மட்டுமா? பிரதமர் ரணில் விக்கிரமசிங்ககூட ஆயுதக் கையளிப்புக் கோரிக்கை இப்போதைக்கு இல்லை என்று திட்டவட்டமாக எடுத்துக் கூறிவிட்டார். ஜனாதிபதிக்கும் அதைத் தெரிவித்துவிட்டார். அதனால் ஜனாதிபதிகூட ஆயுதக் களைவு பற்றி பேசுவதை நிறுத்திவிட்டார். ஆனால், அமெரிக்கா நிறுத்தத் தயாராக இல்லை என்பதையே டேவிட் குட்டின் கேள்வி தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

சமாதானப் பேச்சுகளுக்கு முழு ஆதரவு அளிப்பதாகக் கூறிக்கொண்டு பெரும்பாலும் அவற்றைக் குழப்பும் வகையிலான கருத்துக்களையே அமெரிக்க அரசியல் தலைவர்கள் கூறிவருகிறார்கள்.

இது அமெரிக்காவின் இரத்தத்தோடு ஊறிய ஒரு பண்பை துலாம்பரமாகக் காட்டுகிறது. அதாவது மத்திய கிழக்கானாலும் சரி, தெற்காசியாவானாலும் சரி, தென்னாபிரிக்காவானாலும் சரி உலகில் எங்கும் குழப்பம் நடக்கவேண்டும். அதில் தனது மூக்கை நுழைத்து தன் "சூப்பர் பவர்" மேலாதிக்கத்தைக் காட்டி சுய ஆதாயம் பெறவேண்டும் என்பதிலேயே அமெரிக்கா முனைப்பாக இருக்கிறது. முன்னர் ஆப்கானிஸ்தான், இப்போது ஈராக், அடுத்து இலங்கையிலா அமெரிக்காவின் கண்?

# 10ஆயிரம் பட்டதாரிகளுக்கு வருட இறுதிக்குள் நியமனம்

## பிரதமர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் முடிவு

கொழும்பு,பெப்.8

வேலையற்றிருக்கும் சுமார் 10ஆயிரம் பட்டதாரிகளுக்கு இவ்வருட இறுதிக்குள் வேலைவாய்ப்பு வழங்க அரசு தீர்மானித்துள்ளது.

வாழ்க்கைச் செலவைக் குறைப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நேற்றுமுன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அலரிமாளிகையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்திலேயே பட்டதாரிகளின் வேலையில்லாப் பிரச்சினை தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டதுடன், வேலைவாய்ப்புக் குறித்தும் முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

முக்கிய அமைச்சர்கள் பலரும் கலந்துகொண்ட இந்தக் கூட்டத்தில் நாடளாவிய ரீதியில் சுமார் 40 ஆயிரம் இளைஞர்கள் வேலையற்றிருக்கின்றார்கள் என்றும் - அவர்களுக்கு வேலைவாய்ப்பளிக்க வேண்டிய நிலையில் அரசு உள்ளது என்றும் - சுட்டிக்காட்டப்பட்டது.

இதனையடுத்து - 20 ஆயிரம் இளைஞர்களுக்கு வங்கிகளில் வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பது என்றும் -

அதேபோல், 10 ஆயிரம் பட்டதாரிகளுக்கு இந்த ஆண்டில் அரச நியமனங்களை வழங்குவது என்றும் -

இவற்றின்மூலம் நாட்டிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தை ஓரளவு குறைத்துக்கொள்ளலாம் என்றும் - தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை - தனியார், அரசதுறைசார் ஊழியர்களின் சம்பளங்களை அதிகரிப்பது சம்பந்தமாகவும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது. (எ-12)

# ஜி.ரி.இசற் தனது பணிகளை கிளிநொச்சிக்கும் விஸ்தரிக்கும்

## நிறுவன அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம்,பெப்.8

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் (ஜி.ரி.இசற்) புனரமைப்பு மற்றும் அபிவிருத்திப் பணிகள் இநத வருடம்முதல் கிளிநொச்சி மாவட்டத்துக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளன என அந்த நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

போரினால் பெரும் அழிவுகளைச் சந்தித்துள்ள கிளிநொச்சிப் பகுதிப் பாடசாலைகள், அகதிமுகாம்கள் மற்றும் பொது இடங்களில் எமது நிறுவனத்தினால் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த வருடம்முதல் எமது நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படவுள்ள புனரமைப்பு அபிவிருத்திப் பணிகள் அனைத்தும் 'சிரான்' அமைப்பின ஊடாகவே முன்னெடுக்கப்படவுள்ளன - என்று அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இதற்கிடையில் - ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினால் கடந்த வருடம் குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்களைப் பார்வையிட்டு, அவற்றை மதிப்பீடு செய்வதற்கென நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் குழுவொன்று நாளை ஞாயிறுக்கிழமை யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளது.

ஜேர்மனியிலிருந்து நேற்றுமுன்தினம் கொழும்புக்கு வந்த இந்தக் குழுவினர் நாளை இங்கு வருகைதருவர்.

எதிர்வரும் 16 ஆம் திகதிவரை இங்கு தங்கியிருக்கும் இந்தக்குழுவினர் ஜி.ரி.இசற் நிறுவனத்தினால் கடந்த வருடம் குடாநாட்டில் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்களைப் பார்வையிடுவர்.

(எ-4)

# தோட்டத் தொழிலாளர்களுக்கு குறைந்த விலையில் அரிசிமா

கொழும்பு,பெப்.8

கோதுமை மா விலை உயர்வு காரணமாக அதை வாங்க முடியாமல் கஷ்டப்படும் தோட்டத்தொழிலாளர்களுக்குக் குறைந்த விலையில் அரிசி மாவைக் கொடுக்கும் திட்டம் ஒன்று கொண்டு வரப்பட இருக்கிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது அமைச்சர்களுக்கு இதைத் தெரிவித்துள்ளார்.

பிரதமர் தனது உத்தியோகபூர்வ இல்லமான அலரிமாளிகைக்கு அமைச்சர்களை நேற்றுமுன்தினம் வரவழைதது அவர்களுடன் நான்கு மணி நேரம் கலந்தாலோசனை நடத்தினார். அவர்களுக்கு பல்வேறு விடயங்கள் பற்றி விளக்கமும் அவர் அளித்தார்.

வாழ்க்கைச் செலவைக் குறைத்தல், தொழில்வாய்ப்புகளை ஏற்படுத்துதல், சுயதொழில் முயற்சிகளை ஊக்குவித்தல், பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துதல் தொடர்பாக இவ்வாண்டில் பல திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என்று அமைச்சர்களுக்குப் பிரதமர் சொன்னார். திட்டங்கள் பற்றி விளக்கங்களும் அளித்தார்.

அரசு - புலிகள் சமாதான உடன்படிக்கையின்மூலம் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் தொடர்பாகவும், தொடர்ந்தும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகள் தொடர்பாகவும் பிரதமர் விளக்கமளித்தார்.

அத்தியாவசிய உணவுப்பொருள்களின் விலை அதிகரிப்பால பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மக்கள் கேட்கும் கேள்விக்குப் பதில் அளிக்க முடியாமல் இருக்கிறது என்று அமைச்சர்கள் பலரும் பிரதமருக்கு எடுத்துக் கூறினர்.

கோதுமை மாவின் விலை அதிகரிப்பால் மலையகப் பகுதி மக்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் பிரதமரிடம் அமைச்சர்கள் சுட்டிக்காட்டினர்.

கோதுமை மாவின் விலை அதிகரிப்புப் பற்றிப் பிரதமர் குறிப்பிடுகையில்:-

முன்னைய அரசு கோதுமை விடயத்தில் பிறிமா நிறுவனத்துக்கு வழங்கியுள்ள ஏகபோக உரிமையால் வந்தவினை இது என்றார்.

உணவுப் பொருளகளுக்கான 'வற்' வரியை நீக்குவது தொடாபாக மீள்பரிசீலனை செய்கின்றோம்.

மலையகத்தில் கோதுமை மா பாவனைக்குப் பதிலாக குறைந்த விலையில் அரிசியையும் அரிசி மாவையும் வழங்கும் புதிய திட்டம் ஒன்றைச் செயற்படுத்த இருக்கின்றோம் எனவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார். (எ)

# முன்பள்ளி கட்டடம் ஒன்றை புளியங்கூடலில் நிறுவுக!

## புனரமைப்பு உபகுழுவிடம் கோரிக்கை

ஊர்காவற்றுறை,பெப்.8

புளியங்கூடல் பகுதியில் முன்பள்ளிச் சிறுவர்கள் கற்பதற்கு வசதியாக முன்பள்ளி ஒன்றை அமைத்துத் தருமாறு புளியங்கூடல் மகாமாரி சனசமூக நிலையத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஊடாக புனர்வாழ்வு. புனரமைப்பு உபகுழு(தீவகம்)விற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்திலேயே அவர்கள் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இப்பகுதியில் சுமார் 40 முன்பள்ளிச் சிறார்கள் புளியங்கூடல் இந்து வாலிபர் சங்கக் கட்டடத்தில் தற்காலிகமாக நடத்தப்பட்டுவரும் முன்பள்ளி நிலையத்தில் கற்றுவருவதாகவும்-

இக்கட்டடத்தில் அன்னதான நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்படின் பாடசாலையை வேறு இடத்திற்கு மாற்றவேண்டி உள்ளதாகவும், இதனைக் கருத்திற்கொண்டு முன்பள்ளி நிலையம் ஒன்றை அமைத்துத் தருமாறு அந்த வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மகாமாரி சனசமூக நிலையத்திற்கான கட்டடம் மற்றும் விளையாட்டு மைதானம் என்பனவற்றை ஏற்படுத்தித் தருமாறு அவர்கள் சமர்ப்பித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(எ-16)

### நாளை

தை 26
ஞாயிற்றுக்கிழமை
(09.02.2003)
திதி : அட்டமி
பின்னிரவு 4.41வரை.
நட்சத்திரம்: பரணி
பிற்பகல் 4.21 வரை.
கார்த்திகை விரதம்
சுபநேரம் : 9.35 - 11.05
ராகுகாலம் : 5.05 - 6.35
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

கையில் பணம் இல்லாதவன் வாயிலாவது தேன் வைத்திருக்கவேண்டும்.

# வாய்க்கால்களில் கொட்டப்படும் களைகளால் நீர் விநியோகம் பாதிப்பு

## பெரும்பாக உத்தியோகத்தர் கூறுகிறார்

வலிகாமம்தெற்கு,பெப்.8

விவசாயிகள் பலர் தமது வயல் நிலங்களிலிருந்து அகற்றப்படும் களைகளை விவசாய வாய்க்கால்களில் வீசிவிடுகின்றனர்.

இதனால் நீர் விநியோம் தொடர்பாக பல்வேறு சிரமங்கள் ஏற்படுகின்றன.

உடுவில் கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் வி.இளங்குமார் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

விவசாய வாய்க்கால்கள் துப்புரவாக இருந்தால்தான் விவசாயத்தைச் சீராக மேற்கொள்ளமுடியும்.

விவசாயிகள் களைகளையும், குப்பைகள், தாவரக் கழிவுகள், வைக்கோல் போன்றவற்றையும் வாய்க்கால்களில் கொட்டுவதால் வெள்ளம் பாய்ந்தோடமுடியாமல் தேங்கி பயிர்களுக்கு அழிவை விளைவிக்கின்றன.

விவசாயத் திணைக்களம், கமநல சேவைத் திணைக்களம் போன்றவை குளங்களையும், வாய்க்கால்களையும் அவ்வப்போது புனரமைப்புச் செய்து சுத்தப்படுத்தினாலும் மேற்கண்ட நடவடிக்கைகளால் அவை பாதிப்படைகின்றன.

எனவே, இவற்றைப் பாதுகாக்கும் பொறுப்பு விவசாயிகளிடமும், விவசாய சம்மேளனங்களிடமும்தான் தங்கியுள்ளது.

- இவ்வாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(எ-152)

# கொலம்பியா ஒரு வாழ்நாள்....

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

செலுத்திவிடலாம். அட்லாண்டிஸை 2 வீரர்களுடன் மட்டும் அனுப்பியிருந்தால் அதன் மூலம் கொலம்பியாவில் இருந்த 7 வீரர்களையும் காப்பாற்றி இருக்கலாம். புதிய விண் ஓடம் சென்று சேரும்வரை விண்ணில் சுற்றிக்கொண்டிருக்கக் கூடிய அளவுக்கு கொலம்பியாவில் போதிய எரிபொருள் வசதி இருந்தது.

ஆனால், அதிகாரிகள் இவை எவை பற்றியும் கவனத்தில் எடுக்காமல் அசண்டையீனமாக இருந்தனர். அதுவே இறுதியில் அனர்த்தத்திற்கு வழிகோலியது.

### இஸ்ரேலின் தகவல்

இதேவேளை, கொலம்பியா விண்கலத்தின் இடதுபுறப் பகுதியில் வெடிப்புகள் இருந்ததாக இஸ்ரேலியப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது. இஸ்ரேலிய விண்வெளி வீரரான இலான் ரமோன் முதற்றடவையாக விண்ணுக்குச் சென்றிருந்தார். அவர் விண்ணில் தரித்திருந்த சமயம் தனது நாட்டின் பிரதமருடனும் ஏனைய விண்வெளி ஆராய்ச்சியாளர்களுடனும் கொலம்பியாவில் இருந்தபடியே 'வீடியோ கொன்பரன்ஸிங்' மூலம் நேரடியாக உரையாடினார். அப்போது [illegible]ருக்கு எதிரே (கொலம்பியாவி[illegible]க்கப்பட்டிருந்த கமெராவில் [illegible]ட்டுள்ள காட்சிகளில், இலான் ரமோனுக்குப் பின்புறமாக கொலம்பியாவின் இடதுபுறத்தில் வெடிப்புகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கொலம்பியா விபத்துக்குள்ளான தன் பின்னர் இந்த வீடியோ பதிவுகளை மீண்டும் மீண்டும் போட்டுப் பார்த்த இஸ்ரேலிய விஞ்ஞானிகள் இந்த வெடிப்புகளை கண்டுபிடித்துள்ளனர். அதனை ஆதாரமாகக் கொண்டே இஸ்ரேலியப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

### விசாரணை

இதுவரை நடந்த விசாரணைகளில் இருந்து கொலம்பியாவின் நடுப்பாகத்தில் வழக்கத்திற்கு மாறாக திடீரென வெப்பம் அதிகரித்ததால் தான் அது வெடித்துச் சிதறியது என்று தெரியவந்துள்ளது.

பூமியின் வளிமண்டலத்துக்குள் ஓடம் நுழையும்போது 3 ஆயிரம் டிகிரி செல்சியஸ் வெப்பத்தை கொலம்பியா எதிர்கொள்ளவேண்டியிருக்கும். இதனை அதில் பொருத்தப்பட்டுள்ள வெப்ப தடுப்பு தகடுகள் தாங்கிக்கொள்ளும். ஆனால், இறுதியாக ஓடம் வளிமண்டலத்துக்குள் நுழைந்தபோது அதன் வெப்ப தடுப்பு தகடுகளில் ஏற்பட்ட பாதிப்புக் காரணமாக அதில் வெப்பம் அதிகரித்து வெடித்துச் சிதறிவிட்டது என்றே இப்போது தெரிவிக்கப்படுகின்றது.

கொலம்பியாவின் விபத்துக் குறித்து 3 குழுக்கள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றன. சுயேச்சையான விசாரணைக் குழுவுக்கு கடற்படை முன்னாள் அதிகாரி ஹரால்ட் ஜூனியர் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். அமெரிக்க கடற்படைக் கப்பலான கோல் மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து விசாரணை நடத்தியவர் இவர்.

விபத்துக்கு முன்னரே கொலம்பியா ஓடம் பற்றி முன்னெச்சரிக்கைத் தகவல்கள் பல, நாஸாவுக்கு கிடைத்தும் அவை குறித்துக் கவனம் எடுக்கப்படவில்லையா என்பது குறித்து அவர் அதிக கவனம் செலுத்துவார் என்று தெரிகின்றது.

### ஆள்குறைப்பு

அண்மைக்காலமாக நாஸாவில் பெருமளவு ஆள்குறைப்பு செய்யப்பட்டுள்ளது. விண்வெளி ஓடத்துக்கான பிரிவில் பணியாற்றுவோரின் எண்ணிக்கை இதில் கணிசமாகக் குறைந்தது. பாதுகாப்பு ஏற்பாடுகளில் முழுக் கவனம் செலுத்தமுடியாத அளவுக்கு இது குறைந்துள்ளது என, அதிபராக புஷ் பதவியேற்றதும் நாடாளுமன்றக் குழு கருத்துக் கூறியிருந்ததும் இங்கு குறிப்பிடப்படவேண்டும்.

விண்வெளி ஓடத்தின் பாதுகாப்புக் குறித்து ஆய்வு செய்வதற்காக நிறுவப்பட்ட குழு கடந்த ஏப்ரல் மாதம் தனது அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தது. கடந்த 15 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு விண்வெளி ஓடத்தின் பாதுகாப்பு கவலைக்குரியதாக இருப்பதாக அது கவலை தெரிவித்திருந்தது. நாஸாவுக்கான நிதி ஒதுக்கீடுகள் கடந்த அரசாங்கங்களால் தொடர்ச்சியாகக் குறைக்கப்பட்டு வந்தமையும் இதற்கு ஒரு காரணம் என்று கூறப்படுகின்றது.

இதற்கிடையில்-

கொலம்பியாவின் விபத்தை அடுத்து 9 பேர் கொண்ட நிபுணர் குழுவில் இருந்து 5பேரை நாஸா நிர்வாகம் நீக்கியது. இரு ஆலோசகர்களும் அகற்றப்பட்டனர். ஆனால், கொலம்பியாவின் பாதுகாப்புக் குறித்து எச்சரித்ததாலேயே தம்மை நாஸா நீக்கிவிட்டதாக அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். ஆனால் இந்தக் குற்றச்சாட்டை நாஸா மறுத்துவிட்டது.

கொலம்பியாவின் விபத்து விண்வெளி ஆராய்ச்சியில் ஒரு பின்னடைவை ஏற்படுத்தும் எனக் கருதப்படுகின்றது. எனினும் விண்வெளி ஆராய்ச்சியை தமது அரசு தொடர்ந்து மேற்கொள்ளும் என்று புஷ் அறிவித்துள்ளார்.

கொலம்பியா வெடித்துச் சிதறியதை அடுத்து, ரஷ்யா விண்வெளிக்கு சுற்றுலாப் பயணிகளை அழைத்துச் செல்லும் தனது திட்டத்தை உடனடியாக நிறுத்தியது. இதுவரை இரு விண்வெளிப் பயணிகளை ரஷ்யா விண்ணுக்கு அழைத்துச்சென்று வந்தமை குறிப்பிடத்தக்கது.

வெடித்துச் சிதறிய கொலம்பியாவின் பாகங்களை அதிகாரிகள் ஒவ்வொன்றாகப் பொறுக்கிச் சேகரித்து வருகின்றார்கள். ஓரளவுக்கு முழுமையான பாகங்கள் சேகரிக்கப்பட்டது. அவற்றை மீண்டும் சேர்த்து கொலம்பியாவுக்கு உருவம் கொடுக்க அவர்கள் முயல்கின்றார்கள். அவ்வாறு உருவம் கொடுக்க முடிந்தால் விபத்துக்கான காரணங்களை அறிவதற்கு இலகுவாக இருக்கும் என்று அவர்கள் கருதுகின்றார்கள். ஆனால், காடுகளிலும் ஆறுகளிலும் மக்கள் வாழும் நகர்ப்புறங்களிலுமென சிதறிக்கிடக்கும் பாகங்களை மீட்டு ஒருங்கிணைப்பது இலேசான காரியமல்ல.


## பெருமையுடன் பாராட்டி வாழ்த்துகிறோம்



உயர்திரு.

**லயன் நல்லதம்பி சோமசுந்தரம்**

07. 02. 2003இல் சமாதான நீதவானாக யாழ். மாவட்ட பதில் நீதவான் **திரு.க.அரியநாயகம்** அவர்கள் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் பருத்தித்துறை நகராட்சி மன்றச் செயலாளராகவும் வடமராட்சி லயன்ஸ் கழகத் தலைவராகவும் கடமையாற்றிய காலப்பகுதியில் இப்பகுதி மக்களுக்கு அளப்பரிய சேவைகள் ஆற்றியமை குறிப்பிடத்தக்கது. இவரது சேவைகள் மேன்மேலும் தொடர அவரை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*மந்திகை, புலோலி.* (14226) **மாயவா பல்பொருள் வாணிபம்.**

## J/Vadamaradchy Central Ladies College
Karaveddy.

Annual Inter

## House Athletic Meet
## 2003

Date: **Saturday 8th Feb. 2003**

Time: **14.00 h.**

Venue: **College Green**

President: **Mrs. V.Sukumaran (Principal)**

***Chief Guest:***

**Mr.Kajendrakumar Ponnampalam**

*(Member of Parliament - Jaffna District)*

You are Cordially Invite

**Principal, Staff, Students, S.D.S., O.G.A. & W.W.S.**

(C/26411)

*விளம்பர அன்பளிப்பு:*

**தச்சை ஐங்கரா பல்பொருள் வாணிபம்**

*நெல்லியடி.*

## A/L 2004
**LOGIC**

குறியீட்டு அளவையியல்

*ஆரம்பம்:-* 08.02.2003

சனி 5.00 மணி.

By:- R.P.சர்மா

(14221)

**ஸ்ரார் கல்வி நிலையம்**

சுன்னாகம்.

## விற்பனைக்கு

நிறைகூடிய புறொயிலர், கல்பேட்ஸ் என்பன தினமும் சுத்தம்செய்து பெற்றுக் கொள்ளலாம். புறொயிலர் மொத்தமாகவும் விற்பனை செய்யப்படும். வியாபாரிகளுக்கு விசேட விலைக் கழிவு வழங்கப்படும்.

*தொடர்பு:* மல்ரி பாம் சென்ரர்

21/61, இராமநாதன் வீதி, கலட்டி

(மிலேனியம் றெஸ்ற்ரோறன்ஸ் முன்பாக).

*கிளை:* முட்டாஸ் கடைச் சந்தி அருகில், ஸ்ரான்லி வீதி.

(14228)

## நேரச்சு (OFFSET) இயக்குநர் தேவை

கிளிநொச்சி நகரில் இயங்கும் அச்சகத்திற்கு நேரச்சுப் பொறி (ஓப்செற்) இயக்குவதற்குரிய பணியாளர் தேவை.

*உடன்தொடர்பு கொள்ளவும்.*

"அன்பு அச்சகம்"

யாழ். - கண்டி நெடுஞ்சாலை,

கிளிநொச்சி.

(14222)

## பொதுக் கூட்டம்
### பழைய மாணவர் சங்கம்
### யா/செங்குந்த இந்துக் கல்லூரி

காலம் :23.02.2003

நேரம் :முற்பகல் 10.00 மணி

இடம் :கல்லூரியின் பிரதான மண்டபம்

புதிய அங்கத்தவர் தெரிவு இடம்பெறுவதால் பழைய மாணவர்கள், பழைய ஆசிரியர்கள், தற்போதைய ஆசிரியர்கள் அனைவரும் தவறாது சமுகம் தரவும்.

திருமதி சி.விஸ்வலிங்கம்

அதிபர்.

(14235)

## வீட்டுக்கிருத்திய அழைப்பு
### அமரர் பூபாலசிங்கம் விக்கினேஸ்வரன்

அவர்களின் 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (08. 02. 2003) சனிக்கிழமை காலை 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*கே.கே.எஸ். வீதி, கோண்டாவில்.* (14242) தாய், சகோதரர்கள்.

## பாராட்டி வாழ்த்துகிறோம்

**2002ஆம் ஆண்டு யா/தேவரையாளி இந்துக் கல்லூரி**

5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும் வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



**மு.முரளிதரன்**

126 புள்ளிகள்



**எ.துவாரகா**

126 புள்ளிகள்



**சி.நிருத்திகா**

121 புள்ளிகள்

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,

பழைய மாணவர் சங்கம்.

(சி-26422)

## நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்



*மடியில்* 01 - 09 - 1921 *பிடியில்* 02 - 12 - 1999

**அமரர் சிவகாமி அம்மா செகராசசிங்கம்**

திதி: தசமி



*மடியில்* 04 - 10 - 1949 *பிடியில்* 31 - 01 - 2001

**அமரர் குணசிங்கம் செகராசசிங்கம்**

திதி: ஸப்தமி

*பதினெட்டு ஆண்டுகள் பாசத்தின் திருவுருவமான அன்புத் தாயைப்*
*பார்க்கமுடியவில்லையே என்ற சோகத்தில் தந்தையை ஆவது*
*பார்த்து விடுவோம் என்று இந்தியாவுக்கு வரச்சொல்லி பன்னிரண்டு நாள்கள்*
*ஆசைதீரப் பார்த்துவிட்டு மௌனியாகிவிட்ட கொடைவள்ளலே!*
*உன்னை எப்பிறப்பில் காண்போம் இனி?*

*சந்திரோதயம், வதிரி,கரவெட்டி.* (14104) உற்றார், உறவினர்கள்.

# சில்லறை வர்த்தகர்கள் மீது 'வற்' வரி விதிப்பது ஒத்திவைப்பு

கொழும்பு,பெப்.8

சில்லறை வர்த்தகம் மீது 'வற்' வரி விதிக்கும் யோசனையைப் பின்போடுவதென அரசு தீர்மானித்திருக்கிறது. சில்லறை வர்த்தகர்கள் மீது 'வற்' வரி விதிக்கும் அரசின் யோசனையை உடனடியாக அமுல்படுத்தக் கூடாது என்று வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கான அமைச்சரவை உபகுழு சிபாரிசு செய்திருப்பதை அடுத்தே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

உயர்ந்து வரும் வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்தும் நோக்குடனேயே இச்சிபாரிசு செய்யப்பட்டிருப்பதாகக் குழுவின் பேச்சாளர் ஒருவர் கூறினார். குழுவின் அறிக்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது. சில்லறை வர்த்தகர்கள் மீதும் 'வற்' வரி அறவிடப்பட வேண்டுமெனக் கடந்த வரவு செலவுத் திட்டத்தில் யோசனை தெரிவிக்கப்பட்டிருந்தது.

இத்தீர்மானத்தினால் சில்லறை வர்த்தகர்கள் மீது 'வற்' வரி விதிக்கும் யோசனை கைவிடப்படவில்லையென நிதியமைச்சின் பேச்சாளர் ஒருவர் கூறியிருக்கிறார்கள். (எ)

# விடுமுறைகளில் கடைகளைப் பூட்டி பண்புடன் நடந்துகொள்ளுங்கள்!

## யாழ். வணிகர் கழகம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,பெப்.8

விடுமுறை நாள்களில் வர்த்தக நிலையங்களை திறக்காது பண்புடன நடந்துகொள்ளும்படி வர்த்தக நிலைய உரிமையாளர்களை யாழ்ப்பாணம் வணிகர் கழகம் கேட்டுள்ளது.

இதுகுறித்து அனுட்பியுள்ள செய்திக் குறிப்பில் வணிகர் கழகம் கோரியுள்ளதாவது:

சில வர்த்தக ஸ்தாபனங்கள் எமது அறிவுறுத்தல்களுக்கு மாறாக தற்போது தங்களது வர்த்தக ஸ்தாபனங்களை சனிக்கிழமைகளில் பி.ப 3.00மணிக்குப் பின்னரும் ஞாயிறு, போயா உட்பட வர்த்தக விடுமுறை தினங்களிலும் திறந்து வியாபாரம் செய்வது அவதானிக்கப்படுகிறது. இதனால் வர்த்தக ஊழியர்கள் பாதிக்கப்படுவதுடன் மற்றைய வர்த்தக நிலையங்களும் பெரும் பாதிப்புக்கு உள்ளாகுகின்றன.

ஆகவே இனிவரும் காலங்களில் எமது அறிவுறுத்தல்களுக்கு அமைய பண்புடன் நடக்கும் வண்ணம் சகல வர்த்தகப் பெருமக்களுக்கும் அறியத் தருவதென புதிய நிர்வாக சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ)

# திறந்த பல்கலை மாணவர்களுக்கு!

யாழ்ப்பாணம்,பெப்.8

யாழ்.திறந்த பல்கலைக்கழகத்தின் சிறு வணிக முகாமைத்துவ கற்கைநெறி மாணவர்களுக்கான அறிமுக நிகழ்ச்சித்திட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.இணைப்பாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சிறு வணிக முகாமைத்துவ மாணவர்களை கலந்துகொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (எ-5)

# சீருடை முத்திரைகள் விநியோகம்

கோப்பாய்,பெப்.8

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் பாடசாலை மாணவர்களுக்கான இலவச சீருடை முத்திரைகள் அந்த அந்தப் பிரிவு கிராம சேவை அலுவலர்களால் விநியோகிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மாணவர்கள் தமது கிராம சேவை அலுவலர்களுடன் தொடர்புகொண்டு ஆள் அடையாளத்தை உறுதிசெய்து சீருடைத்துணி பெற்றுக்கொள்வதற்கான முத்திரைகளைப் பெற்றுக்கொள்ளமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-72)

# பிளாஸ்ரிக் கதிரை அன்பளிப்பு

உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் தரம் 1இல் இணைந்துகொண்ட மாணவர்கள், அமர்ந்து கல்வி பயில்வதற்கென இப்பகுதியைச் சேர்ந்த நலன்விரும்பி ஒருவர் பிளாஸ்ரிக் கதிரைகளை பாடசாலைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார். (எ-117)

# ஓய்வூதியத் திகதிகள் அறிவிப்பு

ஓய்வூதியர்களுக்கான மாதாந்த ஓய்வூதிய திகதிகள் ஓய்வூதியம் வழங்கும் நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் -

ஜனவரி - 09, பெப்ரவரி - 06, மார்ச் - 6, ஏப்ரல் - 08, மே - 08, ஜூன் - 10, ஜூலை - 10, ஓகஸ்ட் - 07, செப்ரம்பர் - 09, ஒக்டோபர் - 07, நவம்பர் - 06, டிசெம்பர் - 09ஆம் திகதிகளில் ஓய்வூதியம் வழங்கப்படும்.

ஜனவரி மாத ஓய்வூதிய வவுச்சருடன் ஓய்வூதியத் திகதிகள் பற்றிய பட்டியல் அனுப்பப்பட்டுள்ளன என பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-117-76)

# எவரையும் அச்சுறுத்தும் நோக்கம் ஈ.பி.டி.பிக்கு என்றுமே கிடையாது!

## அக்கட்சியின் முன்னாள் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம்.பெப்.8

எவரையும் அச்சுறுத்தும் நோக்கம் ஈ.பி.டி.பியினருக்கு கிடையாது என்று அக்கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.வி.குகேந்திரன் (ஜெகன்) தெரிவித்துள்ளார்.


அக்கட்சி கடந்த புதனன்று வெளியிட்ட பத்திரிகை அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய நாங்கள் எந்த வேளையிலும், எப்போதும், எவரதும் உயிருக்கோ உடைமைக்கோ அச்சுறுத்தலாகச் செயற்பட்டதில்லை; செயற்படப்போவதும் இல்லை.

நெடுந்தீவில் ஈ.பி.டி.பிக்கு எதிராக இடம்பெற்ற நிகழ்ச்சிகளின் பின்னணிகள் என்ன? சூத்திரதாரிகள் யார்? என்பன போன்றவையெல்லாம் நன்கு அம்பலமாகியுள்ள நிலையில் பிசுபிசுத்துப்போன முயற்சிகளிலும் அரசியல் லாபம் தேடும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ஈடுபட்டிருக்கின்றனர். இது மூத்த அரசியல்வாதிகளின் கௌரவத்துக்கு உவப்பானதும் அல்ல. ஜனநாயகபூர்வமானதும் அல்ல. எந்தவோர் அரசியல் கட்சியையும் எந்தவொரு கிராமத்திலும் செயற்படக் கூடாது எனத் தடைவிதிப்பதை நாகரிக சமூகம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது. இதற்கு நெடுந்தீவில் நடைபெற்ற சம்பவங்கள் குறித்த சர்வதேச சக்திகளின் கணிப்பீடுகளும், ஒத்துழைப்புகளும் தகுந்த சான்று ஆகும். மேலும் நெடுந்தீவு பிரதேசத்தில் எமது கட்சியின் செயற்பாடுகள் தொடர ஒத்துழைத்து ஆதரவு நல்கிவரும் அனைவருக்கும் இத்தருணத்தில் மனமார்ந்த நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றோம்.

அத்துடன் குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் மீது பொலிஸாரும் நீதிமன்றமும் எடுக்கும் நடவடிக்கைகளில் ஈ.பி.டி.பி. எதுவித தலையீடுகளையும் மேற்கொள்ளாது என்பதுடன் பிற அரசியல் கட்சிகள் தமது அரசியல் சுயலாப நோக்கில் நீதிமன்ற நடவடிக்கைகளில் அநாவசிய தலையீடுகள் செய்யக்கூடாது எனவும் கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது.



## சேவை நலன் பாராட்டு



### திரு.த.பாலசிங்கம்

(ஆசிரிய ஆலோசகர், தென்மராட்சி வலயம்)

பழுத்த சைவமாய் பார்வையிலே கனிவுமாய்
செழித்த தமிழில் உரை பகரும் பண்புமாய்
சைவத்தின் ஆன்மீகத்தை விண்டு காட்டி
ஆன்மீகத்தை வாழ்க்கையாகக் கொண்டு காட்டி
ஆசிரியனாய், ஆசிரிய ஆலோசகனாய்
ஆண்டுகள் முப்பத்துநான்கு அணிசெய்த அன்பரே!
அகவைகள் அறுபது ஆகிடும் இந்நாளில் உம்
இல்லற வாழ்வும் இயைபுறு சேவையும்
ஓங்கிட வாழ்க! வளம் பெறுக!

வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலய-கோட்ட அலுவலர்கள்,
*தென்மராட்சி கல்வி வலயம்.*

(C/26417)


## பட்டப் படிப்புகள் கல்லூரி

57/13, ஸ்ரான்லி வீதி (இலங்கை வங்கிக்கு முன்பாக), யாழ்ப்பாணம்.

**பேராதனை, யாழ். பல்கலைக்கழகங்களின் வெளிவாரி பட்டப் படிப்புகள்**

**2003/2004**

வர்த்தக முதந்தேர்வு — கலை முதந்தேர்வு

**பிரிவு 2**

**விரிவுரைகள் 09.02.2003இல் ஆரம்பமாகின்றன**

வர்த்தகத்துறையின் தனித்துவமான நிறுவனம்

கல்விப்பயிலும் மாணவர்களில் 100%

*சித்தியடைந்தவர்கள் எமது நிறுவனத்தில் மட்டுமே.*

(14199)


## அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

### கூறுவிலை கோரல்

சங்கத்தின் அச்சுவேலி வல்லை வீதியில் அமைந்துள்ள சீனித் தொழிற்சாலையின் கிழக்கு மேற்காக அமைந்துள்ள 40' நீளமும் 20' அகலமும் உடைய மண்டபத்தின் புறச்சுவர் அமைப்பதற்கான கூலியினையும், சீற்போட்டு கூரைவேலை செய்வதற்கான நாட்கூலி மற்றும் மொத்தக்கூலி ஆகியவற்றுக்கான கூறுவிலை கோரப்படுகிறது. சங்கத்தினால் வேலை செய்வதற்கான மூலப்பொருள்கள் வழங்கப்படும்.

கூறுவிலை தொடர்பான விவரங்களைச் சொந்தமாகத் தயாரித்து 15.02.2003ஆம் திகதிக்கு முன் *பொதுமுகாமையாளர், பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம், அச்சுவேலி* என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும். மேலதிக விவரம் தேவைப்படுவோர் காரியாலயத்துடன் தொடர்புகொள்ளுமாறு வேண்டுகிறேன்.

கூட்டுறவுச்சேவையிலுள்ள
பொது முகாமையாளர்.

(14177)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 27 - 03 - 1916 | 20 - 01 - 2002 |

### அமரர் இராமு சின்னத்தம்பி

(இளைப்பாறிய ஆசிரியர்)

*திதி: தை பூர்வபக்க ஸப்தமி*

**அன்பின் பிறப்பிடமாய் அறிவின் உருவமாய்**
**பண்பின் சிகரமாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய்**
**திகழ்ந்தீரே ஐயா! உம்மை மறக்க முடியுமா எம்மால்?**

இன்று (08.02.2003) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சிரார்த்ததினக் கிரியைகளில் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்களை அழைக்கின்றோம்.

*"சிவபதி"*
*பிள்ளையார் கோவிலடி*
*கோப்பாய் மத்தி.*

திருமதி சரஸ்வதி சின்னத்தம்பி,
திருமதி சூரியகலா வரதராஜன்.

(13995)

### இறுதி ஹஜ் குழுவினர் மக்கா பயணம்

கல்முனை,பெப்.8

புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக கடைசி யாத்திரிகர் குழுவினர் நேற்று முன்தினம் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து மக்கா புறப்பட்டுச் சென்றனர்.

இம்முறை இலங்கையிலிருந்து மொத்தமாக 5ஆயிரத்து 500யாத்திகர்கள் புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக மக்கா சென்றுள்ளனர். (ஐ)

### இருபாலை கிழக்கில் சட்டவிரோதமாக மணல் ஏற்றும்பணி தொடர்கிறது

வலி.கிழக்கு,பெப்.8

இருபாலை கிழக்கு-வசந்தபுரம் பகுதியில் சட்டவிரோதமாக மணல் ஏற்றும்பணி தொடர்வதாக முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியார்களுக்குச் சொந்தமான காணிகளிலும், பொதுக் காணிகளிலும் இரவுவேளைகளில் உழவு இயந்திரம் மூலம் மண் அகழப்படுவதால் தாழ்ந்த நிலக்காணிகள் மேலும் தாழ்ந்த நிலங்களாக மாறும் அபாயம் தோன்றியுள்ளதாகவும் - மேலும் தெரிவிக்கப்பட்டது. (எ-180)

### பொலீஸ் நிலையங்களில் மக்கள் கூட்டம்

தென்மராட்சி,பெப்.8

சாவகச்சேரி, கொடிகாமம் ஆகிய பொலீஸ் நிலையங்கள் கடந்த ஒரு வாரமாக பொதுமக்களால் நிரம்பி வழிவதைக் காணமுடிகிறது.

தேசிய அடையாள அட்டையினைத் தொலைத்தவர்களே பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்வதற்குரிய கடிதங்களுடன் காத்திருப்பதைக் காணமுடிகிறது.

மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு தொடர்பாக தேசிய அடையாள அட்டை கோரப்பட்டதையடுத்து புதிய அட்டைக்கு விண்ணப்பிப்பதற்காக முறைப்பாடு செய்யும் பொருட்டு பொலீஸ் நிலையத்திற்கு வந்துள்ளதாகப் பொதுமக்கள் தெரிவித்தனர்.(எ-117)

### மேல் விசாரணை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.8

வடமராட்சி கிழக்கு, நடுக்குடத்தனையில் பொலீஸாரால் கைது செய்யப்பட்ட விழிப்புக்குழு உறுப்பினர்கள் உட்பட எண்மர் தொடர்பான மேல் விசாரணை எதிர்வரும் 10ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை பொலீஸாரால் மன்றில் ஆஜர் செய்யப்பட்ட எண்மரும் சரீரப் பிணையில் செல்வதற்கு பருத்தித்துறை நீதிவான் அ.பிரேமசங்கர் அனுமதியளித்திருந்தார்.

அவர்கள் கடந்த புதனன்று மீண்டும் மன்றில் ஆஜராகியதை அடுத்து மேல் விசாரணையை 10ஆம் திகதிக்கு நீதிவான் ஒத்திவைத்துள்ளார்.

இதேவேளை -

விழிப்புக் குழுவினரால் பிடிக்கப்பட்ட பிரஸ்தாப இரு இராணுவச் சிப்பாய்களும் கடந்த புதன்கிழமை மன்றில் ஆஜராகியிருந்தனர்.

கடந்த மாதம் 31ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 9.30 மணியளவில் நடுக்குடத்தனைப் பகுதியில் சந்தேகத்தின் பேரில் நடமாடிய இரு இராணுவத்தினரை அப்பகுதி விழிப்புக்குழுவினர் தடுத்துவைத்திருந்ததும் - இது தொடர்பான விழிப்புக் குழு உறுப்பினர் உட்பட 8 பேரை பொலீஸார் கைதுசெய்ததும் - தெரிந்ததே. (ஒ-10-70)


## விற்பனையாகின்றன

சித்த ஆயுர்வேத வைத்திய மாணவர்களுக்கு அதிசிறந்த வைத்திய நூல்கள் கழிவுடன் வழங்கப்படும்.

**ஸ்ரீலங்கா புத்தகசாலை,**
**234, கே.கே.எஸ். வீதி,**
**யாழ்ப்பாணம்.**
T.P.: 2573 (14141)



**நம்பிக்கையான**
**வாகனக் கொள்வனவுக்கு!**

புதிய, பழைய வாகனங்கள், உழவு இயந்திரம், இருசில்லு உழவு இயந்திரம் என்பன நம்பகமாகப் பெற்றுத்தரப்படும். காட்சியறையிலும் வாகனத்தைப் பார்வையிடமுடியும். மீன் ஏற்றிச் செல்லக்கூடிய, பொருளகள் விநியோகிக்க கூடிய வாகனங்கள் கையிருப்பில் உண்டு.

தொடர்பு:

**U.S.A. Computer Centre**
No.3, சிந்நகர்,
பூந்தோட்டம், வவுனியா.
T.P.: 024-23671 (14042)


## 4 ஆவது வருட நினைவலைகள்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 18 - 03 - 1946 | 08 - 02 - 1999 |

### அமரர் தாவீதுராஜா ஞானவெளிச்சம்

இறப்பிலும் எம்முடன் வாழ்பவருக்கு
எம் இதய காணிக்கைகள்.

*உரும்பிராய் கிழக்கு,*
*உரும்பிராய்.* (14189)

மனைவி, பிள்ளைகள்,
பெற்றோர், உறவினர்கள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 26 - 03 - 1925 | 10 - 01 - 2003 |

### அமரர் நாகமணி இரத்தினம்

கடந்த 10.01.2003 இல் சிவபதமடைந்த எங்கள் அன்புக்கும் பாசத்துக்கும் உரியவரான அமரர் நாகமணி இரத்தினம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (07.02.2003) வெள்ளிக்கிழமை கீரிமலை தீர்த்தக்கரையில் நடைபெற்றன. அன்னாரின் இல்லத்தில் நாளை (09.02.2003) ஞாயிற்றுக்கிழமை காலை 10மணியளவில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மற்றும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு நண்பர்கள், உறவினர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

*மீனாட்சி அம்மன் கோவிலடி,*
*சங்கத்தானை, சாவகச்சேரி.* (14086)

\- குடும்பத்தினர்.

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



### திருமதி இராசா நாகம்மா

பிறப்பு ....1918 — இறப்பு 09.01.2003

09-01-2003 அன்று கிளிநொச்சி, வட்டக்கச்சியில் காலமாகிய புத்தூர் நவக்கிரியைப் பிறப்பிடமாகவும் யாழ்.நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட எமது அன்புத் தாயாராகிய திருமதி இராசா நாகம்மா அவர்களின் அந்தியேட்டி அஞ்சலி நிகழ்வு இன்று (08-02-2003) சனிக்கிழமை நல்லூரில் நடைபெறவுள்ளதால் உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் யாவரையும் எமது தாயாரின் ஆத்மசாந்தி ஆராதனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அதேவேளை - கிளிநொச்சி, வட்டக்கச்சியில் காலமாகிய எமது தாயாரின் பூதவுடலை யாழ்.நல்லூர்க்கு எடுத்து வருவதற்கு உதவிக்கரம் நீட்டியவர்களுக்கும் 16-01-2003 அன்று நடைபெற்ற இறுதிக்கிரியைவரை உதவியும், கலந்தும் எமக்கு அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தகவல்: திருமதி இலங்காதேவி இரத்னசிங்கம் (மகள்)
17/34, பண்டாரக்குளம் ஒழுங்கை,
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

(14171)

# ‘சேவாலங்கா’வின் திட்டங்கள் சமூக நன்மை கருதியவையே

## யாழ். இணைப்பதிகாரி தகவல்

‘சேவாலங்கா’ மன்றத்தின சேவைத் திட்டங்கள் கிராமிய வளங்களையும், தேவைகளையும் முதன்மைப் படுத்தி மேற்கொள்ளப்படுவதால் அவை சமூகத்தை வலுப்படுத்தும் திட்டங்களாக உள்ளன.

-இவ்வாறு கருத்துத் தெரிவித்தார் ‘சேவாலங்கா’ மன்ற யாழ். இணைப் பதிகாரி ஏ.ஆனந்தராஜா.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:

‘சேவாலங்கா’ அமைப்பு குளங்கள், உவர்நீர்த் தடுப்பணைகள் போன்றவற்றை புனரமைத்தல், ஜீவனோபாய சுழற்சி முறையிலான நிதி வசதிகளை வழங்கல் மற்றும் பொதுத் தேவைகளுக்கான மண்டபங்களை அமைத்தல் போன்ற திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

கிராமிய மட்டத்தில் மேற்கொள்ளப்படும் வலுவூட்டல் திட்டங்களை மேற்கொள்வதற்கு அவ்வப்பகுதி நபர்களே பயன்படுத்தப்படுகின்றனர்.

மேலும், எமது திட்டங்களில் கணிசமான பங்களிப்பை பெண்கள் வழங்க வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

சுமார் 20 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு தற்போது வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என்றார் அவர். (எ-9)

## ஆர்க் நிறுவன ஆண்டு விழா

உடுவில் ‘ஆர்க்’ நிறுவனம் கடந்த முதலாம் திகதி 25ஆவது ஆண்டு நிறைவை நன்றித் திருப்பலிப் பூசையுடன் கொண்டாடியது.

1970ஆம் ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதி அப்போதைய யாழ். ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகையால் திறந்துவைக்கப்பட்ட இந்த இல்லம், உளவளர்ச்சி குன்றிய மாணவர்களுக்கு புகலிடமளித்து கல்வி பயிற்றுவித்து வருகிறது. இதுவரை இருநூற்றி ஐம்பதுக்கும் மேற்பட்ட மாணவர்கள் ‘ஆர்க்’ நிறுவனத்தில் பயிற்சி பெற்று வெளியேறியுள்ளனர். தற்போது இங்கு 35மாணவர்கள் கல்வி கற்றுவருகின்றனர். (ஒ)

## விசாரணைக்கு ஒத்துழைப்பது பற்றி பாதுகாவலர் சங்கம் மீள்பரிசீலனை

யாழ்ப்பாணம்,பெப்.8

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலகம், காணாமற்போனோர் தொடர்பாக மேற்கொண்டுவரும் விசாரணைகளுக்கு தொடர்ந்தும் ஒத்துழைப்பது குறித்து தாம் மீள் பரிசீலனை செய்துவருவதாக வடபகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் தெரிவித்துள்ளது.

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் முதற்கட்ட விசாரணைகள் கடந்த மாதம் 24ஆம் திகதிமுதல் 26ஆம் திகதிவரை இடம்பெற்றன. இரண்டாம் கட்ட விசாரணைகள் எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம், 2ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

இந்நிலையில், மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கும் பாதுகாவலர் சங்கத்துக்கும் இடையில் ஏற்கனவே காணப்பட்ட இணக்கப்பாட்டில் அடங்கியுள்ள விடயங்கள் விசாரணைகளின்போது மீறப்படுவதாகவும் - இதனால் விசாரணைகளுக்குத் தொடர்ந்தும் ஒத்துழைப்பது குறித்து சங்கம் மீள்பரிசீலனை செய்துவருவதாகவும் - சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-9)

# வடமராட்சி கிழக்கு மாணவருக்கு சீருடை முத்திரை விநியோகம்

வடமராட்சி கிழக்கு,பெப்.8

வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவிலிருந்து, இடம் பெயர்ந்து வேறு பாடசாலைகளில் கல்வி கற்றுக்கொண்டு சீருடை முத்திரைகளுக்கு விண்ணப்பித்த மாணவர்கள் சீருடை முத்திரைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர்.

வடமராட்சி கிழக்கு அரச அதிபர் பிரிவிலிருந்து இடம்பெயர்ந்து தும்பளை சிவப்பிரகாச வித்தியாசாலை, அல்வாய் வடமத்தி றோ.க.த.க. பாடசாலை, பருத்தித்துறை இந்து மகளிர் கல்லூரி, கரணவாய் பொன்னம்பலம் வித்தியாசாலை, தட்டாதெரு மெ.மி.த.க. பாடசாலை, தர்மக்கேணி சி.சி.த.க. பாடசாலை, அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரி, கலட்டி றோ.க.த.க. பாடசாலை, பருத்தித்துறை மெதடிஸ்த உயர்தரப் பெண்கள் கல்லூரி, கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, அல்வாய் சின்னத்தம்பி வித்தியாசாலை, வல்வை சிதம்பராக் கல்லூரி, உடுவில மகளிர கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, பளை மத்திய கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், நாகர்கோவில் மகாவித்தியாலயம், நாகர்கோவில் அ.மி.த.க. பாடசாலை ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்றுவரும் மாணவர்களில் சீருடைக்கு விண்ணப்பித்தவர்களின் சீருடை முத்திரைகள் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் புலோலி, உபய கதிர்காம முகவரியில் உள்ள நாகர்கோவில் மேற்கு கிராம அலுவலர் ந.தர்மகுலசிங்கத்தின் அலுவலகத்தில் விநியோகிக்கப்படவுள்ளன.

பெற்றோர்கள் அல்லது மாணவர்கள் அடையாள அட்டையுடன் சமுகமளித்து சீருடை முத்திரைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர். (ஒ-182)

## மெய்வன்மை போட்டிகள்

வடமராட்சி,பெப்.8

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை காலை அதிபர் எஸ்.பத்மநாதன் தலைமையில் நடைபெறும்.

இப்போட்டிக்கு கல்லூரியின் பழைய மாணவரான, பருத்தித்துறை கிழக்கு கிராமசேவையாளர் வீ.சேதுநாயகம் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார். (எ-173)

★ ★ ★

வடமராட்சி,பெப்.8

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரியின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் 12ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேசன் தலைமையில் நடைபெறும்.

இப்போட்டிகளில் யாழ்.மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.மகாலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (எ-173)

## கட்டுரை, பேச்சு போட்டிகள்

கொழும்புத்துறை,பெப்.8

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு அரியாலை அபிவிருத்திச் சங்கம் கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகளை எதிர்வரும் 22ஆம், 23ஆம் திகதிகளில் நடத்தவுள்ளது.

மூன்று பிரிவுகளாக நடைபெறும் இப்போட்டிகளில் பங்குகொள்ள விரும்பும் அரியாலைப் பிரதேசத்தைச் சேர்ந்தோர் எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம் என அரியாலை அபிவிருத்திச்சங்கம் அறிவித்துள்ளது. (எ-30)

# நடமாடும் வழிகாட்டல் சேவை கொழும்பில் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம்,பெப்.8

மூன்றாம் நிலைக்கல்வி அமைச்சினால் வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கென நடமாடும் கல்வி, தொழில் வழிகாட்டல் சேவைகள் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப் பட்டுள்ளன.

அங்குரார்ப்பண நிகழ்வுகள் கடந்த மாதம் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த நினைவு மண்டபத்தில் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் பயிற்சி அமைச்சர் கபீர் ஹாசிம தலைமையில் நடைபெற்றன.

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சிகள் அதிகாரசபையினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள இந்த செயல் திட்டத்திற்கான அதிநவீன வசதிகள், உபகரணங்கள் கொண்ட மூன்று நடமாடும் அலகுகளை ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்கள் ஒரு வலயமாகவும் -

மன்னார், வவுனியா, திருகோணமலை ஆகிய மாவட்டங்கள் இன்னொரு வலயமாகவும் -

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்கள் பிறிதொரு வலயமாகவும்-

பிரிக்கப்பட்டு இந்தத் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகள் வழங்குவதற்கென விசேடமாகப் பயிற்றப்பட்ட ஆறு தமிழ் பட்டதாரி அலுவலர்கள் இந்த நிலையத்தில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நடமாடும் சேவையின் மூலம் தொழில்கள், பயிற்சி வகுப்புகள், தொழிற் சந்தை தொழிற் போக்குகள் என்பன பற்றிய தகவல்களின் இருப்பு மற்றும் சுய விவரக்கோவை எவ்வாறு தயாரித்தல், நேர்முகப் பரீட்சைகளை எவ்வாறு எதிர்கொள்வது, தமது தனிப்பட்ட இலக்குகளை எவ்வாறு நிர்ணயிப்பது போன்ற பயிற்சிகள் வழங்கல் என்பனவும் -

சுய திறன்கள், ஆற்றல்கள் ஆகியவற்றை வெளிக்கொணர்வதற்கான வழிகாட்டல் ஆலோசனைகள் என்பனவும் வழங்கப்படும்.

பாடசாலைகள், சமூக அபிவிருத்தி நிலையங்கள் மற்றும் பொது அமைப்புகளின் ஊடாக இந்த சேவைகள் வழங்கப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த சேவைகளைப் பெற விரும்புவோர் மேற்கூறிய அமைப்புகளினூடாகவோ அல்லது கல்வி, தொழில் சம்பந்தமாகத் தனிப்பட்ட வழிகாட்டல் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களை இல.7, கோவில் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சிகள் அதிகாரசபை அலுவலகத்துடனோ தொடர்புகொள்ளுமாறு மாவட்ட தொழில் வழிகாட்டல் ஆலோசகர் கோ.கிருஸ்ண குமார் கேட்டுள்ளார். (எ-ரி)

## இந்திய மீனவர்கள் மிரியான தடுப்புமுகாமுக்கு!

கொழும்பு,பெப்.8

கடந்த மூன்றாம் திகதி மன்னார் கடற்பரப்பில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட 16 இந்திய மீனவர்களையும மிரியான தடுப்புமுகாமில் வைக்குமாறு மன்னார் மாவட்ட நீதிபதி எம்.பி.மொகைதீன் உத்தரவிட்டார்.

நேற்று முன்தினம் மீனவர்கள் பொலீஸாரினால் மன்னார் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோதே நீதிபதி இவ்வாறு உத்தரவிட்டார்.

மிரியான தடுப்புமுகாமில் இருந்து இவர்களை இந்தியாவுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கையெடுக்குமாறும். இவர்களது வள்ளங்களைத் தலைமன்னார் கடற்படையினரிடம் ஒப்படைக்குமாறும் நீதிபதி எம்.பி. மொகைதீன் பொலஸாருக்கு உத்தரவிட்டார். (ஐ-12)

# வாசகர் திருமுகம்

## மாதந்தோறும் மருந்துகளை ஒன்றாக வழங்க முடியாதா?

யாழ். போதனா வைத்தியசாலையில் கொழும்பிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தரைவழிப போக்குவரத்து இல்லாத காலத்தில் தொடர் வைத்தியம் பெறும் நோயாளருக்கு(Clinical Patiants) இரண்டு கிழமைக்குத் தேவையான மருந்துகள் வழங்கப்பட்டன. மருந்து முடிந்தவுடன் திரும்பவும் வைத்தியசாலைக்குச் சென்று மேலும் இரு கிழமைகளுக்குத் தேவையான மருந்துகள் பெறவேண்டும். ஆனால், ஒரு மாதத்தில் ஒருமுறைதான் நோயாளியை வைத்திய கலாநிதி பார்வையிடுவார்.

போக்குவரத்துச் சீராக இருந்த காலத்தில் ஒரு மாதத்திற்குத் தேவையான மருந்துகள் வைத்திய பரிசோதனைக்கு பின் வழங்கப்பட்டன. இப்போது A-9 பாதை திறக்கப்பட்டுள்ளது. நினைத்தவுடன் கொழும்பு சென்று திரும்பலாம். இப்பொழுதும் ஏன் இருவாரங்களுக்குத் தேவையான மருந்துகள் மட்டும் வழங்கப்படுகின்றன என்பதை நியாயப்படுத்த முடியவில்லை.

ஒரு மாதத்திற்கு ஒருமுறை தொடர் வைத்தியம்பெறும் நோயாளருக்கு மருந்துகளை வழங்கினால்-

1. கிளினிக்குகளில் நோயாளிகளின் எண்ணிக்கை அரைப்பங்கு குறையும். இருக்கைகள் நோயாளிகளுக்கு போதுமானவையாக இருக்கும்.
2. வைத்திய கலாநிதிகளின் வேலைப்பளு குறையும்.
3. வைத்தியசாலையில் கடமை புரியும் உதவியாளர்களின் வேலைப் பளு அரைப்பங்கு குறையும்.
4. மருந்து வழங்குபவர்களின் (Pharmacists) வேலைப்பளு அரைமடங்காகும்.

மேற்கூறிய கருத்துக்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு சமர்ப்பணம்.

லயன் செ.கேசவராஜன்

## நூதனமான நூலகத் திறப்பு விழா

யாழ். பொதுநூலகம் 14.02.2003ஆம் திகதி திறக்கப்படும் என்ற செய்தியானது ஈழத்தமிழர் ஒவ்வொருவரும் மகிழ வேண்டிய செய்தியாகும். ஆனால், யாழ். பொதுநூலகத் திறப்புவிழா நூதனமாக உலகெங்கும் திறக்கப்படாத ஒரு புதிய வகையான திறப்புவிழாவாக இருப்பதனையிட்டு ஒவ்வொரு தமிழரும் வெட்கித் தலைகுனியவேண்டிய கீழ்த்தரமான நிலையை யாழ். மாநகரசபை நிர்வாகம் செய்துள்ளதனை வாசகர் திருமுகத்தின் ஊடாக மக்களின் சிந்தனைக்குச் சமர்ப்பிக்கின்றேன்.

முதலில் பரீட்சார்த்தமாக (Trial) திறந்து மூடிவிட்டு பின்பு சகல வேலைகளும் பூர்த்தி செய்தபின்னர் செயற்பாடுகளுக்கு மீண்டும் சம்பிரதாயபூர்வமாக திறப்பது என்ற செயல் வீடியோ பிடிப்பதிலும் பெயர் பொறிப்பதிலும நிர்வாகம் முழுமூச்சாக இருக்கின்றதேதவிர மாநகரசபையின் செயற்றிட்டங்கள் எல்லாம் வெறும் பூஜ்ஜியங்களாகத்தான் இருக்கின்றன என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

நூலகத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில், இந்திய பொறியியலாளர்களால் கட்டட நிலையை உறுதிப்படுத்த நம்பிக்கையற்ற நிலையில், வெடிப்புக்களைப் பூசி மெழுகி வீடியோ எடுத்து, கற்களில பெயர் பொறிப்பது மாநகரசபையின் நிர்வாகத்தின் தகுதி நிலையை கேள்விக் குறியாக்கி உள்ளது.

சோ.புவனேந்திரன்.

*ஆடியபாதம் வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*

## திரைப்பட வழங்குநர் சங்கம் நுகர்வோர் நலனையும் பேணுமா?

சில மாதங்களுக்கு முன் திரைப்பட வழங்குநர் சங்கம் ஒன்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டு அதற்கு ஓர் அலுவலகமும் பலாலி வீதியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து பல அறிவுறுத்தல்கள் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டதுடன் ஒளிநாடா வழங்கும் நிலையங்களிலும் ஒட்டப்பட்டுள்ளன.

இவற்றிலொன்று வாடிக்கையாளர் எடுத்துச்செல்லும் ஒளிநாடாப் பிரதிகளில் ஏதாவது சேதம் ஏற்பட்டால் அதற்கு வாடிக்கையாளரே பொறுப்பு.

வாடிக்கையாளர் எடுத்துச்செல்லும் ஒளிநாடாவில் ஏதாவது சேதம் ஏற்பட்டால் அதற்கு வாடிக்கையாளரே பொறுப்பு என்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றுதான். ஆனால், ஒளிநாடா விநியோகிப்போர் தமது பக்கம் தவறுகள் ஏற்பட்டாலும் வாடிக்கையாளரைப் பணம் செலுத்துமாறு நிர்ப்பந்திப்பது பற்றி திரைப்பட வழங்குநர் சங்கம் கவனத்தில் கொள்ளுமா அல்லது வழங்குநர்களின் நலனை மட்டும் பேணுமா?

உதாரணத்திற்கு இரு சம்பவங்களைக் கூறலாம் என நினைக்கிறேன். சில மாதங்களுக்கு முன் (திரைப்பட வழங்குநர் சங்கம் உருவாக்கப்பட முன்) திருநெல்வேலிப் பகுதியிலுள்ள ஒளிநாடா வழங்கும் நிலையம் ஒன்றில் விவேக்கின் நகைச்சுவை ஒளிநாடா இருக்கிறதா என்று கேட்டேன். உரிமையாளரும் ‘ஆம்’ என்று சொல்லி ஒரு ஒளிநாடாவைத் தந்தார். அந்த ஒளிநாடாவில் ஆரம்பம் முதல் இறுதி வரை விவேக்கையே காணவில்லை. பாண்டியராஜனின் நகைச்சுவைக் காட்சிகள்தான் இடம்பெற்றிருந்தன. மறுநாள் ஒளிநாடாவைத் திருப்பிக் கொடுக்கும்போது இதில் விவேக்கையே காணவில்லையே. பத்துரூபா குறைத்து எடுத்தால் என்ன என்று கேட்டேன். அதற்கு கடை உரிமையாளர் நீங்கள் பிரதி தொடங்கி முடியும் வரையும் பார்த்தீர்கள் தானே. முப்பது ரூபாவும் செலுத்தத்தான் வேண்டும் எனக் கட்டாயப்படுத்தினார். நானும் வேறுவழியின்றி முப்பது ரூபாயைக் கொடுத்துவிட்டு வந்தேன்.

பின்னர் கல்வியங்காடு பகுதியிலுள்ள ஒரு ஒளிநாடா வழங்கும் நிலையத்திலிருந்து ‘கடல்பூக்கள்’ பிரதியைப் பெற்றுச்சென்று வீட்டில் போட்டுப் பார்த்தபோது அரை மணித்தியாலங்கூடப் பார்க்க முடியவில்லை. பிரதி தெளிவில்லாமலிருந்தது. மறுநாள் ஒளிநாடாவைத் திருப்பி ஒப்படைத்தபோது “தம்பி பிரதி தெளிவில்லாமலிருந்தது. அரைமணித்தியாலங்கூடப் பார்க்கவில்லை. வேண்டுமானால் போட்டுப் பாரும். பத்துரூபா குறைத்து எடுத்தாலென்ன?” என்று கேட்டேன். அப்படியானால் நீங்கள் உடனே கொண்டு வந்திருக்க வேண்டும் என்று சொல்லி முப்பது ரூபாவையும் வாங்கிவிட்டார்.

நாங்கள் எமக்குப் பிடித்தவற்றை இரசித்து மகிழ்ச்சியாகப் பொழுதைக் கழிக்க நினைத்து வேண்டாவெறுப்புடன் பொழுதைக் கழித்தாலும் ஒளிநாடா வழங்குநர்களுக்கு பணம் செலுத்த வேண்டியிருக்கிறது. இது எந்தச்சட்டத்தில் எழுதப்பட்டுள்ளதோ. திரைப்பட வழங்குநர் சங்கம் வாடிக்கையாளரின் நலனிலும் கவனம் செலுத்துமா?

ந.பரமேஸ்வரன்.

இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு

பாதுகாப்பு, போக்குவரத்து,

பெருந்தெருக்கள், விமானப்போக்குவரத்து அமைச்சு

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## 2003ஆம் ஆண்டிற்கான

## விநியோகஸ்தர்களையும், ஒப்பந்தகாரர்களையும் பதிவுசெய்தல்

வவுனியா / யாழ்ப்பாணம் பிரதம செயற்றிட்டப் பொறியியலாளர் பிராந்தியத்திற்குட்பட்ட வவுனியா, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு ஆகிய ஐந்து மாவட்டங்களுக்கு 2003ஆம் ஆண்டிற்கான பொருள்கள் விநியோகத்திற்கும் சேவைகளை வழங்குவதற்குமான தகுதிவாய்ந்த உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்கள், விநியோகஸ்தர்கள், வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தகாரர்கள் ஆகியோர்களிடமிருந்து பதிவுசெய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. பொருள்களின் பட்டியல்
   - 1.1. ஆற்று மணல்
   - 1.2. கற்கள், கண்டகல்
   - 1.3. கட்டடப் பொருள்கள் (செங்கட்டி, சீமெந்து, ஓடு, பீங்கான் பொருள்கள், அஸ்பெஸ்டஸ்கல்நார் தகடுகள், உருக்குக்கம்பிகள், மரம் மற்றும் மின்சாரப்பொருள்கள் ஆகியன.
   - 1.4. சீமெந்து கொங்கிறீற்றிலான பைப்புகள்
   - 1.5. வீதிக்குறியீட்டு தீந்தையும் மற்றும் தீந்தை வகைகளும்
   - 1.6. வீதிப்பராமரிப்பு வேலைக்கான கருவிகளும், உபகரணங்களும் ஒற்றைச்சக்கரத்தள்ளுவண்டி, மண்வெட்டி, மண்வாரி [(Shovels)].
   - 1.7. வாகனங்களுக்கான டயர், டியூப், பற்றரி ஆகியன
   - 1.8. அலுவலக உபயோகத்திற்கான காகிதாதிகள்
   - 1.9. வாகனங்களுக்கான உதிரிப்பாகங்கள்
   - 1.10. காரியாலய தளபாடங்களும், உபகரணங்களும்

02. சேவைகளின் பட்டியல்
   - 2.1. வாகனங்கள் வாடகைக்கு அமர்த்தல் உழவுயந்திரம் (பெட்டியுடன்), ரிப்பர், லொறிகள், மண் கோலி ஏற்றும் இயந்திரம் (Backhoe Loader), வீதி உருளைகள்.
   - 2.2. வாகன திருத்த வேலைகளும், கழுவிச் சுத்தம் செய்தலும்.

03. பொது நிபந்தனைகள்
   - 3.1. விண்ணப்பங்கள் கீழே தரப்பட்ட படிவத்திற்கு அமையத் தயாரிக்கப்பட்டு *"மாகாணப் பணிப்பாளர், வடக்கு - கிழக்கு (வடக்கு), வீதி அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாணம்"* என விலாசமிடப்பட்டு, 14.02.2003ஆம் திகதிக்கு முன்னதாகக் கிடைகக்கூடியதாக அனுப்பிவைக்கபடல்வேண்டும். காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "விநியோகஸ்தர்/ஒப்பந்தகாரா பதிவு - 2003, ......... மாவட்டம்" எனத் தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.
   - 3.2. ஒவ்வொரு சேவைக்கும் பதிவுக்கட்டணமாக மீளளிக்க முடியாத தொகையாக ரூபா500/-இற்கான காசுக் கட்டளை/வங்கி உண்டியல், மாகாணப் பணிப்பாளர், வடக்கு - கிழக்கு (வடக்கு) என்ற பெயருக்கு யாழ்ப்பாணத்தில் கொடுப்பனவு செய்யக்கூடியதாக விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்படல்வேண்டும்.
   - 3.3. பதிவிற்கான ஒவ்வொரு மாவட்டத்திற்கும், ஒவ்வொரு சேவைக்கும் விண்ணப்பங்கள் தனித்தனியாக அனுப்பப்படல்வேண்டும். (வவுனியா, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்கள்)
   - 3.4. 2002ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட விநியோகஸ்தர்கள் / ஒப்பந்தகாரர், 2003ஆம் ஆண்டிற்கு தொடரவிரும்பினால் அவர்களும விண்ணப்பிக்கலாம்.
   - 3.5. பதிவுசெய்யப்பட்ட விநியோகஸ்தர்கள் மூன்று அடுத்தடுத்து வரும் விலை கோரல்களிற்கான விலைகளை குறிப்பிடத் தவறுமிடத்து அல்லது கட்டளை பிறப்பிக்கப்பட்டு உரியநேரத்தில் பொருள்களை வழங்கத்தவறுமிடத்து அல்லது வழங்கும் பொருள்கள் தரமற்றவை எனக் கருதுமிடத்து அந்தப் பதிவை எவ்வித அறிவித்தலுமின்றி இரத்துச் செய்யப்படுவதுடன் அந்தப் பொருள்கள் அல்லது சேவைக்கான கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.
   - 3.6. கேள்விகள் சாதாரணமாக பதிவுசெய்யப்பட்ட விநியோகஸ்தர்களிடமே கோரப்படும். ஆனாலும் தேவை ஏற்படுகின்றபொழுது கேள்விச் சபைக்கு வேறு வழங்குநர்களிடமும் விலைகோரவோ, வாங்கவோ உரிமை உண்டு.
   - 3.7. கேள்விச் சபைக்கு எந்தவொரு விண்ணப்பத்தையும் எவ்வித பண மீளளிப்புமின்றி நிராகரிப்பதற்கு உரிமை உண்டு.

**எந்திரி. வே.தர்மகுலசிங்கம்**
மாகாணப் பணிப்பாளர் / வடக்கு - கிழக்கு (வடக்கு),
வீதி அபிவிருத்தி அதிகார சபை,
18, ஐயனார் கோயிலடி, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல.: 222 2517

(இவ்விளம்பரம் ஏற்கனவே 26.01.2003 அன்று லேக்கவுஸ் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட சண்டே ஒப்சேவர் ஆங்கிலப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது. உள்ளூர் விநியோகஸ்தர்களின்/ஒப்பந்தகாரர்களின் வேண்டுகோளிற்கு இணங்க ஏற்கனவே விளம்பரப்படுத்தப்பட்ட இவ்விளம்பரம் இன்று இப்பத்திரிகையில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் விளம்பரப்படுத்தப்படுகின்றது.)

## மாதிரி விண்ணப்பப் படிவம்

## 2003ஆம் ஆண்டிற்கான

## விநியோகஸ்தர்கள்/ஒப்பந்தகாரர்கள் பதிவுசெய்தல்

........................ மாவட்டம்

01. பெயரும் விலாசமும் :
02. "வற்" (VAT) பதிவு இல. :
03. விநியோகத்தின்/சேவைகளின் தன்மை (தயவுசெய்து விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உப இலக்கத்தைக் குறிப்பிடவும்)
04. தொலைபேசி/தொலைநகல் இல.:
05. வங்கியின் பெயர் :
06. கணக்குக் காலம் :
07. 2002ஆம் ஆண்டு தங்களால் திருப்திகரமாக வழங்கல்கள்/சேவைகள் செய்யப்பட்ட அரச நிறுவனங்களின் பெயர் :

..........................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

வியாபார அலுவலக முத்திரை

திகதி: (C/26419)


## சுவீப் விற்க சிறுவர்களை இனி ஈடுபடுத்த முடியாது

கொழும்பு,பெப்.8

பதினெட்டு வயதுக்குக் குறைந்த பிள்ளைகளை தேசிய லொத்தர் சீட்டு விற்பனையில் ஈடுபடுத்தவேண்டாமென லொத்தர் சபை, விற்பனை ஏஜென்டுகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பாடசாலைகளுக்குச் செல்லாமல் பலர் லொத்தர் சீட்டு விற்பனையில் ஈடுபடுகின்றனர் என்று பொருளாதார மறுசீரமைப்பு, விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொடவிடம் புகார் செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து, சீட்டு விற்பனையில் சிறுவர்களை ஈடுபடுத்தாதிருக்க லொத்தர் சபைக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்தார்.

பதினெட்டு வயதுக்குக் குறைந்த சிறுவர்களுக்கு லொத்தர் சீட்டுக்களை விற்பனை செய்யவேண்டாமென விற்பனை ஏஜென்டுகளை சபை கேட்டுள்ளது. இதனை மீறும் விற்பனை முகவர்களின் விற்பனை உரிமை இரத்துச் செய்யப்படுமென தேசிய லொத்தர் சபை அறிவித்துள்ளது.(எ)

## யாழ். மத்தியூஸ் வீதி சேதமடைந்த நிலையில்

யாழ். மத்தியூஸ் வீதி பல வருடகாலமாக செப்பனிடப்படாது குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது.

ஆறு மாதங்களுக்கு முன்பு இவ் வீதியின் திருத்தப் பணிகளுக்காக வீதியோரமாகக் கற்கள் குவிக்கப்பட்டன. எனினும், இதுவரை திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை.

இந்தக் கற்குவியல்கள், போக்குவரத்திற்கு மேலும் இடையூறாக உள்ளதாகவும் -

இரவுவேளைகளில் பயணிப்போர் இக் கற்குவியல்களில் மோதி விழுந்து பெரும் சிரமப்படுவதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (எ-30)

## ரிசாத் பதுர்தீன் எம்.பி. மன்னாருக்கு விஜயம்

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதுர்தீன் நேற்று முன்தினம் மன்னார் மாவட்டத்தின் பல இடங்களுக்கு விஜயஞ்செய்தார்.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்களை மன்னார் மாவட்ட பாடசாலைகள் பலவற்றுக்கு அவர் கையளித்தார். விளையாட்டுக் கழகங்கள் பலவற்றுக்கு விளையாட்டு உபகரணங்களையும் பள்ளிவாசல்களுக்குத் தேவையான உபகரணங்களையும் அவர் கையளித்தார்.(எ)

## இலக்கிய அனுபவம் பகிர்வு

யாழ்ப்பாணம்,பெப்.8

தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ள 'மனவெளி' நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4மணிக்கு ஒன்றிய மண்டபத்தில் செம்பியன் செல்வன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் 'தாயகம்' சஞ்சிகை ஆசிரியர் க.தணிகாசலம் தமது இலக்கிய அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வார். தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெறும். (எ-ரி)

## பிரியாவிடை நிகழ்வு

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிமனையில் சேவையாற்றி பிற இடங்களுக்கு மாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்கள், கிராமசேவை அலுவலர்கள் ஆகியோருக்கான பிரியாவிடை வைபவம் எதிர்வரும் 15ஆம் திகதி உதவி அரச அதிபர் வி.ப.வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது. (எ-36)


## தேவை

ஒவ் செற் வேலை தெரிந்தவர்களும் பைன்டிங் வேலை தெரிந்தவர்களும் தேவை.

விள. இல. 1772,
மே/பா. உதயன்.
(C/26418)

## தேவை

யாழ். வணிகர் கழகத்திற்கு ஆண் அலுவலக உதவியாளர் (Peon) ஒருவர் தேவை. 15.02.2003இற்கு முன் தகுதியானவர் இல. 165, மானிப்பாய் வீதி என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.
(C/26420)

ஓம்
குருமயம்
சுவாமி
*ஸ்ரீ சச்சிதானந்தா அருளொளி செல்லம்மா மாதாஜி*

## மகா குருபூசையும் நூல் வெளியீடும்

## 09-02-2003

இடம்:- **ஸ்ரீ சச்சிதானந்தா ஆசிரமம்** (ஆனந்தநகர், கைதடி)
காலம்:- நாளை (09.02.2003) ஞாயிறு காலை 9.00 மணி
முன்னிலை:- **திரு.இ.குழந்தைவடிவேலு**
(சமாதான நீதிவான், தலைவர் ஸ்ரீ சச்சிதானந்தா ஆசிரமம்)
வரவேற்புரை:- **திரு.சு.செல்வராசா** (கிராம அலுவலர், கைதடி; பொதுச் செயலாளர், ஸ்ரீ சச்சிதானந்தா ஆசிரமம்)
ஆசியுரை:- **தவத்திரு. செல்லத்துரை சுவாமிகள்**
(தலைவர், சிவதொண்டன் நிலையம் - யாழ்ப்பாணம்)
வாழ்த்துரை:- **சுவாமி ஸ்ரீ இராஜ்குமார்**
(காயத்திரீ பீடம் - மீசாலை)
*வித்தககுருமணி* **பரமசுவாமி** ("வித்தகம்" - பெரியமாவடி)

## நூல் வெளியீடு

**சுவாமி சச்சிதானந்தா அருளொளி செல்லம்மா மாதாஜி**

வெளியிட்டு வைப்பவர்: தவத்திரு. செல்லத்துரை சுவாமிகள்
பெற்றுக்கொள்பவர்: தவத்திரு. சச்சிதானந்தா ஆறுமுகம் சுவாமிகள்
மதிப்பீட்டுரை: பேராசிரியர் நா.ஞானக்குமரன்
(யாழ். பல்கலைக்கழகம்)
சிறப்புரை: திருமதி கலைவாணி இராமநாதன்
(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)
திருமதி நாச்சியார் செல்வநாயகம்
(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)
வைத்திய கலாநிதி வ.சின்னப்பு
திரு.சி.சக்திகிரீவன்
(செயலாளர் இந்துசமயப் பேரவை)
லயன் எஸ்.சிவநேசன்
(தலைவர், மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம்)
*அறநெறித் தொண்டன்* திரு.கு.கங்கைவேணியன்
(ஆலோசகர், ஸ்ரீ சச்சிதானந்தா ஆசிரமம்)
டாக்டர் K.T.S. சபாநாதன்
நன்றியுரை: திரு.பொ. கந்தசாமி
(பதிவாளர், மருத்துவ பீடம் யாழ். பல்கலைக்கழகம்; நிதிச் செயலாளர், சச்சிதானந்தா ஆசிரமம்)

*குறிப்பு:* **ஆசிரம மருத்துவ முகாமில் கண் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு மூக்குக் கண்ணாடி வழங்காத 68 பேருக்கு கண்ணாடி வழங்கும் வைபவம் இடம்பெறும்.**

மாதாஜியின் நூலின் பெயரால் சேரும் நிதியினைக் கொண்டு ஆசிரம வளாகத்துள் *அருட்கவி. விநாசித்தம்பி ஐயா* அவர்களால் "சச்சிதானந்த செல்லம்மா மாதாஜி லிங்கேஸ்வரர்" ஆலய கால்கோள் வைபவமும் நிர்மாணப் பணிகளும் மேற்கொள்ளப்படும்.

"சிவப்பணி சிறக்க சிரமேற்கொண்ட பணியினை தவப்பொழுதாக்க வந்திடுவீர்"

*அடியார்களை அன்புடன் அழைக்கும்*
*ஸ்ரீ சச்சிதானந்தா ஆசிரமம் ~ கைதடி.*
தொலைபேசி இல.: 070 213179

இ.குழந்தைவடிவேலு J.P. — தலைவர்.
சு.செல்வராசா G.S. — செயலாளர்.
(14187)

"மாதாவை ஒரு நாளும் மறக்கமாட்டேன்
மாதாஜி பாதத்தால் புனிதம் பெற்றேன்
வேதாகமத்தை எனக்குத்தத் தாயே
வெற்றியுடன் நின் பணியால் வாழ்வேன் யான்."

**ஸ்ரீ சச்சிதானந்தா எண்டர்பிறைசஸ்**
கைதடி,
தொ. பே. 070 - 213253

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மண்ணில் 04 - 07 - 1936



விண்ணில் 09 - 01 - 2003

## திருமதி செல்லையா செல்லமுத்து

அன்பினால் எமையெல்லாம் உம் சிறகால் அரவணைத்தீர்!
ஆறவில்லை எம் இதயம் மாதம் ஒன்று சென்றாலும்
எமது இதயத்தில் நீரென்றும் பௌர்ணமியாய் ஒளிர்கின்றீர்!

இந்நாளில் உங்கள் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கிறோம். இன்று (08.02.2003) சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக்கிரியை, ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மற்றும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

*கலிகை சந்தி,*
*துன்னாலை கிழக்கு,*
*கரவெட்டி.*
(14205)

தகவல்:
**பிள்ளைகள்.**

# கொலம்பியா:


டெக்சாஸில் வீழ்ந்து கிடக்கும் விண்வெளி வீரர் ஒருவரின் தலைக் கவசம்

**2003** பெப்ரவரி முதலாம் திகதி. அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி நிலையமான நாஸாவின் கென்னடி சர்வதேச விண்வெளி நிலையம் காலைவேளை பரபரப்பாகப் பணியாற்றிக்கொண்டிருந்தது. கணனிகளுக்கு முன் அமர்ந்திருந்த அதிகாரிகள் வைத்த கண் வாங்காது தம் வேலையில் ஒன்றித்திருந்தார்கள். 16 நாள்களாக விண்ணில் சுற்றிக் கொண்டிருந்து விட்டு கொலம்பியா விண் ஓடம் பூமிக்குத் திரும்பப் போகின்றது. அனைத்தும் கனகச்சிதமாக இருக்க வேண்டும் என்ற பரபரப்பு - படபடப்பு - அனைவரையும் தொற்றிக் கொண்டிருந்தது. இது வழமையானதுதான். விண் ஓடம் புறப்படும்போதும் தரையிறங்கும் போதும் வரும் அந்தக் கடைசி நிமிடங்கள் எப்போதுமே இதயத் துடிப்பை அதிகரிக்கச் செய்பவை. எந்தக் கோளாறுகளும் இன்றி இவை நடந்தேறவேண்டும். இல்லையேல் அனர்த்தங்கள் தாங்கமுடியாதவையாகி விடும்.



அன்றும் அப்படித்தான், கொலம்பியா தரையிறங்க இன்னும் சில நிமிட நேரங்களே இருக்கின்றன. அதற்கான பணிகள் துரிதமாக, வேகமாக இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. உள்ளூர் நேரப்படி காலை 9.16க்கு ஓடம் தரைதொடவேண்டும். அதிகாரிகளின் பரபரப்புக்குக் குறைவேயில்லை.

திடீரென அதிகாரிகளின் முகங்களில் அதிர்ச்சி. அவர்களை பதற்றம் தொற்றிக்கொள்கின்றது. பணிகளில் அவசரம் தெரிகின்றது. அனைவரும் தங்கள் பணிகளில் மேலும் தீவிரமாகின்றனர். காலை மணி 8.53க்கு கொலம்பியாவில் முதலாவது கோளாறுக்கான சமிக்ஞை கிடைக்கின்றது. கடவுளே! எதுவும் ஆகிவிடக்கூடாது, இது அதிகாரிகள் ஒவ்வொருவரின் மனதிலும் எழுந்த பிரார்த்தனை. ஆனால், அவர்களின் பிரார்த்தனை பலிக்கவில்லை.

ஒலியின் வேகத்தைவிட 18 மடங்கு வேகத்தில் (மணிக்கு 13ஆயிரத்து 200 மைல் வேகம்) பூமிக்கு வெளியே 65 கிலோமீற்றர் உயரத்தில், வளிமண்டலத்துக்குள் நுழைவதற்காக வான்வெளியில் சுற்றிக் கொண்டிருக்கும் கொலம்பியாவில் இருந்து அதிகாரிகளுக்கு தொடர்ந்தும் கோளாறுகளுக்கான சமிக்ஞைகளே கிடைத்துக்கொண்டிருக்கின்றன. கடவுளே! என்ன நடக்கப்போகின்றதோ? என்று அதிகாரிகளின் பதற்றம் உச்சத்தை அடைகின்றது.

மணி 8.58க்கு வளிமண்டலத்தை ஊராய்ந்து உள்ளே இறங்குவதற்கு வசதியாக ஓடத்தின் இறக்கைகள் 57 பாகை சரிவில் திருப்பப்படுகின்றன. ஒரு நிமிடம்தான் கழிந்திருக்கும். விண்கலத்துடனான தொடர்புகளுக்கே அதிகாரிகள் திணறுகின்றனர். எங்கே, என்ன கோளாறு? எப்படி உடனடியாகச் சரிசெய்வது? அதிகாரிகளுக்கு கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை.

அவசர அவசரமாக பூமியில் இருந்து ஓடத்துக்கு கடைசி செய்தி பறக்கின்றது. "கொலம்பியாவின் சக்கரங்களின் அழுத்தம் பற்றிய தகவல்கள் கிடைக்கவில்லை. காத்துக்கொண்டிருக்கின்றோம். கடைசித் தகவல் வரவில்லை." - செக்கன்கள் வருடங்களாகக் கடக்கின்றன. பதில் இல்லை. பெரும் பிரயத்தனத்தின் மத்தியில் விண் ஓடத்தில் இருந்து கடைசியாக "ரொஜா....... எர்ம்ம்ம்......" என்ற வார்த்தைகள் பூமிக்கு கிடைக்கின்றன. அவ்வளவுதான்.

எது நடக்கக்கூடாது என்று எல்லோரும் நினைத்தனரோ அதுவே நடந்தது. ஓடத்துடனான தொடர்புகள் அனைத்தும் துண்டிக்கப்பட்டன. அதிகாரிகள் மேலும் மேலும் தீவிரமாக ஓடத்துடன் தொடர்புகளை ஏற்படுத்த போராடிக்கொண்டிருந்தார்கள். நாட்டின் முகக்கிய பகுதிகளுக்கும் முக்கியஸ்தர்கள் அனைவருக்கும் தகவல்கள் பறந்தன. கொலம்பியாவைக் காணவில்லை.

அதிகாரிகள் தொடர்ந்தும் சில மணி நேரம் தமது முயற்சியைத் தீவிரமாக்கினர். இறுதியில் எதுவும் முடியாத நிலையில் அவற்றைக் கைவிட்டனர்.


ஏதோ ஒன்று வெடித்துச் சிதறி துகள்களானதாக செய்தி வந்தது. அது அனேகமாக கொலம்பியாவாகத்தான் இருக்கும் என்று அதிகாரிகளுக்குத் தெரியும். இருந்தாலும் ஒரு நப்பாசை வேறு ஏதாவதாக அது இருக்கக்கூடாதா என்று. மேலும் சில மணி நேரங்களில் அனைத்தும் உறுதிப்படுத்தப்படுகின்றது. கொலம்பியா நடுவானில் சிதறிவிட்டது. அதில் பயணித்த 7 விண்வெளி வீரர்களும் உயிரிழந்து விட்டனர்.

செய்தி கேட்டு நாஸாவும் அமெரிக்காவும் மட்டுமல்ல முழு உலகமுமே அதிர்ச்சியில் உறைந்துபோனது.

பயன்படுத்தமுடியாத - விண்கலங்கள். விஞ்ஞான ரீதியான தனது முதற்பயணத்தை கொலம்பியா 1981 நவம்பர் மாதத்தில் மேற்கொண்டது. அது மிக வெற்றிகரமாக அமைந்தது. அதன் பின்னர் கொலம்பியா 27 தடவைகள் விண்வெளிக்கு பயணம் செய்து திரும்பியுள்ளது. அப்போதெல்லாம் அது எந்த இடையூறுகளும் இன்றி நன்றாகவே தரையிறங்கி இருந்தது. 1996 இல் மிக நீண்ட நாள்கள் வான் வெளியில் சுற்றிய பெருமையும் கொலம்பியாவுக்கே சேரும். 35 நாள்கள் அது வான்வெளியில் சுற்றியது.

### எங்கே நடந்தது தவறு?

கொலம்பியா விபத்துக்குள்ளாகி அதிலிருந்த 7 விண்வெளி வீரர்களும் உயிரிழந்த பின்னர் தற்போது வெளியாகி வரும் தகவல்கள் அதிர்ச்சி தருபவையாக




பி...வின் இடதுபுற இறக்கைப் பிரிவில் மோதியமை அந்த வீடியோ நாடாவில் பதிவாகியிருந்தமையே விஞ்ஞானிகளுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

வெளிப்புற எரிபொருள் தாங்கியில் ஏற்பட்ட கசிவு வெப்பம் காரணமாக பட்டைபோன்று பெயர்ந்து ஓடத்தின் இறக்கைப் பகுதியைத் தாக்கியிருக்கலாம் என்று கருதப்பட்டது. இல்லையெனில் ஏதாவது சிறிய எகல் அவ்வாறு மோதி இருக்கலாம் என்று விஞ்ஞானிகள் நினைத்தனர். இதனால், இடதுபுற இறக்கையின் கீழ் இருந்த வெப்ப தடுப்பு தகட்டில் பாதிப்பு ஏற்பட்டிருக்கக் கூடும் என்பதே விஞ்ஞானிகளின் கருத்தாக இருந்தது.

இது தொடர்பாக ரொக்கெட் பொறியியலாளர்கள் சில நாள்கள் தீவிரமாக ஆராய்ந்தனர். தீவிர ஆய்வுகளின் பின்னர் இந்தச் சிறிய மோதலால் ஓடத்துக்கு பாரிய பாதிப்பு ஏதும் ஏற்படாது என்று அவர்கள் தீர்மானித்தனர். அதனால் அடுத்த நடவடிக்கைகள் பற்றி அவர்கள் கவனம் செலுத்தவில்லை. அப்போது கொலம்பியா விண்ணில் வெற்றிகரமாக சுற்றிக்கொண்டிருந்தது.

ஆனால், கொலம்பியா விபத்

அதற்கான நடவடிக்கைகளும் கவனத்திற்கொள்ளப்படவில்லை.

• இந்த நடவடிக்கைகள் சரிவரவில்லை எனின், ஓடத்தில் இருந்த விண்வெளி வீரர்களில் சிலரை ஓடத்தைவிட்டு வெளியே வரச்செய்து சேதத்தின் தன்மையை ஆராய்ந்து அவற்றை சரிசெய்யுமாறு பணித்திருக்கலாம்.

இதில் சில சிக்கல்கள் இருக்கின்றன. முதலாவது, ஓடத்தில் இருந்த 7 விண்வெளி வீரர்களில் மைக்கல் அண்டர்ஸன் மற்றும் டேவிட் பிரவுண் ஆகிய இருவர் மட்டுமே விண்வெளியில் நடப்பதற்குப் பயிற்சி பெற்றவர்கள். அதற்கான பாதுகாப்பு கவச உடைகளும் அவர்களிடம் மட்டுமே இருந்தன.

அவர்கள் இருவரும்

# ஒரு வாழ்நாள் துயரம்

உள்ளன. நாஸாவும் அதிகாரிகளும் இன்னும் அதிக கவனம் எடுத்திருந்தால் விண்வெளி வீரர்களின் உயிரைக் காப்பாற்றி இருக்க முடியும் என்பதுதான் அந்த அதிர்ச்சி தரும் விடயம்.

இது எவ்வளவு தூரம் சாத்தியமானது என்பதை விட அதற்கு எந்த முயற்சிகளும் எடுக்கப்படவில்லை

துக்குள்ளான பின்னர் - இப்போது- அந்த மோதல் விபத்துக்குக் காரணமாக இருக்கலாமா என்று விஞ்ஞானிகள் ஆராய்கின்றனர்.

"கொலம்பியாவின் இறக்கையில் ஏற்பட்ட சேதம் விபத்துக்குக் காரணமாக இருக்கலாம் என்று தெரியவந்துள்ளது. இந்த வகையில் சில தவறுகள் நடந்திருக்கலாம்" என்று நாஸாவின் திட்டப் பணிப்பாளர் ரொன்டிட்மோர் தெரிவித்தார்.

### வீரர்களை காப்பாற்றக்கூடிய சந்தர்ப்பங்கள்

இந்த விபத்துக் குறித்து முன்னரேயே விஞ்ஞானிகள் கவனம் எடுத்திருந்தால் விண்வெளி வீரர்களையாவது காப்பாற்றி இருக்கலாமா? என்பது மற்றொரு கேள்வி.

விண்ணில் பறந்துகொண்டிருந்த போதே ஓடத்தில் இருந்த கோளாறைச் சரிசெய்வதற்கு சில சந்தர்ப்பங்கள்(சாத்தியங்கள் வெகு குறைவான போதும்) இருந்ததாக விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஓடத்தை விட்டு வெளியே வந்து பழுதுபார்க்கும் முயற்சியில் ஈடுபடும்போது அவர்களுக்குத் தேவையான எந்த ஒரு சிறு உதவியையும் ஓடத்துக்குள்ளே இருப்பவர்களால் செய்யமுடியாது. ஏனெனில் அவர்களில் எவருக்கும் விண்வெளியில்


விண்வெளி வீரர் ஒருவருடைய மீட்கப்பட்ட அங்கி

நடக்கத் தெரியாது.

அண்டர்ஸனும் பிரவுணும் வெளியே வந்தாலும் திருத்தப் பணிகளில் ஈடுபடுவதிலும் சிக்கல்கள் ஏற்பட்டிருக்கக்கூடும். பிரச்சினை வெப்ப தடுப்பு தகடுகளில்தான் என்றால் அவற்றை மாற்றி புதியவற்றைப் பொருத்துவதற்கு ஓடத்தில் புதிய வெப்ப தடுப்பு தகடுகள் எவையும் வைத்து அனுப்பப்படவில்லை. எனவே பிழையை அவர்கள் கண்டுபிடித்தாலும் சரிசெய்திருக்கமுடியாது. அது தவிர அவர்கள் இருவரும் வெளியே வந்த குறிப்பிட்ட நேரத்தில் மீண்டும் ஓடத்துக்குள் சென்றுவிடவேண்டும். இல்லையேல் அவர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படும்.


இதுவும் தவிர மிக சாத்தியமான ஒரு வழிவகையாக மற்றொரு விண் ஓடத்தை அனுப்பி வீரர்களைக் காப்


இஸ்ரேல் பத்திரிகையால் வெளியிடப்பட்ட புகைப்படம் இது. அடையாளமிட்டுக் காட்டப்பட்டிருப்பது கொலம்பியாவில் ஏற்பட்டிருந்த வெடிப்புகள்.

### கொலம்பியா

கொலம்பியா விண்வெளி ஓடம் [Space shuttle Columbia (OV-102)] நாஸா விண்வெளி ஆராய்ச்சி நிலையத்திடம் இருந்த பழைமையான விண் ஓடங்களில் ஒன்று. 1975இல் இதன் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. 1981 ஏப்ரலில் இது தனது முதலாவது பரீட்சார்த்த விண்வெளிப் பயணத்தை அது மேற்கொண்டது.

விண்வெளிக்கு சென்று மீண்டும் பூமிக்கும் திரும்பும் வகையில் வடிவமைக்கப்பட்ட முதலாவது விண் ஓடமும் கொலம்பியாதான். இதற்கு முன்னர் பயன்படுத்தப்பட்டவை அனைத்தும் அதிக செலவை ஏற்படுத்தும் ரொக்கெட்டுக்கள் மூலம் இயங்கும் - மீளப்


தொடர்புகள் இன்றி தொலைந்துபோன ஓடத்தை தேடும் தீவிரத்தில் நாஸா அதிகாரிகள்

என்பதே கவலைக்குரியது.

கொலம்பியாவின் விபத்துக்கு ஓடத்தினுள் வெப்பம் அதிகரித்தமையே காரணம் என்று பூர்வாங்க அறிக்கைகளில் இருந்து தெரியவந்திருக்கின்றது. இத்தகைய ஒரு நிலை ஏற்படும் என்று தெரிந்தும் அதனை நாஸா அதிகாரிகள் கவனத்தில் எடுக்காமல் கவலையீனமாக இருந்தார்களா என்பதுதான் எழுந்துள்ள கேள்வி?

ஜனவரி 16ஆம் திகதி அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் உள்ள கென்னடி விண்வெளி நிலையத்தின் கேப்கானவரால் தளத்தில் இருந்து கொலம்பியா தனது பயணத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர், அதன் வெளிப்புற எரிபொருள் தாங்கிப் பகுதியில் கோளாறு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. தாங்கியில் இருந்து நுரை வடிவில் எரிபொருள் கசிவு ஏற்பட்டிருப்பது கண்டறியப்பட்டது. பின்னர் அதனை பொறியியலாளர்களும் விஞ்ஞானிகளும் இணைந்து சரிசெய்தனர். அதன் பின்னர் கொலம்பியாவை எடுத்துச்சென்ற ரொக்கெட் சரியான நேரத்துக்கு, எந்தப் பிரச்சினையும் இல்லாமல் புறப்பட்டுச் சென்றது. விஞ்ஞானிகள் தமக்குள் பாராட்டுத் தெரிவித்துக்கொண்டனர்.

மறுநாள், கொலம்பியாவை எடுத்துச் சென்ற ரொக்கெட் புறப்பட்டபோது எடுக்கப்பட்ட வீடியோ படங்களை விஞ்ஞானிகள் போட்டுப் பார்த்தபோது அதிர்ச்சி அடைந்தனர். ரொக்கெட் கிளம்பிச் சென்ற சிறிது நேரத்தில் கொலம்பியாவின் வெளிப்புற எரிபொருள் தாங்கிப் பகுதியில் இருந்து ஒரு பொருள் எகிறி கொலம்

அவர்கள் கூறும் வழிமுறைகள் இவைதான்.

முதலில், சக்தி வாய்ந்த ஒரு தொலைநோக்கி மூலமோ செயற்கைக் கோள் மூலமோ கொலம்பியாவின் எந்த இடத்தில் கோளாறு ஏற்பட்டு வெப்ப தடுப்பு தகடுகள் பாதிக்கப்பட்டுள்ளன என்பதை துல்லியமாகக் கண்டுபிடிப்பது. ஆனால் அதற்கான முயற்சிகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

- பிரேம் -


அடர்ந்த காடுகளுக்கும் குதிரைகளில் சென்று தீவிர தேடுதல்

இதுதவிர, விண்ணில் சுற்றிக் கொண்டிருக்கும் சர்வதேச விண்வெளி நிலையமும் கொலம்பியாவும் விண்ணில் சில நூறு மைல்கள் தொலைவில் ஒன்றையொன்று பலதடவைகள் கடந்துசென்றிருக்கின்றன. சர்வதேச விண்வெளி நிலையத்தில் இப்போது 3 வீரர்கள் தங்கியிருந்து பணியாற்றிக்கொண்டிருக்கின்றனர்.

பூமியில் இருந்து அவர்களுக்குத் தகவல் அனுப்பி அவர்களைக் கொண்டு கொலம்பியாவின் எந்தப் பகுதியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பதை படம்பிடித்து இருக்கலாம்.

பாற்றி இருக்க முடியும் என்று கூறப்படுகின்றது. புதிய ஓடம் கொலம்பியா அருகில் சென்று அதிலிருந்தவர்களை மீட்டுக் கொண்டு திரும்பியிருக்க முடியும். இது மிகவும் சாத்தியமான ஓர் இலகுவான வழிமுறை.

புதிய ஓடம் ஒன்றை விண்வெளிக்கு, அனுப்புவதற்கு தயாராக வேண்டுமானால் அதற்கு 4 மாத கால அவகாசம் தேவை. எனினும் நாஸாவிடம் அட்லாண்டிஸ் என்ற விண்ஓடம் தயார் நிலையில் இருந்தது. ஏதாவதொன்றுக்கு, எடுத்துச்சென்றால் அதனை ... கோபோ விண்ணுக்குச்

(12ஆம் பக்கம் பார்க்க)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

மிகமிக நல்ல நிலையில் உள்ள ஒஸ்ரின் கேம்பிறிஜ் டிலிவரி வான் 33ஸ்ரீ தொடர் இலக்கமுடையது, கரும பச்சை நிறம், சகல ஆவணங்களுடனும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: A.சிவராசா, சுழாவடி தபால நிலையத்துக்கு அண்மையில் 4ஆம் கட்டை, ஆனைக்கோட்டை. (14201)

நல்ல நிலையில் உள்ள புதிய West Point double door பிறிச் (Fridge) விற்பனைக்குண்டு. தொடர்பு: Mrs.ஆனந்தராஜா, C/o விஸ்வலிங்கம், 'யமுனா', முள்ளி ஒழுங்கை, ஆனைக்கோட்டை. (14049)

பல இன கலர் மீன்கள், மீன் தொட்டிகள், மோட்டார்கள், மீன் தொட்டிக்குரிய அழகுசாதனப் பொருள்கள் மற்றும் Love Birds குருவிகள், கூடுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 55A, அரசடி வீதி, தட்டாதெருச்சந்தி, யாழ்ப்பாணம். (14216)

Prima Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம் செய்து, உங்களுக்குத் தேவையான நிறைகளில், நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை) தொடர்பு: (நல்லூர் வீதியோ சென்றர் வளவு) இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (13977)

புறொயிலர், கல்பேட்ஸ் இறைச்சிக் கோழி சுத்தம்செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: Y.A.சுரேஷ் (கிராமக் கோட்டு சந்தியில் இருந்து 150 மீற்றர் உள்ளே),பருத்தித்துறை. (13929)

## கோழிக்குஞ்சு விற்பனை

அதிவிசேட Prima பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. Gampura, Raniket தடுப்பு மருந்துகள் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 8.00 மணிக்கு பெற்றுக்கொள்ளலாம் 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீதியோ சென்றர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (14172)

## வீடு விற்பனைக்கு

ஐரோப்பிய மொடலில் கட்டப்பட்ட இரண்டு பல்கனிகளுடனும், கடையுடனும் கூடிய சகல வசதிகளும் உடைய புதிய மாடி வீடு விற்பனைக்குண்டு (வெளிநாடுகளில் வசிதவர்களுக்கு ஏற்றது). முதிரை மரத்திலான சாப்பாட்டு மேசையும் கதிரைகளும் 7' கண்ணாடி கடை சோக்கேஸும் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஆனந்தபவன், மயிலு ஒழுங்கை, ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை.(14214)

## காணி வீடு விற்பனைக்கு

நவாலி வடக்கில் நல்ல தண்ணீர் கிணற்றுடன் மின்சார வசதி அடங்கிய 6 பரப்பு வளவும், அதே இடத்தில் 5½ பரப்புக் காணி நல்ல தண்ணீர் கிணற்றுடனும் மலசல கூட வசதியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: போவான் செபஸ்தியாம்பிள்ளை, புனித செபஸ்தியார் வீதி, மாதகல்.(14213)

## புத்தகங்கள்

கலாபூஷணம் அராலியூர் நசுந்தரம் பிள்ளையின் நூல்கள் 1.நாடகம் எழுதுவது எப்படி? 2.யாழ்ப்பாணமா? கொழும்பா? 3.யாழ்ப்பாணம் 4.இலக்கியக் கட்டுரைகள் 5.வீடற்றவன் நாவலின் விளக்கமும் விமர்சனமும் 6.ஒரு காதலின் கதை 7.எங்கள் நாடு 8.இலக்கிய விமர்சனம். (14134)

## அபூர்வ ஜோதிடம்

சித்தர் பாவித்த தேவமண்டல சிகிச்சையில் தீராத நோய் உடன் குணப்படல், அதிர்ஷ்டபலன் அறிதல். சனி, ஞாயிறு 8.30-2.00p.m. சேச் முன்லேன், முதலி கோவிலடி, கொக்குவில் மேற்கு. (14167)

## வகுப்புகள்

தமிழ் தட்டெழுத்து, சுருக்கெழுத்து, ஆங்கில தட்டெழுத்து புதிய வகுப்புகள் நடைபெறுகின்றன. தொடர்பு: 5,அம்மன் வீதி (வைரவர் கோயில் முன்பாக), கந்தர்மடம், யாழ்ப்பாணம். (14185)

## தவறிவிட்டது

கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை என்னும் முகவரியுடைய கனகரத்தினம் இராமச்சந்திரன் என்பவரது தே.அ. அ.(இல.623523861V),வி.அ.அ., சாரதி அனுமதிப்பத்திரம் (A005531468) என்பன 06-02-2003 அன்று சாவகச்சேரிக்கும் உரும்பிராய்க்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இந்துக் கல்லூரி ஒழுங்கை, உரும்பிராய் வடக்கு என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். T.P. 222-2434. (14223)

---

# ஆலின்ஸ் நிறுவனம்

எமது நிறுவனம் கடனடிப்படையில் இற்றைவரைக்கும் எவரிடமும் பொருள்கள் வாங்கியதில்லை.

எமது நிறுவனத்தைச் சேர்ந்த ஊழியர்கள் எவருக்கும் நிறுவனம் சார்பாக கடனடிப்படையில் பொருள்களை விநியோகம் செய்ய வேண்டாம் என தயவுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

சி. உருத்திரலிங்கம்
பொதுமுகாமையாளர்/
உரிமையாளர்.

*06, நல்லூர் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.* (14217)

---

# இந்திய யாத்திரை

தென்னிந்திய, ஆந்திர, கர்நாடக, விஜயவாடா, கேரள, பாண்டிச்சேரி 130இற்கும் மேற்பட்ட ஆலய தரிசனம். இதுவரை புத்திர பாக்கியம் இல்லாதவர்களின் வேண்டுதலுக்காக விசேஷமான 4 ஆலயங்களும், தோஷ நிவாரணங்களுக்காக 2 ஆலயங்களும், தீய சக்திகளினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக 3 ஆலயங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. வடபகுதி யாத்திரீகர்களுக்கான விசேஷ சேவை. இன்னும் 4 ஆசனங்கள் மட்டுமே உள்ளன. 28.02.2003இற்கு முன் பதிவுசெய்து கொள்ளவும். பயணம் 15.04.2003இல்.

இந்த யாத்திரைகள் அனைத்தும் 2000ஆம் ஆண்டு காலமான என் மனைவியின் ஞாபகார்த்தமாக குறைந்த செலவில் சேவைநலம் கொண்டு செய்யப்படுகின்றது.

*மேலதிக விவரங்களுக்கு:*

T.ஸ்ரீரெங்கநாதன்,
T.P.: 0777 680102. (C26241)

---

# பாராட்டும் வாழ்த்தும்



## திரு.ந.இராசகுமாரன்

(கிராம உத்தியோகத்தர் J/341)

தன்னலங்கருதாது மக்கள் நலனுக்காக உழைத்து தரம் I (ஒன்று) உயர்வு பெற்றமையை மனமகிழ்ச்சியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம். 25 வருட அரச சேவையில் 19 வருடங்கள் இக்கிராமத்து மக்களுக்கு சேவையாற்றி மக்கள் மனங்களில் விருட்சமாகி நிற்கும் இவரது சேவை மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற்று சேவையைத் தொடர எல்லாம்வல்ல சேவலப்பிட்டிக் கந்தனின் அருளை வேண்டி நிற்கின்றோம்.

*இடைக்குறிச்சி, வரணி.* (14220)

மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்,
இடைக்குறிச்சி கிழக்கு.

---

# முதலாம் ஆண்டில் முகிழ்க்கும் நினைவுகள்



அமரர்

## திருவாட்டி பண்டாரம் கனகம்மா

தோற்றம் 28-03-1932 | மறைவு 21-01-2002

ஓராண்டு மறைந்தாலும் உம் நினைவு மாறவில்லை
நீரோடும் சடையன்தாள் நீரடைவீர் நிதம் சாந்தி!

என்றும் உங்கள் நினைவில்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

தகவல்:சோ.கௌரி(மகள்)
46, அம்பாள் வீதி, நாயன்மார்கட்டு. (14218)

---

# நன்றி செலுத்தும் ஆராதனை



## அமரர் C.C.J.ஜெயராசா

எமது அருமைத் தந்தையார் அமரர் C.C.J.ஜெயராசா அவர்கள் கர்த்தருக்குள் நித்திரை அடைந்த 31ஆம் நாளான இன்று (08.02.2003) சனிக்கிழமை மு.ப.11.00 மணிக்கு அவரது வாழ்வுக்கும் பணிக்கும் நன்றி செலுத்தும் ஆராதனை எமது அளவெட்டி திருச்சபையில் இடம்பெற்று பின்னர் குருமனையில் மதியபோசனமும் இடம்பெறும். இதில் கலந்துகொண்டு எமக்கு ஆறுதல் அளிக்குமப்படி குருமார்கள், உறவினர்கள், நண்பர்கள், அன்பர்கள் யாவரையும் பணிவோடு வேண்டுகின்றோம்.

அமரரின் நல்லடக்க நிகழ்வுகளில் நேரில் வந்து கலந்தும் மலர்வளையங்கள் வைத்தும் கண்ணீர் அஞ்சலிகளை செலுத்தியும் அஞ்சலி உரைகளை நிகழ்த்தியும் மற்றும் பல வழிகளில் உதவி, எமக்கு ஆறுதல் அளித்த குருமார்கள், நண்பர்கள், அன்பர்கள், உறவினர்கள் யாவர்க்கும் எமது இதயபூர்வமான நன்றிகளையும் இத்தால் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*குருமனை, தென்னிந்தியத் திருச்சபை, அளவெட்டி.* (14210)

திரு.J.அன்று குடும்பம் (மகன்),
அருட்திரு. T.E.அசோக்குமார் குடும்பம் (மகள் குடும்பம்).

---

# ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணுலகில் 18 - 06 - 1942



விண்ணுலகில் 20 - 01 - 2002

## திருமதி இராசதுரை சுகிர்தலட்சுமி

திதி - 08.02.2003 ஸப்தமி

அன்பாய் அரவணைத்து கண்ணாகக் காத்தீர்கள்
சொன்னால் புரியாத சோகம், எம் சோகம் அம்மா!
பாசத்தைப் பொழிந்து பண்பைப் போதித்தாயே
என்ன செய்வோம் அழுகின்றோம் அதனால்
அத்துயரம் மாறிடுமா?
அந்த நாள் நினைவுகள் எம்மை விட்டு நீங்கா
எந்நாளும் உங்கள் நினைவலைகள் நிலைத்திருக்கும்.
*உங்கள் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*தாவடி தெற்கு, கொக்குவில்.* (14219)

துயரில் தோய்ந்த:
கணவர், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

---

# சுன்னாகம் பல நோ.கூ .சங்கம் (வ-து) சுன்னாகம்

# கிராமிய வங்கிகளின் மீதிகளை உறுதிப்படுத்தல்

மேற்படி சங்கத்தின் 2001/2002இற்கான வருடாந்த கணக்காய்வு நடைபெற்றுக்கொண்டிருப்பதால் இணுவில், சுன்னாகம், ஏழாலை, குப்பிழான் ஆகிய கிராமிய வங்கிகளின் வாடிக்கையாளர்கள் கீழ்க்காட்டப்பட்ட திகதிகளில் கிராமிய வங்கிகளிலுள்ள தங்களின் மீதிகளைச் சரிபார்த்துக்கொள்ளும் பொருட்டு, தங்களின் கையேட்டுப் புத்தகங்கள், நிலையான வைப்புச் சான்றிதழ்கள் ஆகியவற்றை நேரில் சமர்ப்பித்து, மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு தயவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

| கிராமிய வங்கியின் பெயர் | திகதி | கையேடு உறுதிப்படுத்தும் இடம் |
|---|---|---|
| சுன்னாகம் கிராமிய வங்கி | 10.02.2003 திங்கள்<br>11.02.2003 செவ்வாய் | சுன்னாகம் கிராமிய வங்கி<br>மு.ப. 9.00 - பி.ப. 3.00 மணி வரை |
| குப்பிளான் கிராமிய வங்கி | 13.02.2003 வியாழன் | சுன்னாகம் கிராமிய வங்கி<br>மு.ப. 9.00 - பி.ப. 3.00 மணிவரை |
| ஏழாலை கிராமிய வங்கி | 19.02.2003 புதன்<br>20.02.2003 வியாழன் | ஏழாலை கிராமிய வங்கி<br>மு.ப. 9.00 - பி.ப. 3.00 மணிவரை |
| இணுவில் கிராமிய வங்கி | 14.02.2003 வெள்ளி<br>17.02.2003 திங்கள்<br>18.02.2003 செவ்வாய் | இணுவில் கிராமிய வங்கி<br>மு.ப. 9.00 - பி.ப. 3.00 |

05.02.2003 (C26435)

சி.குமாரவேல்
தலைவர்,
சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்.

# கல்வியங்காடு சந்தைப் புனரமைப்பு தூர நோக்குடன் செயற்படுத்தப்படுமா?

செய்திக் கட்டுரை

**ந.சிவயோகராஜா**
*நல்லூர் செய்தியாளர்*

கல்வியங்காடு சந்தை என அழைக்கப்படும் நல்லூர் பொதுச் சந்தை விரைவில் புனரமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த வாரம் யாழ். செயலகத்தில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இது தொடர்பான முடிவு மேற்கொள்ளப்பட்டதுடன் இப்பணிக்கென எழுபது இலட்சம் ரூபா நிதியினை ஒதுக்கீடு செய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

குடாநாட்டில் இயங்கிவரும் திருநெல்வேலிச் சந்தை, சுன்னாகம் சந்தை, சாவகச்சேரி சந்தை, கொடிகாமம் சந்தை போன்ற விரல்விட்டு எண்ணிடக்கூடிய முக்கிய சந்தைகளுள் நல்லூர் பொதுச்சந்தையும் ஒன்று. ஆனால், நீண்டகாலமாக அபிவிருத்திப் பணிகள் புறக்கணிக்கப்பட்டமையினால் அதன்நிலை கழுதை தேய்ந்த கதையாய் ஆகத் தொடங்கியது. நல்லவேளையாக கட்டெறும்பாய் ஆவதற்கு முன்னே புனரமைப்புப் பணிகள் மேறகொள்ள முடிவு செய்யப்பட்டமை வரவேற்கத்தக்க விடயமாகும்.



சந்தையில் புதிதாக அமைக்கப்பட்டுவரும் கட்டடம்

ஒரு நூற்றாண்டிற்கு மேற்பட்ட காலப் பழைமையை உடைய இச்சந்தைக் கட்டடம் செங்குந்த மகாசங்கம் என்னும் அமைப்பு வழங்கிய காணியில் அமைக்கப்பட்டதொன்றாகும். வடக்கே ஆடியபாதம் வீதியினையும் மேற்கே பருத்தித்துறை வீதியினையும் ஏனைய இருபக்கங்களில் இருகுறுக்கு வீதிகளையும் கொண்டு நாற்புறமும் வீதிகளை உடைய பெருஞ்சந்தையாக மாநகர எல்லைக்குள் அமைந்துள்ளது. காய் கறிவகைகள், மீன்வகைகள், இறைச்சி வகைகள், பழ வகைகள் என அனைத்திற்கும் தனியான விற்பனை அமைவிட வசதிகளைக் கொண்டுள்ளது.

இச்சந்தைப் பகுதியை சூழ அமைந்துள்ள இருபாலை, திருநெல்வேலி, கோப்பாய், நீர்வேலி போன்ற விவசாயக் கிராமங்களில் செய்கை பண்ணப்படும் காய்கறிகள், கீரை வகைகள், பழவகைகள் என்பன இச்சந்தையில் பெருமளவில் சந்தைப்படுத்தப்படுகின்றன. இவைதவிர, தூரப் பகுதிகளிலிருந்து கொண்டுவரப்படும் கிழங்கு வகைகள் மற்றும் காய்கறிவகைகளும் விற்பனை செய்யப்படுவதுண்டு. அத்துடன் குடாநாட்டின் கடற் பகுதிகளில் பிடிக்கப்படும் மீன்களில் கணிசமான பகுதி விற்பனைக்காக இங்கு கொண்டு வரப்படுகின்றன.

"முன்னைய காலப் பகுதிகளில் காலைச்சந்தை, மாலைச்சந்தை என இருவேளைகளில் மீன் சந்தை இங்கு கூடுவதுண்டு. இருவேளைச் சந்தைகளிலும் பெருமளவு சனக்கூட்டம் முண்டியடித்துக் கொண்டு உடன் பிடிக்கப்பட்ட மீன்களை வாங்க வருவதுண்டு". என்று முதியவர் ஒருவர் தனது இளமைக் கால நினைவுகள் பற்றி குறிப்பிடும்போது தெரிவித்தார்.

இவற்றை விட இரண்டு இறைச்சிக கடைகளையும் இறைச்சிக் கோழிகள் விற்பனை செய்யப்படும் பகுதியும் பலநோக்குச் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை விற்பனை நிலையம் ஒன்றையும் இச்சந்தை வளாகத்தினுள் காணலாம்.

இருபாலை கிழக்கு, இருபாலை தெற்கு, திருநெல்வேலி கிழக்கு, சங்கிலியன்தோப்பு, கல்வியங்காடு போன்ற மக்கள் செறிந்து வாழும் கிராம சேவகர் பிரிவுகளுக்கு மையமாக அமைந்து பெரும் வர்த்தக நடவடிக்கைகளை ஏற்படுத்திய இச்சந்தை, தற்போது தனது முன்னைய பொலிவினை இழந்து வீழ்ச்சி நிலை நோக்கிச் சென்றுகொண்டிருப்பது இப்பிரதேச வாழ் மக்களை குறிப்பாக வர்த்தக சமூகத்தினரை பெரும் கவலைககுள்ளாக்கியுள்ளது.

அபிவிருத்தி நடவடிக்கைகளில் இச்சந்தைப் பிரதேசம் நீண்டகாலம் புறக்கணிக்கப்பட்டிருந்தமையே வீழ்ச்சி நிலைக்குக் காரணமென இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். ஏனைய சந்தைப் பகுதிகள் அபிவிருத்தி செயயப்பட்டு அவற்றைச் சூழ நவீன சநதைக் கடைத் தொகுதிகள் அமைக கப்படுகையில் அங்கு ஏற்பட்ட வியாபார அதிகரிப்பு நடவடிக்கைகள் காரணமாக வியாபாரிகள் படிப்படியாக அச்சந்தைப் பகுதிகளை நோக்கி நகரத் தொடங்கினர். இவர்களை அடியொற்றி வாடிக்கையாளர்கள் பலரும் தமது கொள்வனவுச் சந்தையினை மாற்றிக கொள்ள நல்லூர் பொதுச் சந்தையின வளர்ச்சி இறங்குமுகமாக மாறத் தொடங்கியது.

இப்பகுதியில் தமது வர்த்தக முயற்சிகளை மேற்கொள்ள சிலர் முன்வந்தபோதும் அதற்குரிய கட்டட அமைப்புகள் இல்லாமையாலும் தேவை கருதி புதிய நவீன சந்தைக கட்டடங்கள் அமைக்கப்படாமையாலும் விரும்பியோ, விரும்பாமலோ அவர்கள் வேறு பகுதிகளில் தமது தொழில் முயற்சிகளை ஆரம்பிக்க நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

முன்னைய காலப் பகுதிகளில் அரசியல் கூட்டங்களும் தேர்தல் பிரசாரக் கூட்டங்களும் இடம்பெறும் முக்கிய மையமாக இச்சந்தை வளாகம் திகழ்ந்தது. மிகப்பிரமாண்டமான பிரசாரக் கூட்டங்கள் இங்கு இடம்பெறுவதுண்டு. இங்கு இடம்பெறும் கூட்டங்களுக்கு பெருமளவு மக்கள் கூட்டம் திரள்வதுண்டு. அனல் பறக்கும் அரசியல் வீராவேசப் பேச்சுக்களும் மணங்குளிரும் தேர்தல் கால வாக்குறுதிகளும் அள்ளி வீசப்பட்ட வரலாறு இச்சந்தை வளாகத்திற்கு உண்டு. ஆனால், இவை எவையும் சந்தை வளர்ச்சிக்கு எவ்வித பங்களிப்பும் செய்யவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணியின் கோட்டையென முத்திரை குத்தப்பட ஏதுவாயிருந்தனவே தவிர உருப்படியாய் வேறு எதுவும் இடம்பெறவில்லை. அள்ளி வீசப்பட்ட வேகத்தில் வாக்குறுதிகளும் மறக்கப்பட்டமையால் சந்தை அபிவிருத்தியானது வெறும் பேச்சளவில் மாத்திரம் இருந்தது.



நல்லூர் சந்தையின் ஒரு தோற்றம்

இப்பிரதேச நலனில் அக்கறை கொண்ட ஊர்ப் பிரமுகர்கள், வர்த்தகர்கள், பொது அமைப்புகள் சந்தை அபிவிருத்திப் புனரமைப்புத் தொடர்பாக பல கோரிக்கைகளையும் வேண்டுகோள்களையும் காலத்திற்குக் காலம விடுத்து வந்தபோதிலும் அவையெவையும் கருத்திற் கொள்ளப்படவில்லை. இச்சந்தையின் ஆளுகையைத் தன் வசம் கொண்டுள்ள யாழ் மாநகரசபை தன்னிடம் நிதியில்லையெனப் பல தடவைகள் கையை விரித்திருந்தது. இதேவேளை, இச்சந்தையைக் குத்தகைக்கு வழங்கி ஆண்டு தோறும் பெருமளவு நிதியினைத் தனது வருமானமாக மாநகரசபை பெற்று வருவதனை இப்பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். நடப்பு வருட சந்தைக் குத்தகைப் பணமாக 5 லட்சம் ரூபா பெறப்பட்டுள்ளதாகவும் சந்தைப் பகுதியினுள் அமைந்துள்ள இரண்டு ஆட்டிறைச்சிக் கடைகள் குத்தகைக்கு வழங்கப்பட்டதன்மூலம் இரண்டு லட்சம் ரூபாவிற்கு அதிகமான தொகை வருமானமாகப் பெறப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கும் இப்பிரதேச வாசிகள், வருமானத்தைப் பெருமளவில் பெற்றுக்கொள்ளும் மாநகரசபை அதனை அபிவிருத்திப் பணிகளில் புறந்தள்ளி இருப்பது குறித்து தமது விசனத்தைத் தெரிவித்துள்ளனர்.

இருப்பினும், இவ்வாறு விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு இணங்க கடந்த ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வீ. ஆனந்தசங்கரி, நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் ஆகியோர் தலா 3 லட்சம் ரூபா வீதம் 6 லட்சம் ரூபாவினை சந்தை அபிவிருத்திப் பணிகளுக்கு தமது பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து வழங்கியிருந்தனர். இவ்வாறு வழங்கப்பட்ட நிதியினைக் கொண்டு முழுமையான புனரமைப்பு அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ள முடியாமையினால் கிடைக்கும் நிதிக்கு ஏற்ப பகுதி பகுதியாக ஒரு நவீன சந்தைக் கடைத்தொகுதி ஒன்றினை வளாகத்தில் அமைப்பதென முடிவு செய்யப்பட்டது.

மேற்கொள்ளப்பட்ட முடிவிற்கமைய தற்போது சந்தை வளாகத்தில் தென்மேற்கு மூலையில் மூன்று கடைகள் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

அதனை ஈடுசெய்ய மாநகரசபையிலிருந்து நிதியினை பெற்று கட்டட வேலைகளை நிறைவுசெய்ய மாநகர சபை கூட்டணி உறுப்பினர் இரத்தினசபாபதி நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளதாக அறியமுடிகிறது. இந் நடவடிக்கையின் பிரகாரம் பற்றாக்குறை நிதியினை மாநகரசபை தனது சபை நிதியிலிருந்து வழங்கும் என்றும் கடைகள் பாவனைக்கு வழங்கப்படும்போது பெறப்படும் நிதியிலிருந்து இத்தொகை மாநகர சபைக்கு மீளச் செலுத்தப்படவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இந்நிலையில் கல்வியங்காட்டுச் சந்தைப் புனரமைப்புக்கென 70 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்ற செய்தி வெளியான போது இப்பிரதேச மக்களும் வர்த்தக சமூகத்தினரும் மகிழ்ச்சியும் உற்சாகமும் அடைந்துள்ளனர்.

வழங்கப்படும் நிதி உரிய முறையில் சிறந்த திட்டமிடல்மூலம் பயன்படுத்தப்படவேண்டும். நல்லூர் பொதுச் சந்தைப் பிரதேசம் அதிக மக்கள் செறிவு நிறைந்த பிரதேசம் என்பதாலும், யாழ். நகருக்கு மிக அண்மையில் அமைந்திருப்பதாலும் துரித வளர்ச்சி அடையக்கூடிய சார்பு நிலைகள் அதிகமாகக் காணப்படுகின்றன. எனவே இங்கு மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் எவையாயினும் அவை நவீன நகர மயமாக்கல்களுக்கு ஏற்ப நீண்ட கால நோக்கினை அடிப்படையாகக் கொண்டே மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும். அத்துடன் தொடர்ச்சியாக இப்பகுதிக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பது நிச்சயமான ஒன்றல்ல. எனவே வழங்கப்படும் நிதியின் மூலம் விரிவுபடுத்தக்கூடிய ஓர் உறுதியான அத்திபாரம் இடப்படவேண்டியதும் அவசியமானதாகும்.

சந்தை வளாகத்தின் மேற்குப்புற எல்லையாக அமைந்திருப்பது பருத்தித்துறை வீதியாகும். குடாநாட்டின் முக்கிய நெடுஞ்சாலைகளுள் இதுவும் ஒன்றாகும். நகர மயமாக்கலின் வளர்ச்சிப் போக்குகளுக்கு ஏற்ப இவ் வீதியில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடமுறைகளின் கீழ் இவ் வீதி அகலப்படுத்தப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாகக் காணப்படுகின்றன. எனவே, இதைக் கருத்திற்கொள்ளாது ஏதாவது கட்டடங்கள் அமைக்கப்படுமாயின் அவற்றை இடித்து அகற்றும் அதிகாரம் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உண்டு என்பதனை எவரும் மறந்துவிடலாகாது. ஆகவே, வீதி அகலப்படுத்தப்படும் என்பதனைக் கருத்திற்கொண்டே சந்தை வளாகத்தினுள் எந்தவித நிர்மாணப்பணியும் மேற்கொள்ளப்படவேண்டும். மேலும், வாகனத் தரிப்பிடங்கள் பயணிகள் நடைபாதை, போன்ற நகரத்திற்குரிய அம்சங்களும் கவனத்தில் எடுக்கப்படவேண்டும்.

(மிகுதி நாளை)

## தமிழர்களுக்காக தமிழ் மென்பொருள்கள்

இந்தியாவின் **Softview** மற்றும் **Chennai Kavikal**ளின் இலங்கைக்கான அங்கீகரிக்கப்பட்ட ஏக விநியோகஸ்தர்கள் **Micro PC Systems** மட்டுமே.

வீசேட சலுகை விலைகளில்

Soft View

Rs.590/= Rs.590/= Rs.590/= Rs.1,490/=

Inscript fonts

400எழுத்துருக்கள் Rs.12,500/=

சென்னை கவிகள்

"சக்தி" Shakthi Rs.3,750/-

தமிழில் MS Office, மற்றும் இன்ரநெட் இ.மெயில்

Rs.1,850/-

தமிழில் Games

Rs.950/- Rs.490/-

**அறிவித்தல்:** Softview மற்றும் சென்னை கவிகளின் மென்பொருள்களை எமது அனுமதி இன்றி விற்பனைசெய்பவர்கள்மீது இலங்கை மற்றும் இந்திய சட்ட விதிகளுக்கமைய கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

விற்பனை முகவர்களாக தொழிற்பட விரும்புபவர்கள் எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

இலங்கைக்கான ஏக விநியோகஸ்தர்கள்

MICRO PC SYSTEMS

15,36ஆவது ஒழுங்கை, வெள்ளவத்தை. 074-516764, 074-513235.
82, புதிய செட்டித்தெரு, கொட்டாஞ்சேனை. 074-619673, 074-613617.
175/3 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 0777-308417.
37, முதலாம் குறுக்குத்தெரு, வவுனியா. 024-22606.
62, வித்தியாலயம் றோட், திருகோணமலை. 026-27521

# இந்திய அணி படுதோல்வி

நேற்றுமுன்தினம் நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் இந்திய அணி, க்வா ஸுலு நேட்டால் அணியிடம் 32 ஓட்டங்களால் தோல்வியுற்றது.

பிரபல துடுப்பாட்ட வீரர்களைக் கொண்ட இந்திய அணி 38.2 ஓவர்களில் 158 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுக்களையும் இழந்தமை குறிப்பிடத்தக்கது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நேட்டால் அணி 9 விக்கெட் இழப்பிற்கு 190 ஓட்டங்களைப் பெற்றது.

இந்திய வீரர்களில் ஷேவாக் 42 ஓட்டங்களைப் பெற்றார். அகர்கர் 26 ஓட்டங்களையும் ஹர்பஜன் 25 ஓட்டங்களையும் பெற்றனர். கங்குலி (6), டென்டுல்கர் (9), மொங்கியா (0), கை.ப்(2), பங்கார் (1) ஆகியோர் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

நேட்டால்பந்துவீச்சாளர்களில் யாதீன் சிங் 38 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

(ம-5)

# இலங்கை அணிக்கு மீண்டும் வெற்றி!

உலகக் கிண்ணப் போட்டிக்கான இலங்கை அணி தனது இரண்டாவது பயிற்சிப் போட்டியில் 5 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியது.

தென்னாபிரிக்காவின் 'பிரீ ஸ்டேட்' அணியுடனான இப்போட்டி நேற்றுமுன்தினம் புளும் பொன்ரேன் நகரில் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய பிரீ ஸ்டேட் அணி 7 விக்கெட் இழப்பிற்கு 182 ஓட்டங்களைப் பெற்றது.

முதலாவது விக்கெட்டுக்காக அந்த அணி 92 ஓட்டங்களைக் குவித்தது. புலஸ்தி, குணரட்ண, ரஸல் ஆர்னோல்ட் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களை வீழ்த்தி பிரீஸ்டேட் அணியை தடுமாறச் செய்தனர். முரளிதரன், ஜயசூரிய, நிசங்க ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணியில் ஜயசூரிய (13), திலகரத்ன(0) ஆகியோரை பிரீ ஸ்டேட் பந்து வீச்சாளர் வாண்டேர்வத் தனது அடுததடுத்த ஓவர்களில் வீழ்த்தினார்.

அரவிந்த (9), அவிஸ்க (24) ஆகியோர் சொற்ப ஓட்டங்களுடன் களத்திலிருந்து அகன்றனர். இதனால், 77 ஓட்டங்களுடன் 4 விக்கெட்டுகளை இழந்தது இலங்கை அணி. அதன்பின் சங்ககார 29 ஓட்டங்களைப் பெற்றார்.

எனினும் மஹேல ஜயவர்தன (58), ரஸல் ஆர்னோல்ட் (30) ஆகியோர் 6 ஆவது விக்கெட்டுக்காக 53 ஓட்டங்களைப் பெற்று அணியை வெற்றிபெறச் செய்தனர். (ம)

# 7 ஆவது உலகக் கிண்....

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

டியும் வெகு சொற்ப ஓட்டங்களுக்குள்ளேயே ஆட்டமிழந்தனர். களமிறங்கிய அதிரடி நாயகன் அப்ரிடியை தனது முதல் ஓவரிலேயே திருப்பி அனுப்பினார் மஹ்மூத். அடுத்து வந்த இஜாஸ் அஹமட்டை இரண்டாவது ஓவரிலேயே பிடுங்கி எறிந்து வாத்து ஆக்கி அனுப்பினார் அஹமட். மறுமுனையில் 9 ஓட்டங்களுடன் ஆடிக்கொண்டிருந்த நம்பிக்கை நட்சத்திரம் அன்வரை 7ஆவது ஓவரில் அழகாக 'ரன் அவுட்' செய்தார் மஷ்ஹூட். பாகிஸ்தானுக்கு அவமானம். கத்துக்குட்டிகள் முன் பெரும் வீரர்கள் எல்லோரும் மண்டியிட்டனர். 26 ஓட்டங்களுக்கு 3விக்கெட்டுக்களை இழந்து திணறியது அந்த அணி. தொடர்ந்து வந்த இன்ஸமாம் உல் ஹக்கும் சலிம் மாலிக்கும் அணியை தூக்கி நிறுத்துவார்கள் என்று நினைக்க, விதி மாறி நினைத்தது. 7 ஓட்டங்களுடன் இன்ஸமாமும் 5 ஓட்டங்களுடன் மாலிக்கும் 'பெவிலியனைப்' பார்க்கத் திரும்பினர். இப்போது 13ஆவது ஓவரில் வெறும் 42 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்கள் இழப்பு என்ற மிகப் பரிதாபமான நிலை.

தொடர்ந்து வந்த அஸார் மஹ்மூத்தும் வஸிம் அக்ரமும் மட்டும் சற்று நிலைத்தாடி நம்பிக்கையை ஏற்படுத்தினர். ஆனால், இருவரும் 29 ஓட்டங்களை பெற்ற நிலையில் ஆட்டமிழந்தனர். தொடர்ந்து வந்தவர்களும் 25 ஓட்டங்களுக்குள் சுருள, மொத்தமாக 161 ஓட்டங்களுக்குள் சரிந்தது பாகிஸ்தான். தங்களுக்கு உதிரிகளாக 40 ஓட்டங்களைத் தந்த பாகிஸ்தானுக்கு நன்றி செலுத்த வேண்டும் என்று எண்ணினார்களோ என்னவோ, பங்களாதேஷியர்கள் போனால் போகட்டும் என்று 29 உதிரிகளை பாகிஸ்தானுக்கு வாரி வழங்கினார்கள். ஆனாலும் பாகிஸ்தானால் வெற்றிபெற முடியவில்லை. பாகிஸ்தான் தோற்றபோது 6 ஓவர்கள் அதற்கு எஞ்சியிருந்தன என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். மஹ்மூத் 2 'மெய்டின்'கள் உட்பட 10 ஓவர்களில் 31 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களைச் சரித்தார். பங்களாதேஷுக்கு அன்று பொன்னான நாள்.

இந்தத் தொடரின் மறக்க முடியாத, இதிலென்ன என்றுமே மறக்க முடியாத ஆட்டம் ஆஸி. - தென்னாபிரிக்கா இடையேயான அரையிறுதி ஆட்டம்தான். சுப்பர் சிக்ஸுக்குப் பின்னர் மதங்கொண்ட ஆஸி. அணிக்கு சவாலான ஆட்டமும் அதுதான். ஆனால், அதில் திறம்பட ஆடி, தான் ஒரு சிறந்த கப்டன் என்பதை மீண்டும் நிரூபித்தார் ஸ்ரீவ் வோவ். அந்த ஆட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னர் தென்னாபிரிக்காதான் வெல்லும் என்று அனைவரும் எதிர்பார்த்திருந்தனர். லண்டன் வந்திருந்த ஆஸ்திரேலிய பத்திரிகையாளர்களும் அதிகாரிகளும் ஆட்டம் ஆரம்பமாவதற்கு முன்னரே, அன்று மாலை நாடு திரும்புவதற்கு விமான ரிக்கெட்டுக்கள் கிடைக்குமா என்று விசாரித்து வைத்தனர். சிலர் பதிவும் செய்தனர். ஆஸ்திரேலியா அரையிறுதியுடன் தொடரிலிருந்து வெளியேறும் என்று அவர்கள் அவ்வளவு உறுதியாக நம்பினார்கள்.

ஆனால், மதங்கொண்ட ஆஸி. தென்னாபிரிக்காவை மூர்க்கமாய் மோதிப் புறந்தள்ளியது. ஜூன் 17 ஆம் திகதி எட்ஜ்பஸ்டன் மைதானத்தில் நடந்தது இந்த ஆட்டம். நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணித் தலைவர் ஹன்ஸி குரோஞ்ஜே, ஆஸி. அணியை துடுப்பெடுத்தாட அழைத்தார். களமிறங்கியவர்கள் ஆஸியின் அதிரடி நாயகன் கில்கிறிஸ்ட்டும், மார்க் வோவ்வும். எதிரே பந்துவீச வேகப் பந்துவீச்சாளர் ஷோன் பொலக். முதலாவது ஓவரின் ஐந்தாவது பந்து, முன்னே வந்து செலுத்தி ஆடமுற்பட்டார் மார்க் வோவ். பந்து அவர் எதிர்பார்த்தபடி வரவில்லை. மட்டையின் விளிம்பை உரசிக்கொண்டு பின்னே இதற்காகவே காத்து நின்ற மார்க் பௌச்சரின் கைகளில் சென்று சேர்ந்தது. வாத்து(டக்) நடையில் ஓட்டம் எதுவும் பெறாமல் திரும்புகின்றார் மார்க் வோவ். தொடர்ந்து வந்த ரிக்கி பொன்டிங், தரித்து நின்ற கில்கிறிஸ் உடன் இணைகின்றார். இருவரும் இடையிடையே பந்துகளை விளாச ஓட்ட எண்ணிக்கை சீராக உயர்கின்றது. 48 பந்துகளில் 3 பௌண்டரிகள், ஒரு சிக்ஸர் சகிதம் 37 ஓட்டங்களைப் பெற்றிருந்த பொன்டிங், அலன் டொனால்ட்டின் பந்தில் ஆட்டமிழந்தார். 54 ஓட்டங்களுக்கு அணி தனது 2ஆவது இலக்கை இழந்தது. தொடர்ந்து வந்தவர் லீமன். என்ன அவசரமோ தெரியவில்லை, வந்த வேகத்தில் திரும்பிப்போனார். 4 பந்துகளைச் சந்தித்து ஓர் ஓட்டத்தைப் பெற்றிருந்த அவரை அலன் டொனால்ட் 'பெவிலியனு'க்குத் திரும்பினார். மறுபுறத்தில் கில்கிறிஸ்ட் 39 பந்துகளில் ஒரே ஒரு பௌண்டரி, ஒரு சிக்ஸ் சகிதம், தன் வழக்கமான ஆட்டத்துக்கு மாறாக நின்று நிதானமாக ஆடி 20 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். அந்நிலையில் சகலதுறை ஆட்டக்காரர் ஜக் கலிஸின் பந்தில் டொனால்டிடம் பிடிகொடுத்து அவர் வெளியேறினார்.

ஆஸ்திரேலியா, எல்லோரும் எதிர்பார்த்தபடி மிக மோசமாகவே விளையாடிக்கொண்டிருந்தது. 17 ஓவர்களில், 67 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை இழந்திருந்தது அது. முன்னணி வீரர்கள் எவரும் அரைச் சதம் கூட எடுக்கவில்லை என்ற மோசமான நிலை. ஆனால், அடுத்து வந்த அணித் தலைவர் ஸ்ரீவ் வோவ்வும் மைக்கல் பெவனும் நின்று நிதானமாக பொறுப்புணர்வுடன் ஆடினர். அணியின் எண்ணிக்கை கொஞ்சம் கொஞ்சம் மேல் நோக்கி நகரத் தொடங்கியது. தொடர்ந்து வந்த 23 ஓவர்களில் எந்த விக்கெட்டையும் சரியவிடாமல் பொறுப்புடன் ஆடினர் இருவரும். ஸ்ரீவ் வோவ் 76 பந்துகளில் 6 பௌண்டரிகளையும் ஒரு சிக்ஸையும் விளாசி 56 ஓட்டங்களை அடித்திருந்தபோது ஷேன் பொலக்கின் பந்தில் பின்னால் பௌச்சரிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். அவருக்குப் பதிலாக வந்த தோமஸ் மோடியை தனது வேகத்தால் வாத்து ஆக்கினார் பொலக். வந்த வேகத்தில் 'பெவிலியனைப்' பார்க்கத் திரும்பிக்கொண்டிருந்த மோடியைத் தாண்டி மைதானத்துள் நுழைந்தவர் நட்சத்திர சுழல் பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன். அவர் பெவனுடன் சேர்ந்து அழகாக ஆடினார். ஒரு புறத்தில் பெவன் ஒன்றுகளும் இரண்டுகளுமாக ஓட்டங்களைச் சேகரிப்பதில் கவனம் செலுத்த அவருக்கு சந்தர்ப்பங்களைக் கொடுக்கும் வகையில் ஆடிக்கொண்டிருந்தார் வோர்ன். அவர் 24 பந்துகளில் ஒரு பௌண்டரியுடன் 18 ஓட்டங்களை அடித்தார். பின், ஆட்டமிழந்தார். ஆஸி. அணி 207 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டை இழந்தது.

தொடர்ந்து நடந்தது பொலக்குக்கும் டொனால்டுக்கும் மட்டுமே வெளிச்சமானது. பின்னால் வந்த பௌல் ரீபெல், டேமியன் பிளமிங் ஆகியோர் வாத்துக்களாகித் திரும்பினர். மறுபுறத்தில் நிலையாக நின்று ஆடிக்கொண்டிருந்த பெவன், இறுதி ஓவர் என்பதால் முன்னேறித் தாக்குவதில் ஈடுபட்டார். ஆனால், பந்துகள் அவருக்கு வாய்க்கவில்லை. 49 ஆவது ஓவரின் இரண்டாவது பந்தில் (பொலக்கின் ஓவர்) பௌச்சரிடம் பிடி கொடுத்து அவர் ஆட்டமிழந்தபோது 101 பந்துகளில் 6 பௌண்டரிகள் அடங்கலாக 65 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். 213 ஓட்டங்களுக்குள் எல்லாம் முடிந்தது. ஆஸ்திரேலியாவின் 10 விக்கெட்டுக்களில் பொலக்கும் டொனால்டுமே 9 விக்கெட்டுக்களைப் பகிர்ந்துகொண்டனர். பொலக் 9.2 ஓவர்களில் ஒரு 'மெய்டினு'டன் 36 ஓட்டங்களை மட்டும் கொடுத்து; 5 விக்கெட்டுக்களைக் கொய்தார். டொனால்ட் 'மெய்டினு'டன் கூடிய 10 ஓவர்களை வீசி வெறும் 32 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களைக் கொய்தார்.

தென்னாபிரிக்க அணியின் இடையில் இறங்கி இம்மை வறுமையின்றி விளாசித் தள்ளும் லான்ஸ் குளூஸ்னர் உட்பட பெரும் துடுப்பாளர் அணி இருக்கும்போது 213 ஓட்டங்கள் ஒரு பெரும் இலக்கே அல்ல. வெற்றி என்ற நம்பிக்கையுடன் களமிறங்கியது தென்னாபிரிக்கா. ஷேன் வோர்ன் என்ற மாயப் பந்துவீச்சாளர் தன் கைவரிசையைக் காட்டும் வரை அதற்கு அந்த நம்பிக்கை இருக்கத்தான் செய்தது. களமிறங்கிய கிப்ஸ், கேர்ஸ்டன் ஜோடி அழகாக ஆரம்பித்து அருமையாகத் தொடர்ந்தது. இருவருமாகச் சேர்ந்து ஆஸி. வேகப்பந்து வீச்சாளர்களின் பந்துகளை துவம்சம் செய்தபடி இருந்தனர். நிலைமையை அவதானித்த ஸ்ரீவ் வோவ், சீக்கிரமே வோர்னை பந்து வீச அழைத்தார். 15 ஓவர்களுக்கு முன்பே பந்து வீச வந்த வோர்ன், தான் யார் என்பதை தென்னாபிரிக்கர்களுக்கு ஒரு முறை மெய்ப்பித்துக்காட்டினார். 36 பந்துகளில் 6 பௌண்டரிகள் உட்பட 30 ஓட்டங்களை விளாசிக்கொண்டிருந்த கிப்ஸின் விக்கெட்டை 13 ஆவது ஓவரில் பிடுங்கி எறிந்தார் வோர்ன். 48 ஓட்டங்களுக்கு தன் முதல் விக்கெட்டை இழந்தது தென்னாபிரிக்கா. மேலும் 5 ஓட்டங்கள் பெறுவதற்குள் 42 பந்துகளில் ஒரு பௌண்டரியை அடித்து 18 ஓட்டங்களைப் பெற்றிருந்த கேர்ஸ்டனின் விக்கெட்டையும் பிடுங்கி எறிந்தார் வோர்ன். 53 ஓட்டங்களுக்கு 2 ஆவது விக்கெட் சரிந்தது. தொடர்ந்து வந்தவர் அணித் தலைவர் குரொஞ்ஜே. அவரை மைதானத்தில் நிற்கக்கூட விடவில்லை வோர்ன். வெறும் இரண்டே பந்துகளில் குரொஞ்ஜேயை வாத்தாக்கினார் அவர். வோர்னின் பந்தில் மார்க் வோவ்விடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார் குரொஞ்ஜே. மட்டையில் பட்டு சீறிய பந்தை இடதுபுறம் பாய்ந்து வெகு அழகாகப் பிடித்தார் மார்க்வோ. இந்தத் தொடரின் மிக அருமையான பிடி அது. குரொஞ்ஜேயை இழந்து தென்னாபிரிக்கா 53 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டை காவு கொடுத்தது.

மறுபுறத்தில் விக்கெட்டுக்கள் சரிவதைக் கண்டு அடித்தாடுவதே தப்பு என்பது போன்று பந்துகளைத் தின்றபடி நின்றார் கலிஸ். 6 ஓட்டங்களைப் பெறுவதற்காக 30 பந்துகளைத் தின்ற அவரை அழகாக களத்தடுப்பு செய்து 'ரன் அவுட்டாக்கினார் மைக்கல் பெவன். ஆஸி. அணி போன்றே தென்னாபிரிக்காவின் முன்னணி வீரர்களும் அரைச் சதத்தைக் கூடப் பெறாமல் ஆட்டமிழந்தனர்.

களத்தில் இணைந்த சகலதுறை ஆட்டக்காரர் ஜக் கலிஸும் ஜொன்டி ரோட்ஸும் அணியை சற்றுத் தூக்கி நிறுத்தினர். ஒன்றும் இரண்டும் எப்போதாவது சில பௌண்டரிகளும் என்று அவர்கள் இருவரும் மெதுவாக அதே நேரம் சீராக ஓட்டங்களைப் பெற்றபடி இருந்தனர். 40 ஓவர்களில் 145 ஓட்டங்களை எட்டியது தென்னாபிரிக்கா. 55 பந்துகளில் 2பௌண்டரிகள், ஒரு சிக்ஸருடன் 43 ஓட்டங்களை விளாசிய ஜொன்டி ரோட்ஸ், பௌல் ரீபிலின் பந்தில் பெவனிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். 145 ஓட்டங்களுக்கு 5 விக்கெட் இழப்பு, 41 ஓவர்கள் முடிந்திருந்தன. ஆனாலும் என்ன? அதிரடி மன்னன் குளூஸ்னர் உட்பட 5 விக்கெட்டுக்கள் இன்னும் கைவசம் இருக்கின்றனவே!

45ஆவது ஓவரில் தென்னாபிரிக்காவுக்கு மீண்டும் வில்லனானார் வோர்ன். 92 பந்துகளில் 3 பௌண்டரிகளுடன் 53 ஓட்டங்களைப் பெற்று சிறப்பாக ஆடிக்கொண்டிருந்தார் கலிஸ். வோர்னின் பந்தில் ஸ்ரீவ் வோவ்விடம் பிடிகொடுத்து அவர் ஆட்டமிழந்தார். தென்னாபிரிக்காவுக்கு இப்போது நடுக்கம் எடுக்க ஆரம்பித்தது. எங்கே ஆஸ்திரேலியா வென்றுவிடுமோ என்று. ஆனாலும் நம்பிக்கை தருபவர்களாக குளூஸ்னரும் பௌச்சரும் இன்னும் இருக்கின்றார்கள். அடுத்த 6 பந்துகள் கழிவதற்குள் பொலக் ஆட்டமிழக்கிறார். அவர் 14 பந்துகளில் ஒரு பௌண்டரி ஒரு சிக்ஸர் உட்பட 20 ஓட்டங்களை விளாசினார். கலிஸ் ஆட்டமிழந்தபோது அணியின் எண்ணிக்கை 183. பொலக் ஆட்டமிழந்தபோது எண்ணிக்கை 196. ஆடவந்தவர் குளூஸ்னர். தனக்கேயுரிய பாணியில் விளாசினார், விசிக்கினார், என்ன முடியுமோ அத்தனையும் செய்தார். தென்னாபிரிக்காவின் எண்ணிக்கை சடுதியாக ஏறியது. குளூஸ்னர் ஒருபுறத்தில் அடித்துக் கொளுத்த மறுபுறத்தில் விக்கெட்டுக்களும் சரிந்தன. பௌச்சர், மெக்ராத்தின் பந்தில் 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த எல்வோதி ஓட்டம் எடுக்க அவசரப்பட ரீபிலாலும் மெக்ராத்தாலும் 'ரன் அவுட்' செய்யப்பட்டார். ஆனால் குளூஸ்னர் மறுபுறத்தில் இன்னும் நம்பிக்கை தரும் விதத்தில் பந்துகளை துவம்சம் செய்துகொண்டிருந்தார். இப்போது களத்தில் இருப்பவர்கள் அலன் டொனால்ட் மற்றும் குளூஸ்னர்.

எட்டுப் பந்துகளில் 15 ஓட்டங்கள் பெறவேண்டிய நிலை. மேலதிகமாக ஒன்று எடுத்தால் வெற்றி. குளூஸ்னர் ஆக்ரோஷமாக ஆடினார். பௌண்டரிகள் பறந்தன. வெறும் 5 பந்துகளில் 15 ஓட்டங்களைக் குவித்தார் அவர். இப்போது தென்னாபிரிக்காவுக்கு 213 ஓட்டங்கள். இரு அணிகளும் சமநிலையில். வெற்றிக்கான ஒரு ஓட்டத்தை எடுக்க 3 பந்துகள் மீதமிருக்கின்றன. ஆனால், விதி தென்னாபிரிக்காவுக்கு மீண்டும் ஒரு முறை சதி செய்தது. நான்காவது பந்தை டேமியன் பிளமிங் வீச, அதுவரை நிதானமாக ஆடிய குளூஸ்னர் பதற்றப்பட்டார்; நிலை தடுமாறினார். தன்னைத் தாண்டிச் சென்ற பந்து எங்கே போகின்றது என்றுகூடப் பார்க்கவில்லை. ஓட ஆரம்பித்தார். மறுமுனையில் நின்ற டொனால் ஓடும் எண்ணத்திலேயே இருக்கவில்லை. வேகமாகப் புறப்பட்ட குளூஸ்னர் அரைவாசிக் களத்தைத் தாண்டிவிட்டாரே என்பதற்காக அவசரமாகத், தானும் பாய்ந்தார். கையில் இருந்த மட்டை தடக்கியது. விழுந்து எழுந்து ஓடுவதற்குள் எல்லாமும் முடிந்துவிட்டது. கடைசி சந்தர்ப்பத்திலும் ஆஸ்திரேலியர்கள் சிறு தவறு செய்தனர். அவர்கள் குளூஸ்னர் தன்னிடத்தை விட்டு புறப்பட்டதும் அவருக்கு எதிர்ப்புறம் இருந்த விக்கெட்டை நோக்கி பந்தை எறிந்தனர். ஆனால் அவர் வந்து சேர்ந்து விட்டார். இருப்பினும் டொனால்ட் புறப்படவில்லை. மீண்டும் பந்து விக்கெட் கீப்பர் கில்கிறிஸ்டின் கைகளுக்குப் பறக்கின்றது. டொனால்டால் அதன் வேகத்தைத் தாண்ட முடியவில்லை. முடிவு, ஆட்டம் சமநிலை. 4 'மெய்டின்'கள் உட்பட 10 ஓவர்கள் வீசிய வோர்ன் வெறும் 29 ஓட்டங்களை மட்டும் கொடுத்து 4 விக்கெட்டுக்களைத் தகர்த்தார். அவரே அன்றைய ஆட்டநாயகன்.

ஆனாலும் சுப்பர் சிக்ஸில் இரு அணிகளுக்கும் இடையே நடந்த ஆட்டத்தில் ஆஸ்திரேலியா வென்றதனால் இறுதி ஆட்டத்திற்கு அதுவே தெரிவானது.

இறுதி ஆட்டம் ஜூன் 20ஆம் திகதி லோட்ஸ் மைதானத்தில் நடந்தது. பாகிஸ்தான் ஆஸ்திரேலிய அணிகள் ஆடின. எதிர்பார்த்தளவு விறுவிறுப்பாக அமையவில்லை அது. நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாடியது. 39 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 132 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலியா, 2 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து இலகுவாக வெற்றிபெற்றது. இறுதிப் போட்டியிலும் ஒரு 'மெய்டினு'டன 9 ஓவர்களை வீசி, 33 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களைச் சரித்த வோர்னே ஆட்டநாயகன் ஆனார்.

- கனிமொழி

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,பெப்.8

சங்கானை கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கிடையில் நடைபெற்றுவரும் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் சங்கானை சிவப்பிரகாச வித்தியாலய மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

**15 வயதுப் பிரிவு**

★ சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம் எதிர் வட்டு. மத்திய கல்லூரி.

★ சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம் எதிர் விக்ரோறியாக் கல்லூரி.

**17 வயதுப் பிரிவு**

★ சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம் எதிர் வட்டு. மத்திய கல்லூரி

★ விக்ரோறியாக் கல்லூரி எதிர் வட்டு. இந்துக் கல்லூரி

★ சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம் எதிர் சுழிபுரம் வடக்கு ஆறுமுகம் வித்தியாலயம்.

★ வட்டுமத்திய கல்லூரி எதிர் சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம்.

**19 வயதுப் பிரிவு**

★ விக்ரோறியாக் கல்லூரி எதிர் வட்டு. இந்துக்கல்லூரி

★ சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம் எதிர் வட்டு. மத்திய கல்லூரி. (எ-5)

✪ ✪ ✪

யாழ்ப்பாணம்,பெப்.8

பருத்தித்துறை உதைபந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு கழக மைதானத்தில் நடைபெறும்.

அரையிறுதி ஆட்டத்தில் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகமும் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (எ-5)

✪ ✪ ✪

சங்கானை கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்றுவரும் வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று முற்பகல் 9மணிமுதல் யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள விபரம் வருமாறு:-

**15 வயதுப் பிரிவு**

★ யாழ்ப்பாணக் கல்லூரி எதிர் அராலி இந்துக் கல்லூரி.

★ விக்ரோறியக் கல்லூரி எதிர் பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தி.

★ வட்டு மத்திய கல்லூரி எதிர் சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தி.

★ அராலி இந்துக் கல்லூரி எதிர் தொல்புரம் விக்னேஸ்வராக் கல்லூரி.

★ வட்டுமத்திய கல்லூரி எதிர் பொன்வரதராஜப் பெருமான் வித்தி.

★ பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தி. எதிர் சித்தன்கேணி ஸ்ரீகணேச வித்தி.

★ சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தி. எதிர் அராலி சரஸ்வதி மகா வித்தி.

★ சங்கானை சிவப்பிரகாசமகா வித்தி. எதிர் வட்டு இந்துக் கல்லூரி.

**17 வயதுப் பிரிவு**

★ யாழ்ப்பாணக் கல்லூரி எதிர் பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தி.

★ வட்டு. இந்துக் கல்லூரி எதிர் அராலி இந்துக் கல்லூரி.

★ சங்கானை சிவப்பிரகாச வித்தி. எதிர் வட்டு. மத்திய கல்லூரி.

★ விக்ரோறியாக் கல்லூரி எதிர் சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தி.

★ பண்ணாகம் மெய்கண்டான் வித்தி எதிர் அராலி சரஸ்வதி மகா வித்தி.

**19 வயதுப் பிரிவு**

★ வட்டு இந்துக் கல்லூரி எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி.

★ வட்டு மத்திய கல்லூரி எதிர் விக்ரோறியாக் கல்லூரி. (எ-5)

## யாழ்.பொலீஸ் நிலையத்தில் நடைபெறும்

# காணாமற்போனோர் தொடர்பான 2ஆம் கட்ட விசாரணைக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.8

வடபகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாற் போனோர் தொடர்பாகக் குற்றத் தடுப்புப் புலனாய்வுப் பிரிவினர் மேற் கொண்டுவரும் இரண்டாம் கட்ட விசாரணைகளுக்கு வருகை தருமாறு காணாமற்போனோரின் உறவினர்களுக்கு யாழ். பொலீஸ் நிலையம் அழைப்பு விடுத்துள்ளது.

காணாமற்போன பின்வருவோரின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் யாழ்.பொலீஸ் நிலையத்துக்கு வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

அமிர்தநாதர் அசோகா (கைதடி), அமிர்தநாதர் கிறிஸ்ரி ஜெயநந்தன் (கொழும்புத்துறை), அன்ரன் மகேந்திரன் ஜீவகுமார் ஸ்ரீதரன் (குருநகர்), அன்ரன் கலிஸ்ரஸ (சுதுமலை தெற்கு), அன்ரனி யூட் பாக்கியநாதர் (பாஷையூர்).

சுப்பையா கேதாரகௌரி (கைதடி), அருளானந்தன் சாள்ஸ் (இராசலிங்கம வீதி, யாழ்ப்பாணம்) அருளானந்தன் உதயகுமார் (அராலி வீதி), எவ்.எக்ஸ். றொசான் (கொழும்புத்துறை), ஜி.பரமநாதன் (அரியாலை).

எச்.எச்.குணாதன் (திருநெல்வேலி), ஜசிந்தாவரி தியாகராஜா (அரியாலை), ஜேகதாஸன் வலன்ரைன் (நாவாந்துறை), கஜேந்திரன் தேவராஜா (அரியாலை), எம்.ஹரிகரன் (அரியாலை).

மீனாட்சி தவராஜா (அரியாலை), மயில்வாகனம் மதிகரன் (அரியாலை), ஆர்.ஆர்.லெபனான் (யாழ்ப்பாணம்), ஆர்.சுரேஷ்வரன் (நெடுங்குளம் வீதி, யாழ்ப்பாணம்), எஸ்.வசந்தகுமார் (அரியாலை).

சதாசிவன் சந்திரசேகரன் (அரியாலை), சதீஸ்வரன் பரஞ்சோதி (திருநெல்வேலி), சதீஸ்வரன் (திருநெல்வேலி), செல்லத்துரை செல்வராஜா (செபஸதியன் வீதி, யாழ்ப்பாணம்), சுரேஷ்தரன் கமலசோதி (அரியாலை).

ரி.எஸ்.ஜேம்ஸ் சதீஸ் (குருநகர்), தர்ணவாசகன் (அரியாலை), துரைகதிர் (அரியாலை), வி.மஜினோட் குலசேகரம் (குருநகர்), வஸந்தகுமார் சபாரத்தினம் (அரியாலை).

நடராஜசிங்கம் வினாசித்தம்பி (பொக்கணை), ரங்கநாதன் கந்தசாமி (முள்ளி வாய்க்கால்), பரமேஸ்வரன் முத்துராசா (வட்டக்கண்டல், பள்ளப்பெருமாள் காடு), சிவபாலசிங்கம் ஆறுமுகம் (முள்ளி வாய்க்கால்), கமிஸ்ரஸ் முடியப்பு (குருநகர்).

(எ-9)


ARCHANA NURSING HOME

அர்ச்சனா வைத்திய நிலையம்

கே.கே.எஸ். வீதி. மல்லாகம்.

Dr. RUKMANI RAJA M.B.B.S (Colombo)

- வெளிநோயாளர் சேவை
- உள்ளக நோயாளர் சேவை
- 24 மணிநேர சேவை
- மகப்பேற்று வைத்திய சேவை
- சகல மருத்துவ பரிசோதனை வசதிகள்

உள்ளக நோயாளர்களுக்கான தங்குமிட வசதிகள் மிகத்தரமான முறையில் செய்யப்பட்டுள்ளன.

(14246)


## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 10 - 06 - 1918



மறைவு 05 - 02 - 2003

### திருமதி தருமலிங்கம் நல்லபிள்ளை

*(கோயில் ஆச்சி)*

எங்கள் அருமைத் தெய்வத்திற்கு
எமது கண்ணீர்த்துளிகள் சமர்ப்பணம்

*இராமநாதன் லேன்,*
*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.*

(14249)

*துயருறும் வாடும் :*
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### திருமதி தருமலிங்கம் நல்லபிள்ளை

(கோயில் ஆச்சி)

புத்தூர் கிழக்கு, வாதரவத்தையைப் பிறப்பிடமாகவும் இராமநாதன் லேன், கோப்பாய் தெற்கு, கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லபிள்ளை தருமலிங்கம் 05.02.2003 புதன்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி நாகமுத்து - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும் மயில்வாகனம் தருமலிங்கத்தின் அன்பு மனைவியும் தவமலர்தேவி (கொழும்பு), சத்தியசீலன் (சுவிஸ்), நந்தினி ஆகியோரின் அன்புத் தாயாரும் சோமசுந்தரலிங்கம் (லக்கி ஸ்ரோர்ஸ், 47, மலே வீதி, கொழும்பு - 02), ராகினி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் திருக்குமரன் (கனடா), சகிலா (கொழும்பு), சுதர்சன் (கொழும்பு), கார்த்திகன் (சுவிஸ்), கார்த்திகா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.02.2003) ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோண்டாவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த.சத்தியசீலன் (மகன்),
நா.சோமசுந்திரலிங்கம் (மருமகன்),
சோ.திருக்குமரன் (பேரன்).

*இராமநாதன் லேன்,*
*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.*

(14250)

### ஏகாதசி உற்சவம்

வடமராட்சி,பெப்.8

வடமராட்சி அருள்மிகு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவிலில் எதிர்வரும் 13 ஆம் திகதி வியாழக்கிழமை வீம ஏகாதசி உற்சவம் நடைபெறும்.

அன்றைய தினம் பகல் அபிஷேக ஆராதனைகளுடன் இரவு முழுவதும் ஏகாதசி புராணபடனம் இடம்பெறும். தொடர்ந்து மறுநாள் காலை துவாதசி உற்சவம் இடம்பெறும். (எ-173)

### புராணப்படிப்பு

வடமராட்சி,பெப்.8

தென்புலோலி சின்னத்தாய்ப் பிள்ளையார் கோவிலில் கந்த புராணப் படிப்பு நேற்று முன்தினம் முதல் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

தொடர்ந்து மூன்று மாதங்கள் வரை கந்தபுராணப்படிப்பு இடம் பெற்று, இறுதி நாளன்று திருக்கல்யாணப் படிப்பும் மறுநாள் அன்னதானம் நடைபெறுவதுடன் நிறைவுறும்.(எ-173)

### தேங்காய் விலை அதிகரிப்பு

சண்டிலிப்பாய்,பெப்.8

சங்கானை சந்தை, பண்டத்தரிப்பு சந்தை ஆகிய சந்தைகளில் தேங்காயின் விலை அதிகரித்துள்ளது.

கடந்தவாரம் 15ரூபாவாக விற்கப் பட்ட தேங்காய் ஒன்று இவ்வாரம் 20ரூபா முதல் 22ரூபா வரை அதிகரித்து விற்கப்படுகின்றது.

இதனால் பாவனையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். (எ-135)


வாழ்த்துகின்றோம்

IIS நிறுவனத்தினரும்
அதன் இயக்குநர்
திரு. K.விக்னேஸ்
அவர்களினதும்
கல்விப்பணி
சிறப்பாகத் தொடர
இன்றைய
7ஆவது நிறுவனதினத்தில்
வாழ்த்துகின்றோம்.

- நலன் விரும்பிகள்

(14243)

ராஜா யாழ்ப்பாணம்.

4 ஆவது வாரமாக

காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30

நாகம்ஸ் சுன்னாகம்.

நாட்டாமை

காட்சிகள் தினசரி: 11.00, 3.00, 6.30 (பி.நே.)

நிறைஞ்சனாஸ் சங்கானை

சூர்யா, ஜோதிகா நடித்த

உயிரிலே கலந்தது

THE MUMMY RETURNS

லக்ஷ்மி இணுவில்

பிரியமானவளே


## நகரில் இன்றும் நாளையும் தமிழ் கணனிக் கண்காட்சி.

தமிழகத்தின் சென்னையில் இயங்கும் வள்ளி மென்பொருள் நிறுவனமும், கொழும்பு, சைபர் மெஹ்றா நிறுவனமும் இணைந்து நாடளாவிய ரீதியில் நடத்தி வரும் 'தமிழ் கணனிக் கண்காட்சி - 2003' தொடரில் இன்றும், நாளையும் யாழ். மத்திய கல்லூரி அரங்கில் தமிழ்க் கணனிக் கண்காட்சியும் விற்பனையும் நடைபெற உள்ளன.

1997 ஆம் ஆண்டு முதல் கடந்த ஆண்டு வரை தொடர்ச்சியாக நடைபெற்ற 5 உலகத் தமிழ் இணைய மாநாடுகள் மூலம் கணனி மற்றும் இணைய தொழில் நுட்பத்தில் தமிழின பயன்பாடும் தமிழ் மென் பொருள் வர்த்தகமும் அதிகரித்துள்ளன. இந் நிலையில் கணனியில் தமிழை வளர்க்கும் முயற்சியாக தமிழ் கணனிக் கண்காட்சி யாழ்ப்பாணத்தில் இலவசமாக நடத்தப்படுகிறது. கணிப்பொறியில தமிழில் எழுத - தமிழால் எழுத - அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தமிழ் கணனித் தட்டெழுத்தான 'சங்கப் பலகை' இக் கண்காட்சியின் சிறப்பமசமாகும். இக் கண்காட்சியில் 'சங்கப பலகை'யை வாங்குபவர்களுக்கு கணனி மென்பொருள்கள் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

இதைத்தவிர மின்னகராதி, யோகாசனம், இலக்கியங்கள், பாலர் பாடல்கள உட்பட பல்வேறு விடயங்களுக்கான மென் தட்டுகள், கணனி தொடர்பான தமிழ் மென்பொருள்கள், வன்பொருள்கள் போன்றவை குறைந்த விலையில் இக் கண்காட்சியில் விற்பனை செய்யப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கண்ணீர் அஞ்சலிகள்

மலர்வு 1919 - 01 - 18



உதிர்வு 2003 - 02 - 05

### அமரர் ராமு சின்னத்துரை

(சிற்றி சலூன் உரிமையாளர் - வெள்ளவத்தை)

*ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்திவிட்டு*
*மீளாத்துயில் கொண்ட*
*எமது அன்புத் தெய்வத்திற்கு*
*எமது இதய அஞ்சலிகள்*

உங்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

*கண்ணகை அம்மன் கோயிலடி,*
*கோப்பாய் மத்தி,*
*கோப்பாய்.*

(14252)

பாசமிகு
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### ராமு சின்னத்துரை

*(சிற்றி சலூன் உரிமையாளர் - வெள்ளவத்தை )*

கோப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ராமு சின்னத்துரை அவர்கள் புதன்கிழமை (05.02.2003) அன்று காலமானார்.

அன்னார் சின்னம்மாவின் அன்புக் கணவரும் அரிய நாயகம் (டென்மார்க்), மனோரஞ்சிதம், ஜெயமணி (இத்தாலி), சாரதாதேவி, செல்வராசா, சேகர், நமேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், நாகேஸ் (டென்மார்க்), கனேசலிங்கம், அமுதமலர், நாகராஜா, ராசமலர், சஞ்சுளா, அற்புதமலர், ஆகியோரின் அன்பு மாமனாரும் டென்மார்க்கைச் சேர்ந்த கிருசாந்தன், கிருசாந்தி, பிரசாந்தன், கஜிந்நன், கஜீந்தினி, கிசோ மற்றும் றசோ, சுகிர்காந்த் (லண்டன்), சுரேஸ்காந், கவிதா, தர்சினி, யுதிசன், விநோத், பிரசாத், துவாரகா, சாரங்கன், சிந்துஜா ஆகியோரின் பேரனும் துஷானிகாவின் (டென்மார்க்) பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (09.02.2003) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கண்ணகை அம்மன் கோவிலடி,*
*கோப்பாய் மத்தி,*
*கோப்பாய்.*

(14251)

தகவல்:-
குடும்பத்தினர்.

### திருமதி செல்லையா புஷ்பவதி

தெல்லிப்பழை, மூர்த்தி வளவைப் பிறப்பிடமாகவும் நாயன்மார்கட்டு, அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா புஷ்பவதி நேற்று (07.02.2003) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையாவின் (ஓய்வுபெற்ற சிறைக்காவலர்) மனைவியும் பேபி, ரஞ்சி, விஜி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.02.2003) சனிக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடையேற்று, பூதவுடல் தகனக கிரியைக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 20 இராமநாதன் வீதி*
*நாயன்மார்கட்டு,*
*அரியாலை.*

(14255)

தகவல்:
கிருஷ்ணபிள்ளை இராஜேஸ்வரி
(மைத்துனி)

### நவரத்தினம் சதாசிவம்

கம்பர்மலையைப் பிறப்பிடமாகவும் கோணாவளை கொருடாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் சதாசிவம் நேற்று (07.02.2003) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் அன்னபூரணத்தின் அன்புக் கணவரும் சகுந்தலாதேவி (பா/கம்பர்மலை ஆ.த.க.பாடசாலை), சாரதேவி (சித்தமருத்துவர்), கோகிலவர்த்தனி (கோப்பாய் ஆசிரியர் கலாசாலை), கனகராஜா (பொறியியலாளர் கொழும்பு), உருத்திரராசா, திரிவிக்கிரமராசா (தொழில்நுட்பக் கல்லூரி), ஆகியோரின் அன்புத்தந்தையும் பாக்கியகுமார், நவீன் ராஜ் (கனடா), அருள்விழி (B.A.) ஆகியோரின் மாமனாரும் மதுர்ஷன், மதுரா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08.02.2003 சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஊரிக்காடு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கம்பர்மலை,*
*கோணாவளை, கொருடாவில்.*

(சி-26429)

தகவல்:
ச.திரிவிக்கிரமராசா
*(மகன்)*

# நெடுந்தீவு கடல் சம்பவம் அரசியல்துறை அறிக்கை

கிளிநொச்சி,பெப்.8

நெடுந்தீவுக் கடலில் இடம்பெற்ற துயரச்சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் அரசியல்துறை தலைமையகம் இன்று அதிகாலை அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

06.02.2003 அதிகாலை வழமை போல் நாச்சிக்குடா பகுதியில் மீன்பிடிக்கச் சென்ற எமது மீன்பிடி வள்ளம் சென்றுகொண்டிருந்தபோது ஏற்பட்ட இயந்திரக் கோளாறால் நெடுந்தீவுக்கு மேற்காக நகரமுடியாது நின்றது. பழுதடைந்து நின்ற மீன்பிடி வள்ளத்தை கரையிலிருந்து சென்ற எமது விரைவுப்படகு நண்பகல் 11 மணியளவில் நாச்சிக்குடா நோக்கி இழுத்துகொண்டுவந்தது. அவ்வேளை அவர்களை நோக்கி ஸ்ரீலங்கா கடற்படையினர் வந்தபோது விரைவுப்படகின் டோறாவுக்கு அருகில் சென்று விவரம் கூறினர். பின்னர் தொடர்ந்து விரைவுப்படகு வள்ளத்தை கட்டியிழுத்துக்கொண்டுவந்தது. மீண்டும் மாலை 3 மணிக்கு கண்காணிப்புக் குழுவினருடன் வந்த மற்றைய டோறா சோதனையிட வேண்டுமென வலியுறுத்தியது. கண்காணிப்புக்குழு கேட்டுக் கொண்டதற்கு அமைவாக கடற்படையினரை மறுத்து கண்காணிப்புக்குழுவினரை சோதனையிட சொல்லப்பட்டது. சோதனையின்பின் ஆயுத தளபாடங்கள் எதுவும் இல்லையென உறுதிப்படுத்தப்பட்டபின்பும் தொடர்ந்து செல்ல கடற்படையினர் அனுமதிக்கவில்லை.

இந்நிலையில் எமது விரைவுப்படகை கரைக்குப் போகும்படியும் தாங்கள் பிரச்சினையை கடற்படையினருடன் கதைத்து சீர்செய்து போராளிகளையும் வள்ளத்தையும் கரைக்குக் கொண்டுவந்து தருவதாக யாழ்.கண்காணிப்புக்குழுவினரால் கிளிநொச்சி அரசியல் தலைமைப் பணிமனைக்கு உறுதிமொழி வழங்கப்பட்டது. நண்பகலில் டோறா அருகில் வந்தபோது, விரைவுப்படகில் இருந்த முன்னணி பாதுகாப்பு ஆயுதம் மீன்பிடி வள்ளத்தில் கழட்டிவைக்கப்பட்டபின்பே விரைவுப்படகு டோறாவுக்கு அருகில் சென்று விவரத்தை கூறியிருந்தது. மாலை கண்காணிப்புக்குழுவினர் வந்தபின்பு அவர்கள் விரைவுப்படகை வள்ளத்திற்கு அருகே செல்ல அனுமதிக்காததால் ஆயுதத்தை வள்ளத்திலேயே விட்டுவிட்டு இரவு எமது படகு கரைக்கு வந்துவிட்டது. மீன்பிடி வள்ளம் தொடர்ந்தும் அவ்விடத்திலேயே நங்கூரம் இட்டு நின்றது.

07.02.2003 அன்று காலை மீண்டும் மீன்பிடி வள்ளத்தை கண்காணிப்புக் குழுவினர் சோதனையிட்டனர். அதன் போது வள்ளத்திலிருந்த விரைவுப் படகின் பாதுகாப்பு முன்னணி ஆயுதத்தை கண்டு விளக்கம் கேட்டபோது, வள்ளத்தில் நின்றவர்களால் விவரம் கூறப்பட்டது. அதை அவர்கள் ஏற்றுக் கொண்டனர். அது விரைவுப்படகின் முன்னணி ஆயுதம் என்பது ஸ்ரீ லங்கா கடற்படையினருக்கும் தெரியும். தொடர்ந்து பெய்த மழையினால் கரைக்கும் வள்ளத்திற்குமான வானொலித் தொடர்பு காலை 8.30 மணியளவில் தடைப்பட்டது. இதற்குப் பின்னர் மீண்டும் கரையிலிருந்து எமது விரைவுப்படகு வள்ளத்தை நோக்கிச் சென்றவேளை டோறாவில் நின்ற கண்காணிப்புக்குழுவினர் கிளிநொச்சி தலைமைப்பணிமனைக்கு காலை 10 மணியளவில் எமது விரைவுப்படகைத் திருப்பி அழைக்குமாறும் தாங்களே வள்ளத்திற்கும் எங்களுக்குமான தொடர்பினை ஏற்படுத்தித் தருவதோடு நிலைமையை சீர்செய்து மூன்று போராளிகளையும் வள்ளத்தையும் கடற்படையினர் தம்மோடு குறிகாட்டுவானுக்கு அழைத்துச் செல்லாதவாறும் எம்மிடம் மீள ஒப்படைப்பதாகவும் காலை 11 மணிக்கு தலைமைப்பணிமனைக்கு ஊடாக எமக்கு அறிவித்தனர். காலை 8.30 மணியளவில் எமக்கும் வள்ளத்திற்குமான தொடர்பு துண்டிக்கப்பட்ட நிலையில் கண்காணிப்புக்குழுவினரின் உறுதிமொழியில் முழுமையான நம்பிக்கை வைத்து வள்ளத்தையும் அவர்கள் பொறுப்பில் விட்டு விட்டு எமது விரைவுப்படகு கரைக்குத் திரும்பிவிட்டது.

இந்நிலையில் அங்கு நடைபெற்ற சம்பவங்கள் யாவும் கண்காணிப்புக் குழுவினருக்கு மட்டுமே தெரியும். மீண்டும் மதியம் 1.30 மணியளவில் கண்காணிப்புக்குழுவினர் கிளிநொச்சி தலைமைப் பணிமனைக்கு ஸ்ரீலங்காவின் நேரப்படி 12.45 மணியளவில் போராளிகள் தம்மை வள்ளத்தோடு சேர்த்து தீயிட்டு கொளுத்திவிட்டதாக தெரியப்படுத்தினர். 06.02.2003 மாலை 3 மணியிலிருந்து எமது மூன்று போராளிகளையும் பொறுப்பேற்ற கண்காணிப்புக்குழுவினரிடம் ஸ்ரீலங்கா கடற்படையினர் வள்ளத்தை சோதனையிட்டாலோ அல்லது குறிகாட்டுவானுக்கு கொண்டுசெல்ல முற்பட்டாலோ போராளிகள் வள்ளத்துடன் சேர்த்து தம்மையும் அழிப்பார்கள் என உறுதியாக தெரிவிக்கப்பட்டிருந்தது. அதற்கு கண்காணிப்புக்குழுவினர் அப்படி ஏதும் நடைபெறாது எனக்கூறி தாமே சோதனையிட்டனர் என்பதும் போராளிகளையும் வள்ளத்தையும் மீண்டும் எம்மிடம் ஒப்படைப்பதாக உறுதியளித்திருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இச்சம்பவத்தில் எமது போராளிகள் மூவர் வீரச்சாவடைந்துள்ளனர். இவர்களுக்கு விடுதலைப்புலிகள் வீரவணக்கத்தை தெரிவித்துக்கொள்கின்றனர் - என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(ஐ)

## பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கையாகும்.

படகுகளில் பயங்கர வெடிபொருள்களும் ஆயுதங்களும் இருந்தமை முழு உலகிற்கும் தெரியவந்துள்ளது.

ஆயுதங்கள் படகின் அடித்தளத்தில் மறைத்து வைக்கப்பட்டிருக்கின்றன.

புலிகளின் இச்செயல் பாரிய யுத்த நிறுத்த மீறலாகும் என அவர் தனது கடிதத்தில் மேலும் தெரிவித்திருக்கிறார்.

(ஓ)

## நெடுந்தீவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளின் படகில் 10 ஆண்களும் 2 பெண்களும் இருந்தமையும் ட்றோலர் படகில் மூன்று ஆண்கள் இருந்ததையும் கடற்படையினர் அவதானித்தனர். இலங்கைக கண்காணிப்பு குழுப்பிரதிநிதிகளின் பிரசன்னத்துடன் விடுதலைப புலிகளின் படகைச் சோதனையிட இலங்கை கடற்படையினர் சில தடவைகள் முயற்சித்த போதும் அவை தோல்வியடைந்தன.

பின்னர் கண்காணிப்பு குழுவினரின் ஆலோசனையின் பேரில் விடுதலைப் புலிகளின் படகும் 12 புலிப் போராளிகளும் விடுவிக்கப்பட்டனர். விடுதலைப் புலிகளின் படகில் போர்த தளபாடங்களோ அல்லது வெடிபொருளகளோ இல்லை என்று காணிப்பு குழு உறுதிப்படுத்தியது. ஆயினும் ட்றோலர் படகை மேலிடத்து உத்தரவு வரும் வரை கண்காணிப்பு குழுவினரால் சோதனையிட முடியவில்லை. கடந்த 7ஆம் திகதி (நேற்று) காலையில் இலங்கை கடற்படையினர் அனுமதிக்கப்படாத நிலையில் ட்றோலர் படகை கண்காணிப்பு குழுவினர் சோதனையிட்டனர். இதில் 23 மில்லி மீற்றர் சுடுகுழல் ஒன்றும், 23 மில்லி மீற்றர் துப்பாக்கியின் பிளந்த பகுதி ஒன்றும், 23 மில்லி மீற்றர் ரவைகள் இரண்டு பெட்டிகள், ஏகே - 47 துப்பாக்கி ஒன்று, 3 கிரனேட்டுக்கள், 23மில்லி மீற்றர் ஆயுதத்தின் சில உதிரிப்பாகங்கள் மற்றும் சங்கிலித தொடுப்பு, வானொலி தொலைத் தொடர்புக் கருவி ஒன்று ஆகியவை கண்டு பிடிக்கப்பட்டன. அதன் பின்னர் படகிலிருந்து விடுதலைப் புலிப்போராளிகள கண்காணிப்பு குழு உறுப்பினர்களை ட்றோலர் படகிலிருந்து குதித்து வரும்படி கேட்டுக் கொண்டனர். அத்துடன் ட்றோலர் படகுக்கு தீவைத்து போராளிகள் தற்கொலை செய்து கொண்டனர் என்றுள்ளது.

# யாழ். ஆஸ்பத்திரியில் மீண்டும் பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை

யாழ்ப்பாணம்,பெப்.8

யாழ். ஆஸ்பத்திரியில் எதிர்வரும 14ஆம் திகதி தொடக்கம் 28ஆம் திகதி வரை மீண்டும் பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கென லண்டனிலிருந்து பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் சார்ள்ஸ் விவேகானந்தன் தலைமையிலான குழுவொன்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளது என்றும்-

சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ள நோயாளிகள் எதிர்வரும் 11ஆம் திகதி தொடக்கம் 14ஆம் திகதி வரையும் வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவில் உள்ள சத்திரசிகிச்சைக் கூடத்தில் பதிவு களை மேற்கொள்ளலாம் என்றும் வைத்தியசாலைப் பணிப்பாளர் எஸ்.சதுர்முகம் அறிவித்துள்ளார்.

இந்த மருத்துவர்கள் குழு கடந்த ஆண்டிலும் இங்கு வருகை தந்து சத்திரசிகிச்சைகளை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(எ-10)


IIS

INVITATION

The Director, Course Director and Staff of the IIS cordially invite our patrons, well wishers, friends, parents and students.

to the

7th Institute Day

celebration

at the

Jubilee hall.

St. Johns' college, Jaffna

on

Saturday 8th February 2003 at 9.00 am.

Institute of informatics studies
100.clock tower road, Jaffna.


நிரந்தர நியமனம் பெறவுள்ள

# தொண்டர் ஆசிரியர் பட்டியல் அடுத்த வாரம் வெளியிடப்படும்

யாழ்ப்பாணம்,பெப்.8

வடக்கு - கிழக்கில் நிரந்தர நியமனம் பெறவுள்ள ஆயிரம் தொண்டர் ஆசிரியர்களின் பெயர்ப்பட்டியல் அடுத்த வாரம் மாகாணக்கல்வி அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பொதுச்சேவை ஆணைக்குழுவின செயலாளர் ரி.எம்.எம்.தென்னக்கோன இதுபற்றி தனக்குத் தெரிவித்ததாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் த.மகாசிவம் தெரிவித்துள்ளார்.

தமக்கு நிரந்தர நியமனம் வழங்குவதில் தொடர்ந்தும் தாமதம் காட்டப்பட்டு வருவதைக் கண்டித்துத் தொண்டர் ஆசிரியர்கள் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபடுவதற்கான முஸ்தீபுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் தென்னக்கோனுடன் தொடர்புகொண்டு பேசியபோது அடுத்த வாரம் இது தொடர்பான பணிப்புரையையும் பெயர்ப்பட்டியலையும் மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளர் ரி.தியாகலிங்கத்துக்கு அவர் வழங்கவுள்ளதாகக் கூறியதாக மகாசிவம் மேலும் தெரிவித்தார்.

(ஓ-10)

# இலங்கைக்குப் புதிய தூதுவரை அனுப்ப அமெரிக்கா தீர்மானம்

கொழும்பு,பெப்.8

இலங்கைக்குப் புதிய தூதுவர் ஒருவரை அமெரிக்கா அனுப்புகிறது. புதிய தூதுவராக ஜெப்ரி லன்ஸ் டட நியமிக்கப்படவிருக்கிறார் என்று வாஷிங்டனில் நேற்று அறிவிக்கப்பட்டது.

தற்பொழுது அமெரிக்க ராஜாங்க திணைக்களத்தில் சுற்றாடல் தொடர்பான பணிப்பாளராகப் பணியாற்றும் ஜெப்ரியை இலங்கைக்கான புதிய தூதுவராக நியமிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தீர்மானித்திருக்கிறார் எனவும் அறிவிக்கப்பட்டது. அவர் மாலைதீவுக்கான தூதுவராகவும் பணியாற்றுவார்.

இவர் முன்னர் ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் ராஜதந்திரியாகக் கடமையாற்றியிருக்கிறார்.

தற்போது இலங்கையில் அமெரிக்கத் தூதுவராக அஸ்லி வில்ஸ் இருந்து வருகிறார்.

(ஓ)

# அடையாள அட்டையைத் தொலைத்தால் புதிதாகப் பெற கட்டணம் 500 ரூபா

கொழும்பு,பெப்.8

தேசிய அடையாள அட்டை தொலைந்தால் புதிய அடையாள அட்டை பெற 500 ரூபா கட்டணம் செலுத்த வேண்டும். இதுவரை இக்கட்டணம் 15 ரூபா மட்டுமே.

புதிய அடையாள அட்டை வழங்குவதற்கான கட்டணத்தை 500 ரூபாவாக அதிகரிக்க உள்துறை அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் விஜயரணசிங்க இத்தகவலைத் தெரிவித்திருக்கிறார்.

முதல் தடவை தேசிய அடையாள அட்டை தொலைந்தால் புதிய அடையாள அட்டையைப் பெற 500 ரூபா செலுத்த வேண்டும். இரண்டாவது தடவை தொலைந்து மீண்டும் விண்ணப்பித்தால் ஆயிரம் ரூபா கட்டணம் அறவிடப்படும்.

இவ்வாறு கட்டணங்களை அறவிட உத்தேசிக்கப்பட்டிக்கிறது என்றும் அவர் சொன்னார்.

கவனயீனத்தால் தேசிய அடையாள அட்டையைத் தொலைப்போர் எண்ணிக்கை அதிகரிப்பதே கட்டணங்கள் இவ்வாறு அதிகரிக்கப்படவிருப்பதற்கான காரணமாகும் எனவும் அவர் கூறினார்.

(ஓ)

## ஜனாதிபதி - பிரதமர் ரூபவாஹினியில்

சமாதான முன்னெடுப்புகள் பற்றி தமது கருத்துக்களைத் தெரிவிக்கும் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கலந்து கொள்கின்றனர். ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் 'ஐ' அலைவரிசையில் இன்று இரவு 7.45 மணிக்கு திருப்புமுனை நிகழ்ச்சியில் இது இடம்பெறுகிறது.

(ஓ)


RAM CO CEMENT

ராம்கோ சிமெந்து

தற்பொழுது ராம்கோ சிமெந்து பருத்தித்துறை இறங்கு துறையில் இறக்கப்படுகின்றது. சிமெந்து தேவைப்படுவோர் கீழ்க்காணும் விலாசத்துடன் தொடர்புகொள்ளவும்.

ராம்கோ சிமெந்து ஏக இறக்குமதியாளர்

ஈஸ்வரபகவான் கொம்பனி

91, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(14212) T.Phone: 021- 222 2350

தென்னிந்தியாவில் இருந்து



முதல்முறையாக யாழ்ப்பாணம் என்னும் புண்ணிய பூமிக்கு வருகை தந்துள்ள பரம்பரை சோதிடக் கலையில் புகழ்பெற்ற சிவபால ஜோதிடர்

ராஜகுருசாமி அவர்கள்

★ கைரேகை ★ ஜாதகம் ★ எண்கணிதம்
★ பெயர்ராசி ★ திருமணப்பொருத்தம்

இவற்றில் பலவருட அனுபவமும் புகழும் பெற்றவர்.

ராஜகுருசாமி

மிலேனியம் மல்ரி கொம்பிளக்ஸ்

60/1 (112), TEMPLE ROAD [Near ICRC], JAFFNA.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.02.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.